**Mierra Gems & Jewellery**
லண்டனில் பொற்கைவண்ணர்களின் நிர்வாகத்தில் இயங்கும் ஒரே நகை மாடம்
மீரா ஜுவல்லரி மார்ட்
34, London Road, Tooting,
London SW17 9HP
Tel: 020 8648 7750 / 07958 948 685

A Freely Circulated Monthly

# புதினம்
PUTHINAM

மலர் 16 FEBRUARY 2014 இதழ் 9

**HOMOEO CARE**
லண்டனில் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்
டாக்டர். தியாகராஜன்
020 8144 1553

**SNM PAWN BROKERS**
அனைத்து தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.

**MITHUS JEWELLERS**
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

# மீண்டும் வருவார்!



'விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மீண்டும் வருவார். அவர் தலைமையில் சுதந்திரம் கிடைக்கும்!

-இப்பொழுது இப்படித் தமிழ் நாட்டில் வெளிப்படையாக முக்கிய தலைவர்களால் பேசப்பட்டு வருகிறது: சாதாரண மக்கள் மத்தியிலும் இந்த விவகாரம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

*- தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா அலசுகிறார்*

*7ம் பக்கம் பார்க்க*

**தமிழினி** பத்திரிகையின் **20வது ஆண்டு விழா**

**குழந்தைகள், சிறுவர்கள் தங்கப் பதக்கங்கள் வெல்வதற்கான ஆடல், பாடல் போட்டிகள்**

சித்திரை மாதம் 12ம் நாள் சனிக்கிழமை நடைபெறவுள்ள தமிழினி செய்திப் பத்திரிகையின் 20 வது ஆண்டு விழாவில் குழந்தைகள் சிறுவர்களுக்கான ஆடல் பாடல் போட்டிகள் இடம் பெறவுள்ளன. 11 வயதிற்கு குறைந்தவர்கள், 16 வயதிற்கு குறைந்தவர்கள் என இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெறுபவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் பதக்கங்கள், ஏனைய போட்டியாளர்களுக்கு விருதுகள் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. போட்டி முடிவு திகதி 28,02,2014

**நீங்கள் விரும்பிய பாடல்களையும், ஆடல்களையும் தெரிவு செய்யலாம்**

உங்கள் பெயர் - பிறந்த திகதி - முகவரி - பெற்றோர் விபரம் - பயிலும் பாடசாலை - கலந்து கொள்ள விரும்பும் போட்டி - உங்கள் பெற்றோரின் தொலைபேசி / மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றோடு உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உங்கள் விண்ணப்பங்களை : tkpublish@yahoo.com அல்லது 02085428666 என்ற தொலை நகல் இலக்கத்திற்கு அல்லது
THAMILINI NEWS PAPER, 90 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BT
என்ற முகவரியில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

முதற்கட்டப் போட்டியில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் ஆறு பேர் தெரிவு செய்யப்படுவர். இறுதிக் கட்டப் போட்டிக்கான தெரிவு பார்வையாளர்களின் வாக்குக்களால் தீர்மானிக்கப்படும்

**Hindu Tamil Cultural Association (Enfield)**
இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)
தமிழ் மொழி, இந்து சமயம், தமிழரின் கலை கலாசாரம் என்பவற்றை பேணுவதையும் வளர்ப்பதையும் ஒரே நோக்காக கொண்ட தொலைக்காட்சி
அம்பாள் தொலைக்காட்சி
Deepam IPTV Box, Aarti TV Box,
Cloud Media IPTV Box,
Thisai Media IPTV Box
Ambaal TV
www.ambaal.org
தொடர்புகளுக்கு: 0208 884 3333
ambaaltv@ambaal.org

விரைவில் உங்கள் கைகளில்...
**தமிழன்**
பத்திரிகையாளனின் அனுபவ முத்திரை பனிச்சிட உலகத்தமிழர்களுக்காக ஒரு தமிழ்ச் சஞ்சிகை

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
**LAKSHMIS JEWELLERS**
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
**E.K.Rajagopal**

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
**PUTHINAM**
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 16 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



## சங்கானையில் வீடு விற்பனைக்கு



யாழ்ப்பாணம் சங்கானையில் CHURCHROADஇல், சுற்று மதில் போடப்பட்ட காணி, வீடு விற்பனைக்கு உண்டு. லண்டனில் உரிமையாளருடன் பேசி, விபரங்களைக் கேட்டறியலாம்.
**Phone: 07852647957**

## லண்டனில் தமிழக ஜோதிடர்

பிரபல தமிழக ஜோதிடர், சாஸ்திரியார் திருச்சி தில்லை நடராஜர் லண்டனில் ஸ்ரோன்லி, நியூமோல்டனில் தங்கியுள்ளார். உங்கள் பிறந்த திகதியைக் கொண்டு 5 நிமிடத்தில் குறிப்பு எழுதி, கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம், படிப்பு, தொழில், திருமணம், அதிர்ஷ்டம் போன்றவற்றை தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்வார்.
**0796 0734968 - 0741 559790**

அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி., திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

## ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
21வது ஆண்டாக நடாத்தும்

## கானக்குயில் 2014

நாள் : 28.6.2014 - 6.00 மணிக்கு
போட்டியில் பங்குபெற உங்கள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

பால கானக்குயில்
12 வயதிற்குள்

இளைய கானக்குயில்
16 வயதிற்குள்

கானக்குயில்
17 வயதிற்கு மேல்

விண்ணப்ப முடிவு திகதி : 1 மார்ச் 2014
போன் : 02034898309 செல் : 07903327708
Email : arumthill@hotmail.com

## நாங்களும்! நீங்களும்!

உங்கள் ஆதரவு இமயம் என்றால் எங்கள் சேவை இமயத்தின் சிகரம். ஏ-லங்கா ரவல் விமானப்பயணிகள் பொதுவாகக் கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள்

- கடவுச் சீட்டுகளும் கட்டுப்பாடுகளும் ✓
- விசா விபரங்களும் விதிமுறைகளும் ✓
- பிரயாணிகளின் [illegible] வசதிகளும் ✓
- சிசு-சிறுவர்களும் சின்ன சின்ன விடயங்களும் ✓
- இடைநிறுத்தல்களும் அவசர நேரங்களும் ✓
- தரிப்பிடங்களும் தங்குமிட வசதிகளும் ✓
- பொதிகளின் அளவுகளும் பொருத்தங்களும் ✓
- முதியவர்களும் முக்கியமான தேவைகளும் ✓
- திகதி மாற்றங்களும் [illegible] ✓
- தொப்புள்கொடி உறவுகளும் தொடர்பான சேவைகளும் ✓
- தாமத தகவல்களும் தகுந்த ஆலோசனைகளும் ✓
- [illegible] உபாதைகளும் உத்தரவாதங்களும் ✓
- இரத்து செய்தலும் கழிவுக்கொடுப்பனவுகளும் ✓
- பிரயாணத்தின் இலவச நீட்டல்களும் குறுக்கல்களும் ✓

உங்கள் தேவைகள் எமது சேவைகள் 100 %

1. திருப்தியான வழிநடத்தல்
2. நியாயமான விலைகள்
3. பொருத்தமான ஆலோசனைகள்
4. சிநேகபூர்வமான சேவைகள்
5. இனிய தமிழில் இலகுவான கலந்துரையாடல்



சேவையே எமது சிந்தனை

ஏ-லங்கா ரவல், ஏரோ லங்காவின் (யாழ்ப்பாண சேவை) பிரித்தானியாவின் ஏக முகவர்.

A-Lanka Travel Ltd
*We make it easy to take it easy*
171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
**020 8672 5551, 020 8672 2010**

## 24 Hour Emergency Crime & Immigration
Adikalamuthu Ilanchelian
solicitor & Commissioners for Oaths

# 07939 474 342

- Immigrations Related
- Applications and Appeals
- Immigration
- EEA Law
- Entry Clearance
- Human Right claims
- Asylum Claim
- British Citizenship and Nationality
- Detention and Deportation
- Judicial review







## MALIK & MALIK Solicitors
234-236 High Road, London NW10 2NX
Adaikalamuthu Ilanchelian
SOLICITOR

Tel : 0208 830 3050 / 07939 474 342









# கருணாநிதியின் குடும்ப வாரிசுகளால் தி.மு.க.வுக்கு இழப்புகளே அதிகம்!

மூத்த பத்திரிகையாளர் ஞாநி

இந்தியாவில் வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத 'பெருமை' திமுகவுக்கு இருந்து வருகிறது. மீதிக் கட்சிகளில் எல்லாம் பல கோஷ்டிகள் இருப்பார்கள். ஒவ்வொரு கோஷ்டியின் தலைவரும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார். தி.மு.க.வுக்கு மட்டும்தான் இருக்கும் எல்லாக் கோஷ்டிகளும் தலைவர்களும் ஒரே குடும்பத்திலிருந்து வந்தவர்கள். கட்சிக்குள் வேறு கோஷ்டிகளே கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை சுமார் 20 ஆண்டுகளாகப் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கும் பல நோய்களில் ஒன்றான சகோதர யுத்தம் முடிவுக்கு வருகிறது. வாலி மீது ராமன் மறைந்திருந்து அம்பு எய்து சுக்ரீவனுக்கு உதவியதுபோல அல்லாமல், ஸ்டாலினுக்கு உதவியாக, கருணாநிதி நேரடியாகவே அம்பை அழகிரி மீது எய்ய ஆரம்பித்திருக்கிறார்.

## தி.மு.க–வின் பெருமை

இந்தியாவில் வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத ஒரு 'பெருமை' தி.மு.க–வுக்கு இருந்து வருகிறது. மீதிக் கட்சிகளில் எல்லாம் பல கோஷ்டிகள் இருப்பார்கள். ஒவ்வொரு கோஷ்டியின் தலைவரும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார். தி.மு.க.வில் மட்டும்தான் இருக்கும் எல்லா கோஷ்டிகளின் தலைவர்களும் ஒரே குடும்பத்திலிருந்து வந்தவர்கள். கட்சிக்குள் வேறு கோஷ்டிகளே கிடையாது.

வைகோ, கட்சியிலிருந்து வெளியேறிய பிறகு, ஸ்டாலினுக்குப் போட்டியாக எந்தத் தலைவரும் இல்லாத நிலையில், அவருடைய சகோதரர் அழகிரியே போட்டியாக உருவானதற்குக் காரணம் இருவரின் தந்தையும் கட்சித் தலைவருமான கருணாநிதியேதான். பள்ளி, கல்லூரி நாட்களிலிருந்தே கட்சியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தவர் ஸ்டாலின். ஆனால், அழகிரி அப்படித் தீவிரமாக ஈடுபட்டதில்லை. 1976–ல் நெருக்கடி நிலையின்போது இந்திரா அரசு தி.மு.க–வினர் மீது கடும் நடவடிக்கை எடுத்த போது, கருணாநிதி குடும்பத்திலிருந்து கைது செய்யப்பட்ட ஒரே நபர் ஸ்டாலின்தான். அப்போது அவருக்கு வயது 24. அவரை விட இரண்டு வயது மூத்தவரான அழகிரியை இந்திரா அரசு அரசியல் ரீதியாக ஒரு முக்கியமான நபராகக் கருதிக் கைதுசெய்யும் அவசியமே அப்போது இருக்கவில்லை.

## வாரிசுகள் வரலாறு

ஒரு தந்தையாக கருணாநிதி, அழகிரியை எப்படிக் கையாள்வது என்பதில் செய்த தவறுகளும் குழப்பங்களும் தான் தி.மு.க.வையே பாதிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டிருக்கின்றன. நல்ல பாடகராக வந்திருக்கக் கூடிய முதல் மகன் முத்துவை தேவையில்லாமல் எம்.ஜி.ஆருக்குப் போட்டி நடிகராகக் கொண்டு வர கருணாநிதி செய்த முயற்சிகள் முத்துவின் வாழ்க்கைப் பயணத்தையே தடம் புரளச் செய்தன. அதே போன்ற இன்னொரு தப்பைத் தான் அழகிரி விஷயத்திலும் அவர் செய்தார். சென்னையில் அழகிரியைச் சமாளிக்க முடியாமல் சிங்கப்பூருக்கு அனுப்பினார். பின்னர் திரும்பி வந்தவரை மதுரையில் முரசொலி பதிப்புக்குப் பொறுப்பாளராக அனுப்பினார். சில ஆண்டுகளில் அந்தப் பதிப்பே மூடப்பட்டுவிட்டது. ஆனால் அழகிரி மதுரையில் தி.மு.க. பிரமுகராக நிலைபெற்றுவிட்டார். அழகிரிக்காகக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை அங்கே கருணாநிதி ஓரங்கட்டவேண்டி வந்தது. அரசியல் ரீதியாக கருணாநிதிக்கு உதவிகரமாக இருந்த அவரது மகன்கள் என்று தமிழரசுவையும் ஸ்டாலினையும்தான் குறிப்பிடலாம். தமிழரசு, அரசியலுக்குள் வராமல் இருப்பதன் மூலம் உதவி செய்தவர். ஸ்டாலின் தொடர்ந்து 40 ஆண்டுகளாகக் கட்சிப் பணியைச் செய்துவந்திருப்பவர்.

'ஸ்டாலின் தலைமையை ஏற்றுக் கொண்டு பேராசிரியர் அன்பழகன், ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் முதலான சீனியர்கள் எல்லாம் கட்சியில் செயல்படத் தயாராக இருக்கும்போது, நீயும் அப்படிச் செய்வதாயிருந்தால் கட்சியில் இரு' என்று அழகிரியிடம் மட்டும் கருணாநிதியால் சொல்லவே முடியவில்லை. அரச வம்சத்தில் இரு சகோதரர்களில் மூத்தவன் இருக்கும்போது இளையவனுக்கு எப்படி மகுடம் சூட்டுவது என்று குடும்பத்துக்குள் ஏற்படும் எதிர்ப்புக்கு நிகரானதாகவே இந்த விஷயமும் கருணாநிதி குடும்பத்துக்குள் இருக்கிறது. அதற்குப் பலியானது ஜனநாயக அமைப்பில் இயங்கும் தி.மு.க. என்ற கட்சிதான்.



தி.மு.க தலைவர் கருணாநிதிக்கும், அவரது மகன் அழகிரிக்கும் இடையில் கோபாலபுரத்தில் உள்ள கலைஞரின் இல்லத்தில் 24.01.2014 காலை 7 மணி - 8 மணிக்கிடையில் நடந்த வாக்குவாதத்தை அடுத்து உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். கலைஞரின் மனைவி தயாளு அம்மையாரின் மூத்த புதல்வர் அழகிரி. ஸ்டாலின் ஒரே வயிற்றில் பிறந்த அவரது தம்பி.

அழகிரிக்குச் சார்பாகக் குடும்பத்துக்குள் வலிமையாக ஒலிக்கும் குரல் அவரது தயார் தயாளு அம்மையாருடையது என்று பல நிகழ்வுகளின்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஒரு கணவனாக, ஒரு தந்தையாக இந்தக் குரலுக்குச் செவிசாய்த்ததன் விளைவாகக் கட்சிக்குத் தேவையற்ற, கட்சியைப் பலவீனப்படுத்திய ஒரு சகோதர யுத்தத்துக்கு கருணாநிதி தொடர்ந்து வித்திட்டு வளர்த்து வந்திருக்கிறார். இதை ஊக்குவித்ததன் அடுத்த விளைவாக அரசியலுக்கு வருவதில் ஆர்வமில்லாமல், அவருடைய இலக்கிய வாரிசாக மட்டுமே உருவாகிவந்த மகளையும் இதற்குள் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உண்மையில், கலைஞரின் அசல் அரசியல் வாரிசான, மனசாட்சியான முரசொலி மாறனின் அகால மரணத்துக்குப் பிறகு, அவருடைய குடும்பத்திலிருந்தும் ரத்த வாரிசை அரசியலுக்குக் கொண்டு வந்து மொத்தமாக தி.மு.க. என்ற இயக்கத்தைச் சிதைக்கும் போக்குக்கே கருணாநிதி வழிவகுத்தார்.

## வாரிசுகளின் சாதனை

கருணாநிதியின் குடும்ப வாரிசுகளால் தி.மு.க.வுக்கு ஏற்பட்ட லாபத்தை விட, இழப்புகளே அதிகம். கனிமொழி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஸ்பெக்ட்ரம் ஊழல்தான் சென்ற தேர்தலில் தி.மு.க.வைச் சரிவை நோக்கித் தள்ளியது. தயாநிதி மாறன் – கலாநிதி மாறன் குடும்பத்துடன் நடந்த சன் டி.வி. பங்குச் சண்டை, டெல்லி மன்மோகன் அரசின் மந்திரி சபை உருவாக்கம் வரை நீரா ராடியா டேப்களில் எதிரொலித்தது. முறைகேடாக டெலிபோன் 'எக்சேஞ்ச்' நடத்திய வழக்கு இப்போது சி.பி.ஐ. வசம். அழகிரியின் ஆதரவு சக்திகள் எல்லாம் கிரானைட் முதல் நிலப்பறிப்பு வழக்கு வரை சிக்கியிருக்கிறார்கள். வேறு எந்த மத்திய கேபினட் அமைச்சர் பற்றியும் அவருக்குக் கீழே உள்ள அமைச்சரே பிரதமரிடம் புகார் செய்த வரலாறு இல்லை. அழகிரி அந்த வரலாற்றைச் சாதித்திருக்கிறார். ரூ.1,000 கோடி இழப்புக்கு அழகிரி காரணம் என்று புகார் செய்த ராஜாங்க அமைச்சர் ஜெனா, அழகிரி விலகியபின் முழுப்பொறுப்புள்ள அமைச்சராக்கப்பட்டார்.

## காலம் தாழ்த்திய முடிவு

ஓராண்டு முன்னர்தான் முதல்முறையாக, தனக்குப் பின் ஸ்டாலின்தான் என்ற நிலையைப் பகிரங்கமாக அறிவித்தார், தானே ஸ்டாலினை முன்மொழிவேன் என்றார். இதை அவர் 1996–லேயே செய்திருந்தால் (அப்போது கருணாநிதிக்கு வயது 72. ஸ்டாலினுக்கு வயது 44.) தி.மு.க. பல சரிவுகளிலிருந்து தப்பித்திருக்கும். காலம் தாழ்த்தி அவர் எடுத்த முடிவு, பெருவாரியாகக் கட்சிக்குள் வரவேற்பையே பெற்ற முடிவு. எப்போதுமே கட்சி ஸ்டாலின் பக்கமே இருந்துவந்திருக்கிறது, அழகிரியுடன் அல்ல. தேர்தல் சமயத்தில் அழகிரி போர்க்கொடி தூக்குவது கட்சியைப் பாதிக்கலாம் என்ற பயம் கட்சியில் சிலருக்கு இருக்கிறது. அழகிரி, தொண்டர்களை அரவணைப்பவர் என்ற சொல்லப்படுகிறது. இன்றைய அரசியலில் அரவணைப்பது என்றால் என்ன? தனக்கான ஒரு அடியாள் கூட்டத்தை வைத்துக்கொள்வதோ, தனக்கு வரும் லாபத்தில் எல்லாருக்கும் பங்குகொடுப்பதோ அரசியல் ஆகுமா? நிலப்பிரபுத்துவ, மாஃபியா இலக்கணங்களை எல்லாம் நாம் அரசியல் நெறிமுறைகள் ஆக்கிவிட்டோம். உண்மையில், அழகிரிக்கும் ஸ்டாலினுக்கும் எந்தக் கொள்கைச் சண்டையும் இல்லை. அழகிரி அப்படி சித்தாந்தரீதியிலோ கொள்கைரீதியிலோ இதுவரை எந்தச் சண்டையும் போட்டதாக வரலாறும் இல்லை. காங்கிரஸுடன் கூட்டணி வேண்டுமா, வேண்டாமா என்பதோ, தே.மு.தி.கவுடன் உறவு வேண்டுமா, கூடாதா என்பதோ இதில் அசல் பிரச்சினையே இல்லை. அ.இ.அ.தி.மு.க. தவிர, வேறு யாரோடும் எப்போதும் கூட்டணி வைக்கத் தேவையான நியாயங்களையும், கூடாது என்பதற்கான நியாயங்களையும் அவ்வப்போது எடுக்கும் முடிவுக்கேற்பச் சொல்வதில் பழுத்த அனுபவம் உடையவர் கருணாநிதி. தேவையென்று கருதினால், அவர் அ.இ.அ.தி.மு.க–வுடன் கூட கூட்டணி வைத்து அதை உடன்பிறப்புகள் ஒப்புக் கொள்ளும் விதத்தில் நியாயப்படுத்தக் கூடியவர்தான்.

அழகிரியின் பிரச்சினை அவருடைய தனிப்பட்ட பிரச்சினை மட்டுமே. அதில் அரசியல், சித்தாந்தம் ஏதுமில்லை. இப்போது கருணாநிதி எடுத்துவரும் உறுதியான முடிவுகள் தொடருமானால் அழகிரி செய்யக் கூடியவை மூன்றுதான். ஸ்டாலின் தலைமையை ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து அரசியலில் நீடிக்கலாம். அதை ஏற்காமல் வெளியேறிக் கட்சியை உடைக்க முயற்சித்து, வேறு கட்சிகளில் இணையலாம். அரசியலிலிருந்தே ஓய்வு பெற்றுத் தனக்குப் பிடித்தமான வேறு துறை சார்ந்த பணிகளில் ஈடுபடலாம். முதல், கடைசி வழிகள் மட்டுமே அவருக்குப் பயன்தரக்கூடியவை. ■


AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS
020 8540 1500, 020 8903 3300
020 8543 4342, 020 8543 4477
VTV PRODUCTION
STARRING: SIMBU, ANDREA, VTV GANESH
MEERA JASMINE, SANTHANAM
ENGA ENNASOLLUDHU
CHILDREN WILL BE ALLOWED
WRITTEN & DIRECTION : V. SELVA MUSIC : DHARAN KUMAR
FROM THU 30TH JAN - CINEWORLD CINEMAS
ILFORD, WANDSWORTH, FELTHAM, WEMBLEY
STAPLES CORNER, MILTON KEYNES
ADVANCE BOOKING : http://www.cineworld.co.uk OR CALL - 0871 220 1000
ODEON CINEMAS-
ODEON COVENTRY - SAT MAIN EVENING / SUN MAT
ODEON LEEDS - BRADFORD - SAT MAIN EVENING
ADVANCE BOOKING : http://www.odeon.co.uk OR CALL - 0871 22 44 007
HARROW SAFARI - FRI 31ST AT 8.00PM
SAT 1ST FEB @8.00PM, SUN 2ND FEB @5.00PM
ADVANCE BOOKING: http://www.safaricinema.com OR CALL - 020 8426 0303 / 0606
FOR FURTHER DETAILS : 020 8540 1500, 020 8903 3300. SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD.
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com



# விமலின் பக்கம்

உலக நாயகன் என்று புகழப்படும் நடிகர் கமலஹாசன், தமிழ்த் திரையுலகிற்குக் கிடைத்த உன்னத நடிகர். அவர் நடித்த படங்கள் எல்லாமே ஒன்றையொன்று மிஞ்சியவை. கமலை எனக்கு மிகவும் பிடிக்கும். அவரது நடிப்புக்காக மட்டுமல்ல, சில படங்களில் அவ்வப்போது அவர் உதிர்க்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளுக்காகவும் பிடிக்கும்.



மிக ஆசாரமான வைதீகக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஈ.வெ.ரா.பெரியாரின் பேச்சுக்கள், நூல்கள் என்று அவற்றின் நிழலில் வளர்ந்தவர் கமல்! இதனால் தான் வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் சமூக அவலங்களைக் கிண்டலடிக்கிறார்.

ஒரு சின்ன உதாரணம் : சுமார் இருபது வருடங்களுக்கு முன் வெளியான 'நம்மவர்' என்ற படத்தில் புரட்சிகர சிந்தனையுள்ள ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக கமல் நடித்திருந்தார். கௌதமி அவரது ஜோடி.




தங்கள் நகரத்தில் (ஏன் முழுத் தமிழ்நாட்டிலுமே) மூலைக்கு மூலை, தெருவுக்குத் தெரு ஆலயங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய கமல், சிறுநீர் கழிக்க (டாய்லெட்) கழிப்பறைகளே தெருக்களில் இல்லை என்பதை நகைச்சுவையாக, ஆனால் ஆத்திரத்துடன் அந்தப் புரட்சிகர ஆசிரியர் கதாபாத்திரம் மூலம் சுட்டிக் காட்டினார்.

தன் இரு கரங்களையும் கூப்பியபடி கமல் சொல்வார் "சார் எனக்கு மிக மிக அதிகமாகப் பக்தி வந்து விட்டது. அவசரமாக நான் கோயிலுக்குப் போக வேண்டும். அருகில் கோயில் எங்கே இருக்கிறது?" என்று யாருமே கேட்பதில்லை. மாறாக இயற்கை உபாதையைத் தணிக்கச் சிறுநீர் கழிக்க வசதிகளே ஊரில் இல்லை. அப்புறம் தெருவுக்குத் தெரு கோயில்கள் ஏன்? என்று கமல் கூறிய வசனங்கள் என்னைப் போன்றவர்களிடம் 'சபாஷ்' பெற்றன. ஆனாலும் ஒரு சில விமர்சகர்களின் கண்டனங்களையும் சம்பாதித்தன.



கமல் குறிப்பிட்ட 'சமூகக் குறைபாடு' தமிழ்நாட்டுக்குப் போய் வரும் உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். வரம்புகளைத் தகர்த்து பெருகி வரும் இந்திய ஜனத் தொகை, இந்தக் கழிப்பிடப் பற்றாக் குறையால் பெரும் பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறது.

கமல் சுட்டிக் காட்டிய அந்தப் பிரச்சனையை பாரதீய ஜனதாவின் பிரதமர் பதவி வேட்பாளர் மோடி கையில் எடுத்திருக்கிறார். அந்தக் கட்சி இந்து சமய மதவாதக் கட்சியாக இருந்தும் கூட மோடி சொல்கிறார் :

"புதிதாகக் கோயில்களைக் கட்டாதீர்கள். கழிப்பிடங்களைக் கட்டுங்கள்"

கழிப்பிடங்கள் பற்றாக் குறையை விடுங்கள். கழிப்பிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய வணிக வளாகங்கள் **(Shopping Complex)** புதிய கழிப்பிடங்கள் கொண்டவை. இருக்கும் கழிப்பிடங்களும், இல்லாத கழிப்பிடங்களும், மிக மோசமாக, அலங்கோலமாக காட்சி தருவது பற்றி கமல் பேசவில்லை; தலைவர் மோடி கூறவில்லை; நான் எழுத விரும்பியதைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் பல வாரங்களுக்கு முன் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார்.

TOILET USAGE - அதாவது ஒரு கழிப்பிடத்தை எப்படிப் பயன்படுத்துவது என்ற விஷயம் பற்றித் தமிழக மக்கள் பலருக்கு அறிவு போதாது, இது பற்றி அரசு அறிவூட்ட இருக்கிறது.

ஒரு முதல்வரின் அரசியல் நிர்வாகத்தில் அன்றாடம் பல நூறு பிரச்சனைகளுக்கு மத்தியில், தன் மக்களின் இந்தக் குறைபாட்டை இனம் கண்டு, அதை அவர் அறிவித்திருப்பதிலிருந்து, எனக்கு ஒரு விஷயம் தெளிவாகியது: முதல்வர் ஜெயலலிதா அவர்களை தமிழக மக்கள், தெய்வம் என்றும் 'அம்மா' என்றும் ஏன் அழைக்கிறார்கள் என்பது தெளிவாகியது!

**கியூ வரிசையா?**

**அப்படி என்றால் என்ன?**

தமிழ்நாட்டில் கடைகளிலோ, ரயில் நிலையங்களிலோ (அதிகம் சொல்வானேன்) கோயில்களிலோ சுவாமி தரிசனம் செய்யும் இடங்களிலோ, கியூ வரிசை இருக்கும். (ஆனால் இருக்காது!)

சிங்காரச் சென்னையில் மேல் நாடுகளை ஒத்த நவீன சூப்பர் மார்க்கெட் இருக்கும். உங்கள் பொருட்களைத் தள்ளு வண்டியில் இருந்து இறக்கி சூப்பர் மார்க்கெட் யுவதியின் முன்னால் வைக்கிறீர்கள்! அந்தப் பெண் உங்கள் முதலாவது பொருளை எடுத்து கம்பியூட்டரில் கணக்குப் போட ஆரம்பிக்கும் வேளையில் உங்களையும் தள்ளியபடி ஒரு உள்ளூர்வாசி தன் கையிலிருந்த பொருட்களை உங்கள் பொருட்களின் முன்னால் வைத்துத் தன்னைக் கவனித்து அனுப்பும்படி யுவதியை பணிக்கிறான். கியூ வரிசையா? அது என்ன?



இது சென்னை எக்மோர் ரயில் நிலையம். தெற்கே மதுரைக்குப் போகும் ரயில் வருகிறது. கூடவே டிக்கட் பதிவாளரும் வருகிறார். டிக்கட் பதிவு செய்தவர்கள், செய்யாதவர்கள் எல்லோருமே அந்த மனிதரைச் சுற்றி நின்று பண நோட்டுகளை நீட்டியபடி கோஷ்டி கானம் இசைக்கிறார்கள். அவருக்கு இது பழக்கமாகி விட்ட அன்றாட வேதனை. எங்களுக்கு அதிர்ச்சி! கியூ வரிசையா? ஏன் அதில் வர வேண்டும்?

சுவாமி தரிசனத்துக்குக் கோயிலுக்குச் சென்றால், அசைய முடியாத வலைக் கூடுகளுக்குள் பக்தர்களை அடைத்து வைக்கிறார்கள். முன் நிற்கும் அம்மையார் திடீரெனப் பின்வாங்கி என் வெற்றுக் காலை மிதிப்பார். பின்னால் நிற்கும் இளைஞன் என் முதுகில் சாய்வான். என் இடுப்புக்குக் கீழ் நிற்கும் பத்து வயதுச் சிறுவன் என் இடுப்பில் விறாண்டுவான். இறைவா! என் கோபத்தைக் கட்டுப்படுத்து என்று பிரார்த்திக்கிறேன்.

"கியூ வரிசையில் மற்றவர்களுடன் நெருடாமல் நிற்பது எப்படி என்று இந்தப் பக்த கோடிகளுக்கு உணர்த்தி வை தாயே!" என்றும் நான் தெய்வங்களிடம் மனமுருகி வேண்டிக் கொண்டேன்.

இந்தக் 'கியூ' அறியாமை, 'கழிப்பிடப் பற்றாக்குறை' ஆகியன மிக அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டியவை.

செவ்வாய் கிரகத்திற்கு பல கோடி டாலர் செலவில், இந்திய விஞ்ஞானிகள் கப்பல் அனுப்புதல், இந்தியாவை ஒரு வல்லரசாக உயர்த்தல் ஆகியவற்றை ஆறுதலாகப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்!

உ

# Hindu Tamil Cultural Association (Enfield)

இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

## ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

# Ambaal TV

Ambaal TV

அம்பாள் தொலைக்காட்சி

தமிழ் மொழி, இந்து சமயம், தமிழரின் கலை கலாசாரம் என்பவற்றை பேணுவதையும் வளர்ப்பதையும் ஒரே நோக்கமாக கொண்ட தொலைக்காட்சி அம்பாள் தொலைக்காட்சி

IPTV

ஆலய வழிபாடு
பட்டிமன்றங்கள்
விளக்கவுரைகள்
ஆன்மீக உரைகள்
சொற்பொழிவுகள்
சிறப்பு நேரலைகள்
இதிகாசத் தொடர்கள்
இயல் - இசை - நாடகம்

தாயகத்து நிகழ்வுகள்
கல்விசார் நிகழ்ச்சிகள்
பக்தித் திரைப்படங்கள்
தமிழர் விளையாட்டுகள்
நுண்கலை நிகழ்ச்சிகள்
ஆலோசனை நிகழ்ச்சிகள்
கலை கலாசார நிகழ்வுகள்
தமிழ் இலக்கண, இலக்கியம்

**www.ambaal.org**
என்ற இணைய முகவரியிலும்
**IPTV Box** இலும்
**IPad, iPhone** போன்ற சாதனங்களிலும்
அம்பாள் தொலைக்காட்சியை
பார்த்து மகிழலாம்

தொடர்புகளுக்கு: 0208 884 3333
ambaaltv@ambaal.org
www.ambaal.org

அம்பாள் தொலைக்காட்சியை
Deepam IPTV Box, Aarti TV Box,
Cloud Media IPTV Box,
Thisai Media IPTV Box
ஆகியவற்றில் பார்த்து மகிழலாம்.

உங்களிடமுள்ள கலை நிகழ்வுகள், அரங்கேற்றங்கள்
மற்றும் ஆக்கங்களின் ஒளிப்பதிவுகளை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

Deepam IPTV Box: 0203 695 0555 Cloud Media Box: 0208 635 2005
Aarti TV Box: 0203 318 2004 Thisai Media Box: 0208 949 8299

(தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)

# தலைப்புச் செய்திகளில் பிரபாகரன்

"விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரன் மீண்டும் வருவார். அவர் தலைமையில் சுதந்திரம் கிடைக்கும்" எனும் வாய்மொழித் தகவல் தமிழ்நாட்டில் இப்பொழுது வெளிப்படையாக, தொடர்ச்சியாக கூட்டங்களில் முக்கிய தலைவர்களினால் பேசப்பட்டு வருவதுடன், தினசரிப் பத்திரிகைகளில் முக்கியத்துவமும் பெற்று வருவது, மக்கள் மத்தியில் பரபரப்பையும், ஒரு எதிர்பார்ப்பையும் தூண்டி விட்டிருக்கிறது!

இலங்கையில் 'அவர்' சரித்திரம் முடிந்துவிட்டது என்று முற்றுப்புள்ளி வைத்தவர்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஒரு பீதி உலாவுவதை மறைக்க முடியவில்லை. இணைய தளங்களில் எதிரொலிக்கும் தகவல்களுக்கும், அவ்வப்போது உள்ளூர் ஊடகங்களே ஊதித் தள்ளும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளுக்கும் கொழும்பில் முடிச்சுப் போட்டு பார்ப்பவர்கள், நெருப்பு இல்லாமல் புகையாது எனும் முடிவுக்கு தள்ளப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டிலும் இதே கதைதான்!

**முள்ளிவாய்க்கால் முற்றம் கூட்டத்தில் எதிரொலித்தது! :** 2009-ல் ஏற்பட்ட தமிழின அழிவுக்குப் பின்னர் விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரன் இருக்கிறாரா, இல்லையா என்பதில் சந்தேகங்கள் தலைதூக்கினாலும், அன்று முதல் இன்று வரை பிரபாகரன் உயிருடன், ஒரு நாட்டின் பாதுகாப்புடன் இருக்கிறார் என்பதை சில தமிழ் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் அழுத்தமாக பதிவு செய்து வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, முள்ளிவாய்க்கால் இன அழிவுக்குப் பின்னர் 'தலைப்புச் செய்தி'யாக பிரபாகரன் தகவல்கள் வெளிவருவதில் கட்டுப்பாடுகள் கடுமையாக இருந்தாலும், அவர் சம்பந்தமான புகைப்படங்கள், நூல்கள் அங்கங்கே நடைபெற்ற தமிழுணர்வாளர்கள் அமைப்புகள், அரசியல் கூட்டங்களில் தடைகளை மீறி, பல வடிவங்களில் தலைகாட்டி மக்களின் கவனத்தை ஈர்க்கத்தான் செய்தது. இவை எல்லாம் செய்திகளாக வெளிவந்ததே தவிர, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று பத்திரிகைகள் கூறவில்லை. ஆனால் இன்று, தமிழக பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் எட்டாம் திகதி, பல ஆயிரம் மக்கள் மத்தியில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்புவிழா முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மேடையிலிருந்து பிரமுகர்களை நெறிப்படுத்திய மரு.அ.தாயப்பன் தனது அறிமுக உரையின் நடுவே ஒரு கட்டத்தில்; "சந்தேகம் வேண்டாம். தேசியத் தலைவர் பிரபாகரன் ஆரோக்கியமாக இருக்கிறார். உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர், ஐயா.பழ.நெடுமாறன் தொடர்பில் இருக்கிறார்..."என்று கூறியதும், அங்கு எழுந்த கரவொலி அடங்க சில நிமிடங்கள் ஆகிவிட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் கடந்த வருடம் நவம்பர் 26-ல் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நினைவு முற்றத்தின் பூங்கா இடிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பழ.நெடுமாறனுடன் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்ட 82 பேருக்கு அன்று பாராட்டு விழாவும் நடைபெற்றது. இவ்விழாவில் 'நாம் தமிழர் கட்சி' சீமான், 'புதிய பார்வை' ம.நடராசன், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் துரை பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இரா.சிவஞானம், 'விடுதலை தமிழ்ப்புலிகள்' கட்சி நிறுவனர் குடந்தை அரசன், உட்பட பல கட்சிகள், அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பழ.நெடுமாறன் பேசுகையில், "இந்த முற்றம், இலங்கைத் தமிழர் போராட்ட வரலாற்றின் அடையாளமாக உள்ளது. இது, தமிழர்களுடைய அவலத்தின் சின்னம். தமிழினம், அழிவின் விளிம்புக்குள் நுழைந்து நிறுத்தப்பட்டுள்ளது. இது நீடித்தால், எதிர்காலத்தில் மலேசியா, தென் ஆப்ரிக்கா, மொரீசியஸ் நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும். உலக அளவில் எழுபது நாடுகளில் தமிழர் இனம் பரவிக் கிடக்கிறது. அவர்களைக் காக்கும் கடமை நமக்குள்ளது. இதை உணர்ந்தவே இந்த முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முற்றம், உலகத் தமிழர்களைக் காக்கும்.

பாசறையாகக் கருதப்பட வேண்டும். இந்த பாசறைக்கு வந்து செல்லும் ஒவ்வொரு வீரரும், தன்னைப் போராளியாக கருத வேண்டும். ஈழத் தமிழர்களின் போரில் பின்னடைவுதான் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் பிரபாகரன் தலைமையில் போர் தொடரும்...." என்று குறிப்பிட்டார்.

**வள்ளுவர் தினவிழாவில் பிரபாகரன் பற்றிய குறிப்பு:-**

கடந்த மாதம் 15-ம் திகதி அரியலூர் அருகே, திருமலை பாடியில் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் தின விழாவில் சிறப்புரையாற்றிய உலகத் தமிழர் பேரமைப்பு துணைத் தலைவர் ம.பொன்னிறைவன்; "ஈழத்தில் தமிழ் இனம் அழிகிறது என்றால் தமிழ்நாட்டில் தமிழ்மொழி அழிகிறது. இஸ்ரேல், சூடான் எப்படி எல்லாம் தனி நாடுகளானதோ, ஆப்ரிக்க கண்டத்தில் உள்ள சுமார் நூறு மக்கள் தொகையைக் கொண்ட பிற்கெய்ன் தீவு எவ்விதம் அடிமை விலங்கை ஒடித்து ஐ.நா. அங்கீகாரம் பெற்றதோ அதேபோல் தமிழ் ஈழமும் பிரபாகரன் தலைமையில் தனி நாடு பெறும். தமிழீழ விடுதலைக்கு மீண்டும் பிரபாகரன் தலைமை வகிப்பார் என்று 2009-ம் ஆண்டிலிருந்தே நான் பல கூட்டங்களிலும் விளக்கி வருகின்றேன்" என்று தெரிவித்தார்.



**பிரபாகரன் வருவார் தமிழீழம் காண்பார் - வைகோ. நம்பிக்கை :**

திருநெல்வேலி மாவட்டம் கலிங்கப்பட்டியில் நடைபெற்ற வீரத்தாய் வேலு நாச்சியார் வாழ்க்கை பற்றிய நாட்டிய நாடகத்துக்கு தலைமை வகித்து வைகோ. உரையாற்றுகையில்; "வேலுநாச்சியாருக்கும் விடுதலை புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் நிறைய ஒற்றுமை உள்ளது. இதில் ஒன்று, மறைவு வாழ்க்கை கொண்டு, எழுச்சி பெற்று தாய்நாட்டை மீட்பது. அந்த வீரத்தாய் எட்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்து செயல்வகுத்து, தீரத்துடன் போராடி வெள்ளைக்காரனிடமிருந்து.

சிவகங்கையை மீட்டார். இதுபோல் பிரபாகரனும் வருவார். மகிந்த ராஜபக்ஷே கூட்டத்திடமிருந்து இலங்கையை மீட்பார். மக்கள் மன்றத்தில் ஒரு கூண்டில் ஈழத்தமிழர்களும், குற்றவாளிக் கூண்டில் ஈழத்தமிழர்களைக் கொல்ல ஏவிய கூட்டமும் நிற்கும். அந்தக்காலம் விரைவில் வரும்" என்று தெரிவித்தார். (மாலை மலர்-17/1/2014).

**பொட்டு அம்மன் கானாவில்: கோத்தபாயா புலனாய்வுப்பிரிவு !**

கடந்த மாதம் 19-ம் திகதி சிங்கள இணையதளத்தில் இடம் பெற்ற தகவல்களில்; விடுதலைபுலிகள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மன் கானாவில் இருப்பதாக ஒரு செய்தி கூறியது. இத்தகவல் கோத்தபாயாவில் புலனாய்வாளர்களினால் சேகரிக்கப்பட்டது என்று சிங்கள இணையதளம் தெரிவித்திருந்தது.

**"பிரபாகரனின் ஒரு முடிக்கு பெறுமதியற்றவர் மகிந்த" - சரத் :**

இத்தனை செய்திகளுக்கிடையே, தமிழினப் படுகொலைக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகா; பிரபாகரனின் புகழ்பாடி, "பிரபாகரன் உடம்பில் இருக்கும் ஒரு முடிக்குக் கூட ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ பெறுமதியற்றவர்" என்று சான்றிதழ் வழங்கியிருக்கிறார்.

பலப்பிட்டியாவில் கடந்த மாதம் 20-ம் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில்தான் முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா மேற்படி கருத்து வெளியிட்டிருந்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்; "விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கொள்கை இருந்தது. பிரபாகரன், எமது குடும்பங்களை பழி தீர்க்கவில்லை. எமது பிள்ளைகளை பழி வாங்கவில்லை. எனது மூத்த புதல்வியின் கணவரை ஆறு ஆண்டுகளாகக் காணவில்லை. பல மோசடிகளையும் செய்தவர் தான் இதன் பின்னணியில் இருப்பார். அபுதாபி நாட்டில் அன்று வாடகை காரை ஓட்டிய ஒருவருக்கு இன்று நான்கு விமானங்கள் இருக்கின்றன. மோசடியின் பிரதிபலன்களை ஒரு நாள் அவர் அனுபவிப்பார். அவர், நரகத்தில் வாடகை காரை ஓட்ட வேண்டிய நிலை கண்டிப்பாக வரும்" என்றார்! புலிக்காற்றுக்கு என்ன வேலி?

UNLEASH

THE POWER OF GOLD



# THARANI

**JEWELLERY & PAWNBROKERS**

**UK´S CHEAPEST GOLD LOANS STARTING FROM 2.95% PER MONTH**

# GOLD LOANS

**THE CHEAPEST GOLD LOAN PROVIDER IN WEMBLEY**

- No Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
- Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our loans.
- Loans Against Gold from 2.95% per Month, I´ts UK´s Lowest Rate for Gold Loans.
- Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
- No Credit Check Required.
- Simple Procedure, Loan Sanctioned in Just 5 Minutes.

**THARANI JEWELLERY**

54, Ealing Road, Wembley, Middx, HA0 4TQ. U.K Tel: 020 8902 7111, 020 8902 6777

E-mail: ashni23@aol.com

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து

SKY சேனல்களும் £200 பவுண்களில் இருந்து

# NANTHAN SATELLITE



**07581 423 532 - 07440 056339**

**Special Offer £100**

சகலவிதமான சட்டிலைட் தொலைக்காட்சி
இணைப்புகளையும், சட்டிலைட் ரிசீவர்களையும்
மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சட்டிலைட் திருத்த வேலைகள், சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெட் தொலைக்காட்சி பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்.



Email : nanthansatellite@hotmail.co.uk

குறிப்பு : Painting, Electric போன்ற சகல வீட்டுத் திருத்த வேலைகளும் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.

தியாகன்

# மனிதன் யாசித்த ஆயுள் வரம்

அண்டங்களைப் படைத்து, கோள்களை உருவாக்கி, சூரிய சந்திரர்களையும், பூமியையும் உண்டாக்கி, பூமியில் உயிரினங்களையும் உருவாக்கிய பின் "அப்பாடா, ஒரு வழியாக என் வேலை முடிந்தது" என்று நெற்றிக்கண்ணை மூடிக் கொண்டார் ஆதி அந்தமில்லா நாயகன் சிவபிரான்.

அவருக்கு முன்னால் தயங்கித் தயங்கி வந்தான். அவரது காரியதரிசியான 'செக்ரட்டரி' சித்திரகுப்தன். அவன் தனது கைகளைப் பிசைந்து கொண்டு வருவதைக் கவனித்த சிவன் கேட்டார்.

"என்ன குப்தா, என்ன பிரச்சனை? நான்தான் வேலை எல்லாம் முடித்து விட்டேனே; கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடேன்"

"இல்லை பிரபு; இன்னும் கொஞ்ச வேலை பாக்கி இருக்கிறது" என்றான் சித்திரகுப்தன்.

"அது என்ன வேலை?"

"தாங்கள் பூமியில் உருவாக்கிய உயிரினங்களுக்கு இன்னும் ஆயுட்காலம் நிச்சயிக்கப்படவில்லை. தாங்கள் அங்கே சென்று அவர்களின் ஆயுட்காலத்தை நிச்சயம் செய்ய வேண்டும்" என்றான் குப்தன்.

"நாளை பூமிக்குப் போகலாமா?"

"மறந்து விட்டீர்களா பிரபு; நாளைக்கு நாமெல்லாம் பரிவாரங்கள் புடைசூழ தக்ஷனிடம் போக இருக்கிறோம்"

"அந்த தக்ஷன் பயல் நமது எதிரியாயிற்றே! நம்மை மதிக்காதவனிடம் எதற்காகப் போகிறோம்?"

"தாங்கள்தான் அவனது பெண் பார்வதியைக் காதலித்து, அவளிடம் மதி மயங்கி விட்டீர்களே! மதி மயக்கத்தால் மறதி ஜாஸ்தி! நாமெல்லாம் நாளைக்கு பெண்கேட்டு தக்ஷனின் மலைக்குப் போகிறோம்"

"சரி, நாளை மறுநாள் பூமிக்குப் போகலாம், அங்குள்ள ஜீவராசிகளுக்கு அறிவித்தல் கொடுத்து விடு"

"ஆகட்டும் பிரபு; அப்படியே செய்கிறேன்" என்றான் சித்திரகுப்தன்.

'அடடே, சித்திரகுப்தன் யமராஜனின் 'செக்ரட்டரி' அல்லவா? யமராஜனது ஆயுட்கணக்குப் புத்தகத்தின் வரவு-செலவு கணக்குப் பார்ப்பவனல்லவா அவன்? அவன் எப்படிச் சிவபெருமானோடு சேர்ந்தான்?" என நீங்களெல்லாம் தலைமயிரைப் பிய்த்துக் கொள்வது புரிகிறது. ஆச்சரியமோ, அங்கலாய்ப்போ வேண்டாம். உயிரினங்களுக்கு இன்னும் ஆயுட்காலம் நிச்சயிக்கப்படாத படியினால் யமனுக்கு இன்னும் "உயிரெடுக்கும் வேலை"க்கான 'அப்பாயின்ட்மென்ட்' கிடைக்கவில்லை. யமன் உயிரெடுக்கும் வேலைக்கான பதவியேற்ற பின்னரே சித்திரகுப்தன் வேண்டா வெறுப்பாக சிவனை விட்டுவிட்டு யமராஜனிடம் 'அஸிஸ்டென்' ஆகப் போய்ச் சேர்ந்தான். அதுவரை அவன் சிவனின் கையாளாகப் பணிபுரிந்து வந்தான்.



பூமிக்கு வருகை தந்த சிவனால் தான் உருவாக்கிய சூரியனின் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. அசதியுடன் ஒரு மலைச்சாரல் நிழலில் படுத்திருந்தார். பொன்னார் மேனியிலிருந்து வழிந்தோடிய வியர்வை அரைக்கசைத்த புலித்தோலை நனைத்துக் கொண்டிருந்தது. அவரது கழுத்திலிருந்த பாம்பும் அசதியினால் தூங்கித் தூங்கி விழுந்தது.

அவசரமாக அங்கே வந்த சித்திரகுப்தன் சிவனை எழுப்பினான். "பிரபு, உயிரினங்களுக்கு ஆயுள் வழங்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. அவர்களெல்லாம் இங்கே வந்து கூடி விட்டார்கள்".

சிவன் விழித்தெழுந்து மின்னார் செஞ்சடையை ஒரு தடவை சிலுப்பிக் கொண்டார். கங்கா தீர்த்தம் தெறித்துப் பறந்தது. "மெள்ள, மெள்ள, நானும் இங்கே இருக்கிறேன்" என ஞாபகப்படுத்தியது பாம்பு. சிவன் அவருக்காக அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

அவரால் படைக்கப்பட்ட உயிர்ப் பிராணிகள் தத்தமக்குரிய ஆயுட்காலத்தை நிர்ணயம் செய்து கொள்வதற்காக வரிசையாக வந்து கொண்டிருந்தார்கள்.

"ஒவ்வொரு இனத்திலும் ஒருவர் மட்டும் வந்தால் போதும், அவருக்குக் கொடுக்கப்படும் ஆயுள் வரம் அந்த இனம் முழுவதையும் போய்ச் சேரும்" என்றார் சிவன்.




ஒவ்வொரு இனத்திலும் ஒரு மிருகத்தை மட்டும் அழைக்க ஆரம்பித்தான் சித்திரகுப்தன்.

"மாடு! மாடு! மாடு!" கூவி அழைத்தான்.

ஒரு மாடு முன்னால் வந்தது.

"இந்தா மாடு; உனக்கு, உன்னுடைய பெரிய உருவத்தைக் கவனத்தில் கொண்டு அறுபது ஆண்டுகள் ஆயுட்காலமாகத் தருகிறேன். இக்காலத்தில் வெய்யிலோ, குளிரோ, மழையோ, காற்றோ நீ தோட்டக்காரனோடு போய் தினமும் வயலிலோ, தோட்டத்திலோ வேலை செய்ய வேண்டும். கலப்பை மாட்டி வயலில் உழ வேண்டும்; செக்கு மண்டியில் எள்ளை நசுக்கி எண்ணெயாக்கும் செக்கை இழுக்க வேண்டும்; அவனது



குடும்பத்தினரை வைத்து வண்டி இழுக்க வேண்டும்; நாமெல்லாம் மாட்டு வேலை செய்ய வேண்டும். இரவில் வைக்கோலும் பிண்ணாக்கும் சாப்பிட்டு பின் உறங்கி ஓய்வெடுக்கலாம்" என்றார் சிவன்.

"என்னை மன்னியுங்கள் பிரபு. 60 ஆண்டுக்காலம் என்னால் செக்குமாடாக உழைக்க இயலாது. எனக்கு 20 ஆண்டுகள் மட்டும் தாருங்கள்; போதும். மிகுதி 40 ஆண்டுகளை 'வாபஸ்' செய்து திருப்பி எடுத்துக்கொள்ளுங்கள்" என்றது மாடு.

"உனக்கு 60 ஆண்டுக்காலம் உயிர்வாழ விருப்பம் இல்லையா?" என்று கேட்டார் சிவன்.

"வாழ ஆசைதான்; ஆனால் இப்படி 'மாட்டு வேலை' செய்து வாழ என்னால் முடியாது பிரபு" என்றது மாடு.

"சரி நீ கேட்டபடி 20 ஆண்டுகள் தருகிறேன்; மிகுதி 40 ஆண்டுகளையும் கிடப்பில் போட்டுவிட்டேன்" என்றார் சிவன்.

'மிக்க நன்றி பிரபு" எனக் கூறிக்கொண்டு மாடு நகர்ந்தது.

"அடுத்த ஆளைக் கூப்பிடு" என்று ஆணையிட்டார் சிவன்.

சித்திரகுப்தன் "குரங்கு! குரங்கு! குரங்கு!" என நீதவானில் ஆட்கூப்பிடும் தண்டக்காரன் போல மூன்று தடவை குரல் கொடுத்தான்.

குரங்கு சிவனின் முன்னே வந்து நின்றது.

"இங்கே பார் திருவாளர் குரங்கு; உனக்கு 20 வருட காலம் ஆயுள் வரம் தருகிறேன். இந்தக் காலத்தில் நீ குழப்படி செய்து எல்லாரையும் கலங்கடிக்க வேண்டும்; கோளாறு செய்துவிட்டு மரங்களில் தப்பியோட வேண்டும்; குரங்குச் சேட்டைகள் செய்து மக்களை மகிழ்விக்க வேண்டும்; குட்டிக்கரணம் போட்டு சிறு பிள்ளைகளைச் சிரிக்க வைக்க வேண்டும். இதெல்லாம் செய்வாய்தானே!"

"பிரபு, 20 ஆண்டுக்காலம் குட்டிக்கரணம் போட்டு குரங்குச் சேட்டை செய்ய என்னால இயலாது; 10 ஆண்டுகள் மட்டும் எனக்குப் போதும். மிகுதி 10 ஆண்டுகளைத் திரும்ப எடுத்துக்கொள்ளலாம்" என்றது குரங்கு.

சிறிது நேரம் சிந்தித்தபின் "சரி, அப்படியே ஆகட்டும்" என்றார் சிவன், அவரது வரத்தை ஏற்றுக்கொண்டு குரங்கு அப்பால் நகர்ந்தது.

"அடுத்தது யார்?" எனக் கேட்டார் சிவன்.

"நாய்! நாய்! நாய்!" எனக் குரல் கொடுத்தான் குப்தன்.

வாலை ஆட்டிக்கொண்டு நாய் முன்னால் வந்தது.

"இதோ பார் நாய்! உனக்கும் 20 ஆண்டுகள் ஆயுட்காலம் அளிக்கிறேன். வீட்டு வாசலில் இருந்து கொண்டு வருவோர் போவோரைப் பார்த்துக் குரைப்பதும், இரவில் ஒருவரையும் உறங்கவிடாமல் ஊளையிட்டுக் கொண்டிருப்பதும்தான் உனக்கு வேலை" என்றார் சிவன்.

"பிரபு, 20 ஆண்டுகளாகக் குரைத்துக் கொண்டிருப்பது என்னால் இயலாத காரியம். தொண்டை கண்டிப் போய் எனது குரலே இல்லாமல் போய்விடும். இதில் 10 ஆண்டுகளைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளுங்கள். எனக்குப் பத்து ஆண்டுகள் போதும்" என்றது நாய்.

"சித்திர குப்தா, அடுத்த ஆளைக் கூப்பிடு" என்றார் சிவன்.

"மனிதன்! மனிதன்! மனிதன்!"

அடுத்து வந்த மனிதன் சிவனைப் பார்த்து, "தங்கள் பாத கமலங்களை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன் மகாப்பிரபு" என 'ஐஸ்' வைத்தான்.

"நீ உலக வாழ்க்கையை ரசிக்க வந்தவன். உனக்கு 20 ஆண்டுகள் ஆயுட்காலம் அளிக்கிறேன். சிரித்து சந்தோஷமாக நண்பர்களுடன் குதூகலமாகக் கும்மாளமடித்து, நண்பிகளுடன் சகவாசமாகச் சல்லாபமடித்து, வாழ்க்கையை 'ஜாலி'யாக அனுபவித்துக் கொண்டு போ! சந்தோஷம் தானே!" என்று கேட்டார் சிவன்.

"ஐயா! நீங்கள் சொல்லுகிற மாதிரி உலக வாழ்க்கையை 'ஜாலி'யாக அனுபவிப்பதற்கு எனக்கு 20 ஆண்டுக்காலம் போதாது. அந்த மாடு திருப்பித் தந்த 40 வருடங்களையும், குரங்கு திருப்பித் தந்த 10 வருடங்களையும், நாய் திருப்பி தந்த 10 வருடங்களையும் சேர்த்து - மேலதிகமான 60 வருடங்களையும் எனது ஆயுட்காலத்தோடு சேர்த்துத் தர முடியுமா?" எனக் கேட்டான் மனிதன்.

"சரி எடுத்துக் கொண்டு போ" என்றார் இறைவன்.

மனிதன் தனது உலக வாழ்க்கையை ஆரம்பித்தான். சிறு வயதில் அனைவரும் அவனைக் கொஞ்சிக் குலாவினார்கள். 'தம்பி', 'ராசா', 'செல்லமே', 'கரும்பே' எனக் கட்டியணைத்தார்கள். முதல் 20 ஆண்டுகளை துள்ளித் திரிந்து பள்ளியிலும், அடுத்து கல்லூரியிலும், பின்னர் கலாசாலையிலும் நண்பர்களுடனும், நண்பிகளுடனும் சேர்ந்து உல்லாசமாகக் கழித்தான்.

அடுத்த 40 ஆண்டுக் காலத்தில் - மாட்டினால் திருப்பிக் கொடுக்கப்பட்டு அவனால் மீட்டெடுக்கப்பட்ட காலத்தில் - அவன் செக்கு மாடாக உழைத்து, மனைவி, பிள்ளைகள், உறவினர், குடும்பம் என ஆதரித்து - நலிந்து, மெலிந்து, நோய் பிடித்து அவதிப்பட்டான். ஆவலோடு ஓய்வெடுத்துக் கொண்டான்.

ஓய்வு பெற்றபின் அடுத்த 10 ஆண்டுகள் நண்பர்களுடன் குரங்குச் சேட்டை செய்தும், பேரப் பிள்ளைகளுக்கு முன்னால் குட்டிக் கரணமிட்டும், குரங்கு வித்தை காட்டியும் நாட்களைக் கடத்தினான்.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு வாசலில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்து கொண்டு, வீட்டிற்கு வருவோர் போவோரிடமெல்லாம் "வள் வள்" என்று குரைத்த வண்ணம் தனது காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான்.








# ஹரோ கவுன்சிலில் பொங்கல் விழா!



ஆங்கிலேயர்களும், பல்வேறு இனத்தவர்களும், தமிழர்களுடன் கூடி பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். லண்டன் ஹரோ கவுன்சில் சேம்பரில் ஹரோ நகரசபை கவுன்சிலர்கள், பிரமுகர்கள், தமிழ் பொது மக்கள் ஒன்றிணைந்த இந்தத் தமிழ்ப் பொங்கல் விழா கோலாகலமாக நடந்தது. ஹரோ நகரசபை கவுன்சிலர் மேயர் NANA ASANTE தலைமையில், ஹரோவை சுற்றியுள்ள தமிழ்பாடசாலைகள், அமைப்புகள், முதியோர் சங்கம் போன்றவைகளின் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

லண்டன் மாநகர சபைகளில் இப்படியான ஒரு தமிழ் பொங்கல் விழா நடப்பது ஹரோ நகரசபை ஒன்றில்தான் என்று பெருமைப்படலாம். நான்காவது தடவையாக இப்பொங்கல் விழா நடப்பதற்கு முழு முதல் காரணமாக இருக்கிற ஹரோ கவுன்சிலர் சுரேஷ் கிருஷ்ணா (லண்டன் பாபா) என்பதைச் சொல்லியே ஆக வேண்டும். தமிழர்களல்லாதவர்களும் தமிழர் பெருமையை அறிய வேண்டும் என்ற நோக்கோடு இந்த விழா நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகிறதென்றால், அது கவுன்சிலர் சுரேஷ் என்ற லண்டன் பாபாவையே சாரும். ஈழத் தமிழர்களுக்கும், தான் சார்ந்திருக்கிற தொழிற்கட்சிக்கும் மிக விசுவாசமாக உழைப்பவர் இவர்.

விழா மேடைக்கு ஹரோ மேயர் மேள, நாதஸ்வர வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டார். இதன் பின்னர், பல்வேறு தரப் பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், முதியோர்களின் நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம் பெற்றன. இவ்விதமான ஒரு விழாவை தொடர்ந்து ஏற்பாடு செய்து நடத்தி வருகின்ற கவுன்சிலர் சுரேஷ் கிருஷ்ணாவை மேயர் பாராட்டினார்.

இவ்விழா ஏற்பாடுகளில் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு கை கொடுத்து உதவியவர் குண கருணா.

ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com

Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.



# நெஞ்சோடு வாழும் எங்கள் தெய்வத்தின்

# முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி

### அம்மா

அம்மா, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று நிறைவாகியும், எம் கண்களில் ஒளியாக, எம் செவிகளில் ஒலியாக, எம் பேச்சின் மூச்சாக, எம் நினைவில் நிஜமாக, எம் வாழ்வின் வழிகாட்டியாக இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள். வாழ்வீர்கள்.

### Ammamma

Ammamma,
God saw you getting tired
And a Cure was not to be
So, he put his arms around you
And Whispered 'Come to me'.
With tearful eyes we watch you
and saw you passed away
Although we loved you dearly
Ammamma
We could not make you stay.
A golden heart stopped beating
A had working hands at rest
God broke our hearts to prove us
He only takes the best



### Appamma

It's almost been a year since our dear appamma left us and we still can't believe it. The empty void she has left behind is truly evident whenever we go to Saro Maami's house, because now we're never greeted by our appamma and her cheerful, whimsical nature. She would always tell us to eat and always be smiling and ask us how we were whenever we saw her. when we left she would always give us a kiss on each cheek and then give us a great bid hug and a genuine smile. The fact that she was so cruelly snatched from us and the fact that we will never see her cheerful face again is truly heart breaking. But, at least we all know she is in a better place now, free from all the pain and suffering. Regardless of this however, we all as a family miss her and will continue to do so for the rest of our lives, and we will always love her and cherish her memory.

### Great Grandma

We love you dearly Great Grandma.

**தாயின் மடியில்**
**05.10.1924**

## திருமதி தங்கம்மா வேலாயுதம்

**(16 STRADBROKE GROVE, CLAY HALL, ILFORD, ESSEX)**

**இறைவனடியில்**
**02.01.2013**

*ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்*
*ஓடி மறைந்தாலும் எங்கள் உயிருள்ளவரை*
*உங்கள் நினைவுகளில் வாழ்வோம்!*

**பிள்ளைகள் : பத்மாவதி, சரோஜினி, குமாரன், பாலகுமாரன், விஜயன்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்**

### அம்மாவின் நினைவாக ஞாபகார்த்த நிதி

இறையடி சேர்ந்த திருமதி தங்கம்மா வேலாயுதம் அவர்களது முதலாம் ஆண்டு நினைவாக, எம் பாடசாலை மாணவர்கட்கு நிதி உதவி வழங்கிய அம்மாவின் பிள்ளைகள், குடும்பத்தினருக்கு எமது நன்றிகள். 2013ம் ஆண்டின் கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில், முல்லைத்தீவு மாவட்ட நிலையில் 5ம் இடத்தைப் பெற்ற ரவிச்சந்திரன் தர்ஷினி, மற்றும் 9ம் இடத்தைப் பெற்ற செபஸ்ரியான் பிள்ளை சத்யா ஆகிய இரு மாணவிகளும் அம்மாவின் ஞாபகார்த்த நிதி உதவியை நன்றியுடன் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதத்தில் வெளிவரும் கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் முதல்நிலை வகிக்கும் இரண்டு மாணவர்கட்கான நிதி உதவியினையும் இப்பாடசாலை நிர்வாகம் ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளது. அம்மா அவர்களது ஞாபகார்த்த நிதியினை ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து 4 மாணவர்களுக்கு அளிக்க முன்வந்துள்ள செய்தி கேட்டு இப்பாடசாலைச் சமூகம் அகமகிழ்ந்து அவரது குடும்பத்தினருக்கு நன்றி கூறுகின்றது. அம்மாவின் மூத்த மகள் திருமதி. பத்மாவதி குணதாசன் அவர்கள் இப்பாடசாலையின் முன்னைய ஆசிரியை என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றோம். அம்மாவின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. மங்களேஸ்வரன் (தலைமை ஆசிரியர்) பாரதி வித்தியாலயம், விஸ்வமடு, முல்லைத்தீவு



## ‘பிரபுதேவாவை மன்னிக்க மாட்டேன்!’

முதல் காதலரான சிம்புவுடன் மீண்டும் நடித்து வரும் நயன்தாரா, இரண்டாவது காதலரான பிரபுதேவாவின் படத்தில் நடிக்கப் போவதாக, தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் டென்ஷனாகியுள்ள நயன்தாரா, “எனது முதல் காதலரை மன்னிக்கலாம் ஆனால், இரண்டாவது காதலரை மன்னிக்கவே முடியாது. அவரது படத்தில் நான் நடிக்க வாய்ப்பே இல்லை” என்று நறுக்கென்று சொல்லி வருகிறார் நயன்.





## ஜி.வி.பிரகாஷை விரட்டிய இயக்குனர் பாலா!

கரகாட்டத்தை மையமாக வைத்துத் தான் இயக்கும் அடுத்த படத்துக்கு இசை அமைத்துத் தருமாறு மீண்டும் இளையராஜாவிடம் போய்விட்டார் இயக்குனர் பாலா.

பாலாவின் முதல் படமான சேதுவை மறக்க முடியாத படமாக்கியதில் கணிசமான பங்கு இசைஞானி இளையராஜாவுக்கு உண்டு.

‘பரதேசி’ படத்துக்கு முதல் முறையாக ஜி.வி.பிரகாஷை இசை அமைக்க வைத்தார்.

படமும் சுமார், இசை படு சுமார் என்றாகிப் போனது. இருந்தாலும், தனது அடுத்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷை ஒப்பந்தம் செய்தாராம்.

ஆனால், ஜி.வி. கொடுத்த பாடல் டியூன்கள் எதுவும் பாலாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அதுவும் கரகாட்ட சூழலுக்கு கொஞ்சமும் பொருந்தாத இசையைக் கொடுத்தாராம். சரி, சொல்லிப் புரிய வைக்கலாம் என்றால், தான் ஹீரோவாக நடிக்கும் ‘பென்சில்’ படத்தில் கவனம் செலுத்தி வந்தது ஜி.வி மீது பாலாவை எரிமலை ஆக்கிவிட்டதாம்.



## சிரித்துப் பேசினால் சிம்புவுடன் மீண்டும் காதலா?

பாண்டிராஜ் படப்பிடிப்பில் சிரித்துப் பேசினால் உடனே எங்களுக்குள் மீண்டும் காதல் ஏற்பட்டு விட்டதாகத் தகவல் பரப்பி விடுவதா என்று நயன்தாரா கோபத்தில் உள்ளாராம்.

முன்னாள் காதலர்களான சிம்புவும், நயனும் பல ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒன்று சேர்ந்து பாண்டிராஜ் படத்தில் நடித்துள்ளனர். படப்பிடிப்பில் நயனும், சிம்புவும் சிரித்துப் பேசிக் கொண்டார்களாம். அவர்கள் பழகும் விதத்தைப் பார்த்து படக்குழுவினர் அவர்களுக்குள் மீண்டும் காதல் ஏற்பட்டு விட்டதாகக் கூறி வருகிறார்களாம்.

இந்நிலையில் இருவர் படங்களும் விதம் விதமாக சிரித்துப் பேசுவதை இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர். சிம்புவுடன் சிரித்துப் பேசினால் உடனே காதலா, இப்படித் தான் போட்டோவைப் போட்டுத் தகவல் பரப்புவதா? என்று நயன் கோபத்தில் உள்ளாராம்.

ஆர்யாவுடன் கும்மாளம் அடித்து, நமக்குள் ஒன்றுமே இல்லை என்று சொல்லும் நயன், இப்போது ஜெயம்ரவியுடன் நடித்து வருகிறார்.



## சீரியலில் நடிக்கமாட்டேன் என்கிறார் நமீதா!

சினிமா வாய்ப்புக் குறைந்து போனாலும் மானாட மயிலாட! நிகழ்ச்சியில் நடுவராக அமர்ந்து மார்க் போடுகிறார் கவர்ச்சி காட்டும் நமீதா!

ஆனால் சீரியலில் நடிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறாராம். புது சனல் ஒன்று நமீதாவை சீரியலில் நடிக்க வைக்கலாம் என்று முயன்று தோற்றுவிட்டது.

சின்னத் திரையில் “டான்ஸ்” ஆடும் “மச்சான்”களுக்கு மார்க் போடுவதோடு நிற்காமல் கவர்ச்சி உடை சூடியும் பயமுறுத்துகிறார்.

எப்பாடுபட்டாவது நமீதாவை நடிக்க வைத்துவிட வேண்டும் என்று புதிய சனல் எடுத்த முயற்சிக்கு “எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் சீரியலில் மட்டும் நடிக்க மாட்டேன்” என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டார்.

நமீதா சீரியலில் நடிக்காவிட்டாலும் அவரது கவர்ச்சியான முன்னழகை ரசிகர்களுக்கு அவ்வப்போது அள்ளிக் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை.



## ‘தேவதாஸ்’ நாகேஸ்வரராவ் காலமானார்!

தெலுங்குத் திரைப்பட உலகில் முன்னணி நாயகனாக வலம் வந்த பழம் பெரும் நடிகர் நாகேஸ்வரராவ் ஹைதராபாத்தில் கடந்த 21.01.14இல் காலமானார். அவருக்கு வயது 90 பிரபல நடிகர் நாகார்சுனாவின் தந்தை இவர். ‘தேவதாஸ்’ படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்தவர். இந்தியாவின் திரைப்படத் துறை உயரிய விருதான ‘தாதா சாகேப் பால்கே’ விருது பெற்ற இவர், தனது சிறந்த நடிப்புக்காக ‘பத்ம விபூஷன்’ போன்ற பல விருதுகளையும் தனதாக்கிக் கொண்டவர். பிரபல நடிகை அமலாவின் மாமன்.

# 'ஜில்லா' பார்ப்பது 'கொழுப்பு'!

## 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக யாழில் போர்!



யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' தினசரி பத்திரிகைக்கு எதிராக கடந்த செவ்வாய்க் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை தமிழ் இளைஞர்கள் நடத்தியிருக்கிறார்கள்!

அப்பத்திரிகை என்னதான் எழுதிவிட்டது? 'யாழில் பல கொலைகள், கொள்ளைகள் நடந்துள்ளன. வன்னியில் இன அழிப்பு நடந்தேறியுள்ளது' அதற்கெல்லாம் இந்த ஆர்ப்பாட்டம் நடந்திருந்தால், 'பரவாயில்லை, நம் இளைஞர்கள்!' என்று தட்டிக் கொடுத்திருக்கலாம். ஆனால், அதற்கெல்லாம் ஒன்றும் செய்யாத நமது இளைஞர்கள் விஜயின் 'ஜில்லா' படம் பற்றி குறைகூறி விமர்சனம் எழுதியதைக் கண்டித்து, உதயன் பத்திரிகை யாழ். தலைமை அலுவலகத்துக்கு முன் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி முடித்துள்ளனர்.

எப்படித்தான் இவர்களால் இப்படி நடக்க முடிகிறது? ஒரு இன அழிப்புக்கு உள்ளாகும் சமூகத்தில் இருந்து கொண்டு இவர்களால் எப்படி இருக்க முடிகிறது?

"ஈழத் தமிழருக்கு பிரச்சனைகள் இருக்கும்போது சினிமா நடிகருக்காக போராடுவதா?" என ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்களை வட மாகாண சபை அமைச்சர் ஐங்கரநேசன் விரட்டி அடித்தார். "இந்தத் திரைப்படம் பார்க்க திரை அரங்குக்குப் போய் 3 மணி நேரத்தை வீணடிப்பது 'கொழுப்பு' அன்றி வேறென்னவாக இருக்க முடியும் என்று 'உதயன்' ஞாயிறு இணைப்பு சினிமா பகுதியில் எழுதப்பட்டிருந்தது. "கேவலம், நடிகருக்கு யாழ் நகரில் கட் அவுட் வைக்கிறீர்கள்... நீங்கள் தமிழன். இங்குள்ள தமிழர்கள் உறவுகளைக் காணவில்லை என்று அழுது புலம்புகிறார்கள். ஜெனிவாவில் தீர்மானம் வைக்கிறார்கள். அதற்கெல்லாம் போராடாமல் நடிகருக்காக இப்படி நிற்கிறீர்களே? அதுவும் ஒரு நடிகருக்காக" என்று அமைச்சர் கடுமையாகச் சாடினார். பின்னர் சிறிது நேரத்தில் அங்கு நின்ற இளைஞர்கள், அந்த இடத்தை விட்டு வெளியேறினர்.

## தமன்னா மார்க்கெட்!



தமிழில் டல்லடித்திருந்த தமன்னாவின் மார்க்கெட் தற்போது "பிக்கப்" ஆகி வருகிறது. "வீரம்" படத்தை அடுத்து அவர் ஆர்யா மற்றும் சிவகார்த்திகேயன் ஆகியோருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் ஆகி உள்ளார்.

## நடிகை நஸ்ரியா பஹத் திருமணம்



திருமணத்துக்குப் பிறகும் நடிப்பதைத் தொடர நஸ்ரியா முடிவு செய்துள்ளார். இயக்குனர் பாசில் மகன் பஹத்துடன் நிச்சயமாகி இருக்கிறது. நடிகை நஸ்ரியா - பஹத் திருமணம் ஆகஸ்ட் மாதம் 2வது வாரத்தில் கேரளாவில் நடக்கிறது. "பஹத் எனக்கு நிறையச் சுதந்திரம் கொடுத்துள்ளார். திருமணத்துக்குப் பிறகு நான் படங்களில் நடிப்பதில் எந்தத் தடையும் இல்லை" என்று நஸ்ரியா சொல்கிறார். "தொடர்ந்து நடிப்பேனா, இல்லையா? என்பதை நான் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் அதை இப்போது யோசிக்கவில்லை" என்கிறார். "ஒப்புக்கொண்ட படங்களை எல்லாம் முடித்துக் கொடுத்து விடுவேன். புதுப் படங்களை இப்போதைக்கு ஒப்புக் கொள்ள மாட்டேன். தற்போது மலையாளத்தில் "எல் பார் லவ்" என்ற படத்தில் பஹத்துடன் நடிக்கிறேன். அவர் மீது காதல் வந்தது அங்குதான்" என்றும் நஸ்ரியா சொன்னார்.



## மணிரத்தினம் படத்தில் மீண்டும் ஐஸ்வர்யா!



உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட ஐஸ்வர்யாராவை முமலில் சினிமா உலகுக்குக் கொண்டு வந்தவர் மணிரத்தினம். திருமணமாகி குழந்தை பெற்று வாழும் அவரை மீண்டும் தனது தமிழ் படத்தில் நடிக்க வைக்கிறார் மணிரத்தினம். 1997ம் ஆண்டில் வெளியான 'இருவர்' படத்தில் 'ஐஸ்', மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லாலுடன் சேர்ந்து நடித்தார். தமிழில் சிறந்த படைப்பு இது. 'இருவர்' படத்தை அடுத்து 'பாலிவுட்' முன்னணி நாயகிகளில் ஒருவராக ஆனார். ஹிந்தி படங்களில் நடித்த போதிலும், அவ்வப்போது வந்து தமிழ் படங்களிலும் நடித்து விட்டுச் செல்வார். அவர் நடித்த 'ஜீன்ஸ்', 'கண்டு கொண்டேன், கண்டுகொண்டேன்" 'எந்திரன்' ஆகியவை ஹிட் படங்கள். மணிரத்தினத்தின் 'குரு', மற்றும் 'ராவணன்' ஆகிய படங்களில் நடித்தார். இதில் 'குரு'வில் தன் கணவர் அபிஷேக் பச்சனுடன் நடித்தார். 'ஆராத்யா' என்ற குட்டிக்குத் தாயான பிறகு 'ஐஸ்' படங்களில் நடிக்காமல் இருந்து வருகிறார். லேட்டஸ்ற் செய்தி: ஐஸ் மீண்டும் மணிரத்தினம் படத்தின் மூலம் நடிக்க வருகிறார். குழந்தை பெற்றாலும், அதே அழகு, கவர்ச்சி குன்றாமல் தன்னை வைத்திருக்கிறார் இப்போது.

ஒழுங்கான நித்திரை கொள்கிறீர்களா?

**அதுதான் உங்கள் டயாபட்டிஸ் நோய்க்கு முக்கியமான காரணமாக அமைகிறது என்று பெரிய போடு ஒன்றைப் போட்டார்**

# நித்திரை கொள்ளுங்கள்!



## ஹோமியோபதி டாக்டர் ஆர். தியாகராஜன்

தமிழகத்தில் தன் பணியை ஆரம்பித்து, இன்று கொழும்பிலும் லண்டனிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வெற்றிகரமான தன்னுடைய சேவையைச் சிறப்பான முறையில் நடத்தி வரும் இவர்மீது எனக்கு எந்த டாக்டர்கள் மீதும் இல்லாத ஒரு பிடிப்பு உண்டு. நோய்களுக்கான காரணத்தை வித்தியாசமாக நோக்குபவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலேன அனுபவத்தைக் கொண்டிருந்தாலும், பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருக்காமல், மருத்துவத்துறையில் இன்று நிகழ்கிற புதிய புதிய மாற்றங்களையும், ஆய்வுகளையும் படித்துத் தெரிந்து, உணர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அவர் லண்டனுக்கு, மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வந்து, குறைந்தது ஒரு மாதத்துக்குத் தங்கியிருந்து, பல நூறு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.



அவசரம் அவருக்குப் பிடிக்காது. ஆற அமர இருந்து நோய்களைக் கேட்டறிகிறார். ஒரு நோயாளியுடன் ஆகக் குறைந்தது 45 நிமிடங்களாவது பேசி, வாழ்க்கை முறை முதல் நோயின் தன்மைகளைப் புரிந்து கொண்டு, அதற்கான ஆலோசனைகளை வழங்குகிறார். நோயைக் கண்டுபிடித்துக் கொண்ட பின்னரே சிகிச்சை அளிக்கத் தொடங்குகிறார். ஆலோசனை எவ்வளவு நேரமென்றாலும், இலவசம். கொடுத்தாலும் வாங்கமாட்டார்.

வழக்கமாக லண்டனுக்கு அவர் வரும்போது சந்தித்துப் பேசுவேன். இம்முறை விடுமுறைக்குச் சென்றபோது, திருச்சியில் உள்ள பெரியார் நகரில் பிரமாண்டமாக நிமிர்ந்து நிற்கும் அவரது HO-MOEO CARE தலைமை சிகிச்சை நிலையத்தில், மார்கழி மாதத்தில் ஒரு இதமான மாலைப் பொழுதில், அவரை சந்தித்தேன். அவருக்கு உதவியாக பணியாற்றும் அவர் காதல் மனைவி ஹோமியோபதி டாக்டர் மஞ்சுளாதேவி இருந்தார். ஒரே மகளான மொனிஷா சிவகுமரன் எம்.பி.பி.எஸ். டாக்டர். இப்போது எம்.டி. உயர்கல்வி படித்துக் கொண்டிருக்கிறார். அவர் மருமகன் டாக்டர் சிவகுமாரன் எம்.டி ஆகப் பணியாற்றுகிறார். ஹோமியோபதியும், மேல்நாட்டு வைத்தியமும் சங்கமமான ஒரு அழகான குடும்பம்.

"எங்கள் உடம்புக்கு மூன்று விஷயங்கள் முக்கியமான தேவைகள். சாப்பாடு, நித்திரை உடற்பயிற்சி. இந்த மூன்றையும் ஒழுங்காக செய்பவர்கள் எத்தனை பேர்? இவைதான் டயாபட்டிஸ் வருவதற்கான காரணங்கள்" என்று சொன்ன டாக்டர் தியாகராஜன் தொடர்ந்து பேசினார்.

"சமீபத்தில் லண்டனில் SURREY யில் SLEEP RESERCH CENTRE ஒரு ஆய்வைச் செய்தார்கள். 22 பேரை வைத்து இந்த ஆய்வு நடந்தது. இந்த ஆட்களை மூன்று நாட்கள் ஒரு பெரிய அறையில் பூட்டி வைத்தார்கள். மணிகூட்டு அங்கு வைக்கப்படவில்லை. கும்மிருட்டான அந்த அறைக்குள் பகல், இரவைக் கண்டுபிடிப்பதற்கு பகல் நேரத்தில் பகல்போன்ற வெளிச்சத்தையும், இரவு நேரத்தை இரவாக்கும் வெளிச்சத்தையும் செயற்கையாக ஏற்படுத்தினார்கள். கலண்டர் ஒவ்வொரு நாளும் (3 நாட்களும்) கிழிக்கப்படும். ஒரு நாள் 28 மணி நேரமாக்கப்பட்டது. சாப்பாடு, நித்திரை, உடற்பயிற்சி எல்லாமே அங்குதான் நடந்தது. இறுதியில், அந்த 22 பேருக்கும் TEST செய்யப்பட்டது. 97 சதவிகிதம் இதயம் சீரான செயல்பாடு இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. மரபணுக்கள் (RHYTH-MIC GENES) மாறுபாடாகச் செயல்படத் தொடங்கி விட்டன. இந்த மரபணுக்கள்தான் மனிதனுடைய வளர்ச்சி, மற்றும் ஆரோக்கியத்தை அளிப்பன. குழந்தைகள் நடப்பது, பேசுவது, பெண்களுக்கு மாதவிடாய் வருவது, குழந்தை பிறப்பது போன்ற பல்வேறு விஷயங்களுக்கு இந்த மரபணுக்களின் சீரான செயல்பாடுதான் முக்கிய காரணம். உடல் எடை கூடுவதும் இதனால்தான். இன்சுலின் சுரப்பது தாறுமாறாகி வருத்தங்கள் வரத் தொடங்குகின்றன" என்ற ஆதார பூர்வமான விளக்கங்களை அளித்தார் டாக்டர்.

"நித்திரையைஒழுங்காகப்பலர்கொள்வதில்லை. 'டயாபட்டிஸ்' வருவதற்கு தூக்கமின்மை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. சரியான நேரத்துக்குப் பலர் தூங்கப் போவதில்லை. இரவிரவாகக் கண்விழித்து சாமத்துக்குப் பிறகு தேவையில்லாமல் டி.வி. விடியோக்களைப் பார்ப்பார்கள். பின் காலையில் எழும்ப முடியாமல் எழும்பி வேலைக்குப் போவார்கள். வேலையிலும் நித்திரை, தூங்கிக்கொண்டு மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாவார்கள். ஹார்மோன். குளறுபடிகள் ஏற்பட்டு மன அழுத்தம், கோபம், டென்ஸன் போன்றவை ஏற்பட்டு, கடைசியில் 'டயாபட்டிஸ்' போன்ற நோய்களில் பாதிக்கப்படுவார்கள். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் ஏற்பட்டும் விடுகிறது. (POLYCYSTICOVERIESDISEASE-PCOD)

"நேரம் தாழ்த்திப் பெற்றோர்கள் நித்திரைக்குப் போவதால், பிள்ளைகளும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் நேரத்துக்குப் படுத்து எழும்புவது பற்றிப் பல பெற்றோர்கள் சிந்திக்கத் தவறுவதால் அவர்களையும் இந்த மரபணுக்கள் பாதித்து விடுகின்றன" என்று மேலும் நீண்ட விளக்கங்களை அளித்தார் ஹோமியோபதி வைத்திய நிபுணர்.

ஒரு உதாரணம் மூலம் ஒரு பயனுள்ள விஷயமொன்றை விளக்கியபோது, மிகவும் ரசித்தேன்.

"பெரிய 'சூப்பர் மார்க்கெட்' ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த நிறுவனம் இரவில் பூட்டப்பட்டு விடுகிறது. ஆனால் உள்ளே சில ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். அடுத்த நாள் வாடிக்கையாளர்களுக்காகப் பொருட்கள் அடுக்கும் வேலை போன்றவைகளை இரவிராவக செய்து கொண்டிருப்பார்கள்.

அப்படித்தான் இரவில் மனிதர்கள் நித்திரை கொண்ட பின்னர், மூளை ஒழுங்குபடுத்தும் வேலைகள் நடக்கின்றன. இதனால், சீரான தூக்கத்தில் நடக்கிற ஒழுங்கு அமைப்பு, அடுத்த நாள், தொடர்ந்து பிரச்சனைகள் இன்றிச் செயல்படுத்துவதற்கு மனிதனுக்கு உதவுகின்றது. படிக்கிற பிள்ளைகள் கூட ஒழுங்காக, நேரத்துக்குப் படுக்காமல், கம்ப்யூட்டர், டி.வி. போன்றவற்றுடன் இரவைக் கழித்து, அகால நேரத்தில் தூக்கத்துக்குப் போகிறார்கள், இதனால், அவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிற பாடங்களை கிரகிக்க முடிவதில்லை. எதுவும் நினைவில் இருக்காது. ஆழ் மனதில் படியாது" என்கிறார்.

ஹோமியோபதி மூலம் டயாபட்டிக்ஸ், அலர்ஜி, தோல் வருத்தங்கள், மாதவிடாய்க் கோளாறு, உயர் இரத்த அழுத்தம் சிறுநீரகக் கோளாறுகள், குழந்தை இன்மை, செக்ஸ் பிரச்சனைகள் போன்றவற்றைக் குணப்படுத்த சிகிச்சை அளிப்பதில் வல்லுனரான டாக்டர் ஆர். தியாகராஜனின் வெற்றியின் ரகசியம்; தன்னைப்பற்றி அவர் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. தன்னை அணுகும் ஒரு நோயாளியின் வாழ்க்கை முறையை அவருடன் முதல் முறை பேசி அறிந்து விடுகிறார். அவருடைய குறைகளை புரிந்து கொண்டு சிகிச்சை அளிக்கத் தொடங்குகிறார். அவரது நோயைக் குணமாக்குவதில் தீவிரமான சேவை மனப்பான்மையுடன் செயல்படுகிறார்.

மனம் விட்டு அவருடன் பேசுங்கள். நோய்க்கான கவலையை மறந்து விடுவீர்கள்!

-ஈ.கே. ஆர்.

# டயாபட்டிஸ்



## ஹோமியோபதி மருத்துவம்
## +
## உங்கள் ஒத்துழைப்பு

# 100% தீர்வு

டயாபட்டிஸ் நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.







உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Insertility)



**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

Aarti tv
Home of Tamil Channels

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!

Aarti TV MOVIES

## Over 500 Tamil Movies Available Instantly!

- ✓ New movies added every week
- ✓ Movies are available before the DVD release

- 25க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிச் சேவைகள் ஒரேதளத்தில்.
- Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
- பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.
- பல வேகங்களில் Pause - Forward - Rewind செய்து கொள்ள வசதியானது.
- சட்டடைல்டிகளைப் பொருத்த தேவை இல்லை.
- Broadcast Quality Picture.

**FREE CRICKET CHANNELS**
Watch All The Cricket Action Live!

Limited Offer
**ஒரு வருட சந்தா & SET TOP BOX**
**£149**

Aarti TV சந்தா செலுத்துவது மிகச் சுலபம்! 24/7 வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**0203 318 2004 / 0742 481 2089**

100% LEGAL

**WWW.AARTITV.TV**

15 Days Money Back GUARANTEE



TASTE
it Today!
Quento
Fly high with a fruit Fizzzz.
BRAND
Niru
Quento
Fly high with a fruit Fizzzz

## உயிரில் கலந்த உறவு




*"காதலி னாலுயிர் தோன்றும் - இங்கு*
*காதலி னாலுயிர் வீரத்தி லேறும்*
*காதலி னாலறி வெய்தும் - இங்கு*
*காதல் கவிதை பயிரை வளர்க்கும்*
*ஆதலி னாலிவள் கையை - பற்றி*
*அற்புத மென்றிரு கண்ணிடை யொற்றி*
*மோன நிலையிலிருந்தேன் - அவள்*
*மெய்மற மார்பினில் சாய்ந்து கிடந்தாள்"*

*-பாரதியார்*



எனது உடலிலோ - வண்ண வண்ணக் கோலமான ஒரு மத்தாப்பு வெடித்து - வெள்ளிச் சன்னங்களாக ஊனெங்கும் ஊடுருவிப் பரவி - மயிர்க்கால்கள் குத்திட்டு எழுந்து புளகாங்கிதம் அடைய வைத்தது!

எனது உள்ளமோ - இருளோடு கலந்து - காற்றோடு இணைந்து - வான வெளியில் பறந்து - ஞான ரதங்களில் மிதந்து - நட்சத்திரங்களுடன் பேசி - நிலவோடு சல்லாபித்து மீண்டும் பூமிக்கு வந்தது!

நான் என்னை மறந்து அவளைக் கட்டித் தழுவிய அந்நேரம் - காலச் சக்கரச் சுழற்சியில் ஒரு கண நேரந்தான்.

நடுநிசி வானத்தில் ஜெகஜ்ஜோதியாய் ஜ்வலிக்கும் தாரகை போல ஓர் ஒளிப் பிழம்பு உள்ளத்தில் உறைய - கோடானுகோடி ஆண்டுகளை, யுக யுகாந்திரங்களை அழுத்தி வைத்தாற்போன்ற ஒரு நொடிப் பொழுதில் உலகமே ஸ்தம்பித்து நிற்க நான் மனிதப் பிறவி எடுத்ததே இந்த ஒரு கண்இமைப் பொழுதின் ஆத்ம அனுபவத்திற்காகத்தானோ என அறிவு உரைக்க மெய் விதிர்த்து, கண்கள் பனித்து, உயிர் உருகி நின்றது!

அந்தப் பதுங்கு குழிக்குள்ளே -

காலங்களுக்கும், நேரங்களுக்கும், யுகங்களுக்கும், பிறவிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு மோன நிலையில் நான் மெய் மறந்து கிடந்தேன்.

நான் மோன மயக்கம் தெளிந்து முழு நினைவுக்கு வந்தபோது வெளியே குண்டுச் சத்தம் ஓய்ந்து பயான நிசப்தம் நிலவியது. வீதியில் வண்டிகள் ஓடும் சத்தமோ, மக்களின் பேச்சுக் குரலோ, பறவைகளின் கீச்சுக் குரலோ எதுவுமே காற்றில் மிதந்து வரவில்லை. இந்தப் பூமியிலோ - கொடுமையும், கொடூரமும் கருமையாகப் படர்ந்திருக்கும் அந்நேரம் - களங்கமில்லா வானவெளி பூரண சந்திர ஒளியில் பூரித்துக் கிடந்தது.

**இந்த இரவு அழகானது.**

**இந்த நிலவு அழகானது.**

**இங்கு வீசும் காற்று அழகானது.**

**இந்த மேகங்கள் அழகானவை.**

**இவை அனைத்தையும் விட அழகானவள் இவள்.**

**இவளைக் காட்டிலும் அழகானது இவள் காட்டிய காதல்!**

"கிருஷ், நான் இறந்து போக நேரிட்டால் உங்களை அணைத்தபடியேதான் எனது உயிர் பிரிய வேண்டும்" என்ற ஒரே ஒரு வார்த்தையில் அவள் வெளிப்படுத்திய அன்பின் ஆழத்தை என்னால் உணர முடிந்தது.

இந்த அழகு தேவதையின் மேல் எனக்கேற்பட்டிருக்கும் காதல் என்னுயிர் உள்ளவரை என்னில் உறைந்திருக்கும்.

இந்தப் பிறப்பில் மட்டுமல்ல; எத்தனை பிறப்புக்கள் வந்தாலும் - எத்தனை யுகங்கள் ஆனாலும் - இனிமேல் இவளைப் பிரிந்திருக்க என்னால் முடியாது என உணர்ந்தேன்.

இவளை நான் முதன் முதலாகக் கண்டபோது இவளது முக அழகால் வசீகரிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இவளது முக அழகைக் காட்டிலும் இவளது அக அழகு - மன அழகு - எத்தனையோ மடங்கு அதிக அழகானது என்பதை அப்பதுங்கு குழிக்குள் இருந்த கணத்தில்தான் என்னால் முழுமையாக உணர முடிந்தது. இதுதான் நிரந்தரமான - உண்மையான - அழியாத அழகு.

இவளைக் காதலிப்பது இந்தப் பிறப்பில் எனக்குக் கிடைத்த பேறு.

இவளைக் கண்கலங்காமல் காப்பாற்றுவது எனது வாழ்வின் தலையாய பணி.

### - 2 -

நாங்கள் பதுங்கு குழியை விட்டு வெளியே வந்து பின்புற வாசல் வழியாக சமையலறையை அடைந்தபோது வீடு இருளில் மூழ்கிக் கிடந்தது. மேசையிலிருந்த குமிழ் விளக்கைக் கொளுத்திவிட்டு அருகிலிருந்த லாந்தரை ஏற்றி எடுத்துக் கொண்டு வெளி ஹாலில் இருந்த ஹால் விளக்கையும் ஏற்றி வைத்தோம்.

பொன்னம்மா ஆன்ரி இன்னும் வீட்டிற்கு வந்து சேரவில்லை. சில நாட்களில் மாலையில் தங்கி நின்று 'ஓவர் ரைம்' செய்வது வழக்கம்; அன்றும் நேரம் கழித்து வருவதாக ஏற்கனவே தெரிவித்திருந்தார். அப்படி உழைக்காவிட்டால் செலவுகளைச் சமாளிக்க இயலாது.

குண்டு வெடிப்பு ஓய்ந்து கொஞ்சம் கொஞ்சமாக வீதியில் ஜனநடமாட்டம் ஆரம்பித்தது. ரயில் பாதை சந்திப்புக்கு அப்பால் பருத்தித் துறை வீதிக்கு அருகிலுள்ள ஆரிய குளத்தடியில் குண்டு வெடித்திருப்பதாக சனங்கள் பேசிக் கொண்டார்கள். அந்த இடத்தில் என்ன சேதமோ, எத்தனை உயிர்ப்பலியோ - போய்ப் பார்த்துவிட்டு வரலாம் எனப் புறப்பட்டேன்.

"தனியாய் போக வேண்டாம், நானும் உங்களோடு வருகிறேன்" எனப் புறப்பட்டாள் பிருந்தா.

"அம்மா வீடு வந்து எங்களைக் காணாமல் தேடமாட்டாரா?"

"அவவுக்கு எங்கே போகிறோம் என்றொரு 'நோட்' எழுதி ஹால் விளக்குக்குக் கீழே வைத்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டோம்.

எங்கள் வீட்டிலிருந்து ஆரிய குளம் அரை மைல் தொலைவில்தான் இருந்தது. நாங்கள் விக்ரோறியா ரோட்டால் சென்று பருத்தித் துறை வீதியில் ஏறியதுமே தூரத்தில் சனக் கூட்டம் நிற்பது தெரிந்தது. என்ன பயங்கர நிகழ்வானாலும் சனம் எப்படியோ கூடிவிடும்.

குளத்தின் வடக்குக் கரையில் வட்டமாகக் கூடியிருந்த சனக் கூட்டத்திற்குள்ளே நாங்களும் புகுந்து கொண்டோம். நிலத்தில் பன்னிரண்டடி விட்டத்தில் ஆழமானதொரு குழி. அக்குழியைச் சுற்றிவர இருந்த மண் கருகிக் கறுப்பாய்க் கிடந்தது. குழிக்குள் இருந்து வெளிவந்து கொண்டிருந்த கரும்புகை மேலெழுந்து பரந்து வானத்தை மறைத்தது. குழியின் சுற்றாடலில் வெடித்துச் சிதறிய வெண்கலத் துண்டுகள் பல நூறு மீட்டர் தூரத்திற்குப் பரவிக் கிடந்தன.

நல்ல வேளை குண்டு வெடித்த குழிக்கருகாமையில் வீடுகள் ஏதும் இருக்கவில்லை, எனவே பொருட்சேதமோ உயிர்ச் சேதமோ இல்லை. குழியின் பருமனைக் கொண்டு பார்த்தால் போடப்பட்டது பெரியதொரு குண்டாக இருக்க வேண்டும். சன நெருக்கம் அதிகமான இந்நகரத்தில், ஒரு குடியிருப்புப்

பகுதியில் இக் குண்டு வெடித்திருக்குமேயானால் எத்தனை மக்கள் தம் உயிர்களை இழந்திருப்பார்கள்? உலகத்தில் எத்தனை நாடுகளில் தங்கள் சொந்த மண்ணையும் மக்களையும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே இப்படி பொறுப்பில்லாமல் தனது இராணுவத்தைக்கொண்டு ஏன் அழித்து வருகிறது?

## - 3 -

அன்றிரவு உறக்கம் வர மறுத்தது. இன்னதென்று விளங்காத ஒரு பாரம் மனசை அழுத்திக் கொண்டிருந்தது.

காரணம், பிருந்தா.

உலகமறியாத ஒரு இளம் பெண்ணை - அவள் தனிமையில் இருந்த சமயம் கட்டித் தழுவியது தவறான, நாகரிகமற்ற செயலல்லவா என ஒரு மனசு சொல்லியது.

இதில் என்ன தவறு இருக்கிறது? நான் காதலிக்கிற பெண்ணை - கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணை - கட்டித் தழுவியதில் என்ன தவறு? அதற்கும் மேல் தவறாக ஏதும் செய்யவில்லையே? என்றது மனசின் இன்னொரு பக்கம்.

திங்கள் தன் கதிர்களால் பூமியைத் தழுவுகிறது. சந்திர ஒளி கடலைத் தழுவி, அலை அலைகளை அடித்து ஆரவாரிக்கின்றன. இயற்கையே ஒன்றையொன்று தழுவி மகிழும்போது நாம் ஒருவரை ஒருவர் தழுவி மகிழ்வதில் தவறேதும் இல்லை என் என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

அதிகாலையில் தான் - இரவிரவாக நெளிந்து, வளைந்து புரண்டதன் பின்னர் - தூக்கம் வந்தது. அந்த நேரம் பார்த்து அறைக்கதவை யாரோ தட்டினார்கள்.

கோப்பி மணம் கமகமத்தது.

காரணம், பிருந்தா,

இருளை அள்ளிப் பூசிக்கொண்டு எதிரே வந்து நிற்கும் மின்னலைப்போல, அந்தக் கருநீல 'ஹவுஸ் கோட்டில்' தோற்றம் தந்தாள் அவள். தங்கக் கரங்களிலே ஏந்திய கோப்பிக் கோப்பையிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

அவளுடைய குறுகுறுப்பான விழிகள் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன. இதழ்கள் செய்ய வேண்டிய சிரிப்பை அந்த விழிகளே செய்தன. பொங்கி வரும் பெருநிலவு போல அவளது முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சரத்காலச் சந்திரிகையின் ஒளியை மதுவாக அருந்தி சக்ரவாகப் பறவைகள் குதூகலித்திருப்பதாக மகாகவி காளிதாசன் கூறுவான். நானோ இந்தத் தேவதையின் மதிமுக அழகை மதுவாக மாந்தி, அதன் மயக்கத்தில் அமிழ்ந்து கிடந்தேன்.

"நான் அம்மாவிடம் சொல்லிவிட்டேன்" என்றாள்.

"என்ன சொன்னாய்?"

"நாம் ஒருவரை ஒருவர் காதலிக்கும் விஷயத்தை"

"அவர் என்ன சொன்னார்; கோபத்தில் உன்னை ஏசியிருப்பாரே"

"அப்படியொன்றுமில்லை, "நான் எதிர்பார்த்ததுதான்" என்று மட்டும் சொன்னார். அவரது முகபாவம் வேறு எதையும் காட்டவில்லை."

"அப்படியானால் இந்த உறவை ஆமோதிக்கிறாரா?"

"தெரியாது"

"அவர் கோபிக்காமல் இருந்ததே நல்ல அறிகுறி. நாளடைவில் இதை ஏற்றுக்கொண்டு விடுவார்" என்றேன்.

வழக்கமாக காலை எட்டு மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் எனது வார்ட்டில் இருப்பேன். எனது பொறுப்பில் விடப்பட்டிருக்கும் நோயாளர்களையெல்லாம் காலை எட்டு மணி முதல் பத்து மணிக்குள் பார்த்து முடித்துவிடுவேன்.

அன்று வார்ட்டுக்கு வந்து சேரவே மணி எட்டரை ஆயிற்று. பன்னிரண்டு மணிக்குத்தான் 'வார்ட் ரவுண்டு' முடிந்தது.

காரணம், பிருந்தா,

அவளைப் பற்றிய இனிமையான நினைவுகளே நெஞ்சம் முழுக்க வியாபித்துக் கிடந்தன. வழக்கமான செயல்களில் மனதை ஒன்று குவித்து ஈடுபட முடியவில்லை.

அன்று பிற்பகல் ஓப்பரேஷன் தியேட்டரில் சேர்ஜன் சுந்தரநாதனுக்கு சத்திர சிகிச்சையின்போது உதவியாளனாக 'அஸிஸ்ட்' செய்ய வேண்டியது எனது முறை. அஸிஸ்ட் செய்யக் கூடிய மனநிலையில் நான் இல்லை; தவறுகள் செய்துவிடுவேன் போலப்பட்டது.

காரணம், பிருந்தா.

நண்பன் சிவானந்தனிடம் எனது நிலைமையைச் சொன்னேன்.

"போச்சுடா! உனக்குப் பைத்தியம் முத்திப் போச்சுடா!" என்றான்.

எனக்காக தான் தியேட்டருக்குப் போய் 'அஸிஸ்ட்' செய்வதாகச் சொன்னான்.

பிற்பகல் வேலைகளை விரைவாக முடித்துக்கொண்டு வீடு திரும்பினேன்.

"பிருந்தா! பிருந்தா! பிருந்தா என் காதலி!" என்று ஊர் உலகம் எல்லாம் கேட்கும்படி உரத்த குரலில் கத்தவேண்டும் போலிருந்தது.

உள்ளே பிருந்தா இருப்பாள் என எண்ணி வீட்டின் கதவைத் திறந்து உட்சென்ற போது—

வெளி ஹாலில் பொன்னம்மா ஆன்ரி இருந்தார்.

என்னைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்பது புரிந்தது.

"ஹலோ ஆன்ரி, நீங்க இன்றைக்கு வேலைக்குப் போகலையா?" என்று கேட்டேன்.

"போனனான்; வேளைக்குத் திரும்பி வந்துவிட்டேன். இருங்கோ தம்பி, கொஞ்சம் உங்களோடை கதைக்க வேணும்"

சோபாவில் உட்கார்ந்தேன்.

"பிருந்தா எல்லாம் சொன்னா. அவள் உலகம் அறியாத இளம் பெண், யார் எதைச் சொன்னாலும் உடனே நம்பி விடுவாள். நீங்கள் அவளைக் காதலிப்பது கல்யாணம் செய்யும் நோக்கத்துடன் தானே?"

அவர் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே இப்படிக் கேட்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

"கட்டாயமாக ஆன்ரி; கல்யாணம் செய்து கொள்வது மட்டுமல்ல - அவளைக் கடைசி வரைக்கும் கண்கலங்காமல் பார்த்துக்கொள்வேன்."

"உங்கள் அம்மா இதற்கு மறுப்பேதும் தெரிவிக்கமாட்டாரா?" ஆதங்கத்துடன் கேட்டார்.

"அம்மா மிக்க நல்லவர், எனது விருப்பப்படியே எல்லாம் விட்டுவிடுவார். அவர் எனது அக்காவுடன் வெள்ளவத்தையில் வசிக்கிறார். பொருளாதார ரீதியாக அவர் என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. அப்பாவின் பென்ஷன் அவருக்கு மிச்சம்... அவரிடமிருந்து மறுப்பேதும் வராது."

"நல்லது தம்பி; உங்களிடம் எனக்கு நம்பிக்கையிருக்கு. இந்த யாழ்ப்பாண மண் நாங்கள் பிறந்த பூமிதான்... ஆனால் இங்கே இன்று நடக்கும் போராட்டங்களையும், கலவரங்களையும், கடத்தல்களையும், பலாத்காரங்களையும் பார்க்கும் போது ஒரு நல்ல எதிர்கால வாழ்க்கை அமைப்பதற்கு இது உகந்த இடம் போல் எனக்குப்படவில்லை. நீங்கள் ஏற்கனவே பிளான் பண்ணினமாதிரி அவளைக் கல்யாணம் செய்து கொண்டு இங்கிலாந்துக்கோ, அமெரிக்காவுக்கோ போய் விடுவது நல்லது என நினைக்கிறேன்" என்றார் பொன்னம்மா ஆன்ரி.

"அவள் ஆசையாக 'ஏ-லெவல்' பரீட்சை எடுத்துப் பாஸ் செய்ய வேண்டும் என விருப்பப்படுகிறாள். அதையும் பார்த்துவிட்டு முடிவு செய்வோம்" என்றேன்.

நான் அவரோடு பேசி முடித்துவிட்டு எனது அறைக்குப் போக எழுந்த சமயம் யாரோ வெளிக்கதவைத் தட்டினார்கள்.

வெளிக்கதவைத் திறந்து பார்த்போது நண்பன் பாலகுமார் நின்று கொண்டிருந்தான். அவனை உள்ளே அழைத்துச்சென்று உட்காரவைத்தேன். அவன் பொன்னம்மா ஆன்ரிக்குப் பரிச்சயமானவன். எனக்கு இந்த வீட்டில் வாடகைக்கு அறை பிடித்துத் தந்ததே அவன்தான். இங்கே நகரத்தில் இரண்டாம் குறுக்குத் தெருவில் ஒரு வாடகை வீட்டில் தனது தாயாரோடு குடியிருந்தான். அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

"என்ன அந்தி பூத்தாற்போல இந்தப் பக்கம்?" என்றேன். என்னைப் பார்ப்பதற்காக எனது வார்ட்டிற்குப் போனதாகவும் நான் வீட்டிற்குப் புறப்பட்டு வந்துவிட்டேன் என அறிந்ததும் நேராக இங்கே வந்திருப்பதாகவும் தெரிவித்தான்.

பொன்னம்மா ஆன்ரி எங்கள் இருவருக்கும் தேனீர் போட்டுக் கொண்டு வந்து தந்தார். தேனீரைப் பருகிக் கொண்டே தான் வந்ததற்கான காரணத்தைக் கூறினான்.

சில வாரங்களுக்கு முன்னால் "எனக்கு ஒரு 'செகண்ட் - ஹாண்ட்' (ஏற்கனவே உபயோகித்த) மோட்டார் கார் கிடைக்குமா என்று பார்" எனச் சொல்லிவைத்திருந்தேன். தனது வீட்டிற்கு அருகாமையிலிருக்கும் 'ரிட்டையர்ட் எஞ்சினியர்' ஒருவரிடம் ஒரு பழைய 'ஒஸ்டின் - 30' கார் இருப்பதாகவும், பணமுடை காரணமாக அதை விற்க விரும்புகிறார் என்றும், எனக்கு வேண்டுமானால் அதை வாங்கித் தருவதாகவும் கூறினான்.

"இப்போது பெற்றோல் கிடைப்பது ரொம்ப கஷ்டம் - காரை வாங்கி ஓட்ட முடியுமா?" கேட்டேன்.

"இக்காரில் பெற்றோலோடு மண்ணெண்ணெய் கலந்து ஓட்டலாம், பெற்றோல் கிடைக்காவிட்டால் மண்ணெண்ணெயில் மட்டும் கூட இதை ஓட்ட முடியும்"

"அது எப்படி முடியும்?"

"காரின் பிஸ்ரன்களை 'ரீ போரிங் (Re-boring) செய்து மண்ணெண்ணெயில் ஓடக்கூடியதாக இங்குள்ள உள்ளூர் இயந்திரக் கலைஞர்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள். கிடைக்கக் கூடிய பொருளுக்கேற்ப தொழில்நுட்பம் அமைக்கப்படுகிறது"

"ரொம்பக் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே?"

"உனக்குத் தெரியுமா கிருஷ். இங்கிலாந்தில் ஒஸ்ரின் - A40 கார் தயாரித்த கம்பெனி இன்று இல்லை. A40 கார்களை பிரித்தானிய ரோட்டுகளில் பார்க்க முடியாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் மிகப் பொதுவாகக் காணப்படும் கார் இந்த A40 தான். அதன் எஞ்சினையே இவர்களால் புதிதாக நிர்மாணிக்க முடியும். ஒவ்வொரு பகுதியும் பழுதாகும்போது இவர்கள் புதிய 'பார்ட்ஸை' 'லேத்' மெஷினில் தாங்களாகவே கடைந்து செய்துவிடுவார்கள். அத்தனை திறமையும் இங்கே வீணாக விரயமாகிக் கொண்டிருக்கிறது" என்றான் பாலகுமார்.

"A-30க்கு என்ன விலை எதிர்பார்க்கிறார்?"

"இருபத்தெட்டாயிரம் கேட்கிறார், இருபத்தைந்திற்குப் பெற்றுவிடலாம்."

நான் வரும் போது கையில் கொண்டு வந்த

பணமும், கடந்த ஏழு மாதமாக சம்பளத்தில் சேமித்த பணமும் சேர்த்து முப்பதினாயிரம் வரையில் என்னிடம் இருந்தது.

"சரி ஏற்பாடு செய்" என்றேன்.

இரண்டு நாட்கள் கழித்து பிருந்தாவனத்தின் போர்ட்டிகோவில் EN4662 இலக்கமிட்ட A30 கார் நின்றது. அதைக் கழுவி பொலிஷ் செய்து பளபளப்பாக்கி வைத்திருந்தேன். பிற்பகல் 4.30 மணிக்கு பிருந்தா கல்லூரி விட்டு வீடு வரும் போது நான் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். கறுப்பு நிறப் பொலிஷ் போட்டுப் பளபளத்த காரை உற்றுப் பார்த்தாள். ஒரு தடவை அதைச் சுற்றி வந்தாள். பின் வெளிக் கதவைத் திறந்து கொண்டு மாடிப் படிகளில் படபடவென ஓடி வரும் சத்தம் கேட்டது.

வழக்கமாக அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வருபவள் அன்று படாரென்று திறந்து கொண்டு உள்ளே வந்தாள். நான் படுக்கையில் நித்திரை செய்வது போலப் பாசாங்கு செய்து கொண்டிருந்தேன்.

என்னை உலுப்பி எழுப்பினாள்.

"விட்டுக்கு யார் வந்திருக்கிறார்கள்?"

"ஒருத்தரும் வரயில்லை. நான்தான் இங்கே படுத்திருக்கிறேன்; உங்க அம்மா இன்னும் வேலை முடிந்து வீடு வரலை"

"நீங்க பகலிலை படுக்கிறதில்லையே; இப்போது ஏன் படுத்திருக்கிறியோ?" அதட்டிக் கேட்டாள்.

"அசதியாக இருந்தது, படுத்து உறங்கிவிட்டேன்"

"யாருடைய கார் அது?"

"ஆஹ்வ்" என்று கொட்டாவி விட்டேன்.

"யாருடைய கார் என்று கேட்டேன்?"

"எந்தக் காரைக் கேட்கிறாய்?"

"அதோ போர்ட்டிக்கோவில் நிற்குதே கறுத்தக் கார்?

"அது யாரோ ஒரு பெண்ணின் கார்"

"காரைக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போகிற அளவுக்கு எங்களுக்கு ஒரு பெண் உறவினரொருவரும் இல்லையே."

"உங்களுக்குப் பரிச்சயமான பெண்தான்" என்றேன்.

"எப்படிப் பரிச்சயமென்று தெரியும் உங்களுக்கு? ஏதாவது பெயர் சொன்னாளா?

"ஏதோ 'பிருந்தா' என்று சொன்ன ஞாபகம்" என்றேன். அவளது மூளை நரம்புகள் துரித கதியில் வேலை செய்தன. ஒரு மின்னல் பளீரென மின்னி மறைந்தது.

இருகைகளாலும் என் நெஞ்சில் படபட என்று குத்தினாள்.

"அம்மா வலிக்குது" என்று கத்தினேன்.

"நீங்கள் கார் வாங்கிவிட்டீர்கள். எனக்கு இதைப்பற்றி இந்த நிமிஷம் வரை நீங்கள் எதுவுமே சொல்லயில்லை. அதற்கான தண்டனைதான் இந்தக் குத்து"

"இது எனது கார் இல்லை - பிருந்தாவிற்காக வாங்கிய கார் - பிருந்தாவின் கார்" எனச் சமாதானம் சொன்னேன்.

மறு வாரம் வீட்டுக்குப் பின்னால் போடப்பட்ட ஒரு புதிய ஷெட்டில் அந்த A - 30 அமர்ந்திருந்தது.

- 4 -

இரவு பதினொரு மணியிருக்கும்.

நாங்களெல்லாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தோம்.

வீட்டின் வெளிக்கதவை யாரோ பலமாகத் தட்டிக் கொண்டிருந்தார்கள். திடுக்கிட்டு விழித்த நான், இந்த அகால நேரத்தில் யார் இப்படிக் கதவைத் தட்டுகிறார்கள் என எண்ணிக் கொண்டு தலையணையின் கீழ் இருந்த பட்டறி டோர்ச் லைட்டை எடுத்துக் கொண்டு ஜன்னலண்டை சென்றேன்.

வீதி விளக்கெல்லாம் அணைந்து இருள் எங்கும் மண்டிக்கிடந்தது.

ஜன்னல் வழியே டோர்ச் லைட்டை அடித்து "யாரங்கே?" என்று கேட்டேன்.

"நான்தான் ரவி, கொழும்பிலிருந்து வருகிறேன், வீட்டில் பொன்னம்மா மாமி இருக்கிறாரா?" என்றான் கீழே இருந்தவன்.

எனது நெஞ்சில் ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டதுபோல ஓர் அதிர்ச்சி!

பொன்னம்மா அன்ரிக்கு கொழும்பில் ஒரு அண்ணன் இருப்பதாகவும், அவருக்கு ரவிகுமார் என்று ஒரு மகன் இருப்பதாகவும், பிருந்தாவை அவனுக்குக் கட்டிக் கொடுக்கும் எண்ணம் இருப்பதாகவும் முன்னம் ஒரு தடவை ஆன்ரி கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

இவன் எனக்குப் போட்டியாக வந்திருப்பானோ?

எனது கண்முன்னே என் பிருந்தாவை அபகரித்துக் கொண்டு போய்விடுவானோ?

ஒரு பெண்ணின் தூய்மையான அன்பு என்பது வாழ்க்கையில் மனிதன் அடைகிற விலை மதிப்பற்ற பவித்திரமான பொருட்களில் ஒன்று. எந்த விலை மதிப்பற்ற பொருளையும் சிக்கலோ, பிரச்சனையோ, போராட்டமோ இல்லாமல் அடைய முடியாது என்பது வாழ்க்கைத் தத்துவம்.

ஒரு போராட்டத்திற்கு என்னைத் தயார்படுத்திக் கொண்டேன்.

(தொடரும்)





# நூல் வெளியீட்டு விழா

கனடா ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் கோவிலூர் செல்வராஜனின் "இல்லாமல் போன இன்பங்கள் " நூல் வெளியீடும்,அவரது மெல்லிசை நிகழ்ச்சியும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. அவருடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்தவர்களும்,இன்றைய கனடா ஊடக துறை "ஜாம்பாவான்களுமான" திரு.பி. விக்னேஸ்வரன்,(TVI)

திரு.இளையபாரதி, (CTBC) திரு. வி.என். மதியழகன் (TVI)திரு.எஸ்.திருச்செல்வம்,(தமிழர் தகவல்) திரு.லோகேந்திரலிங்கம்,(உதயன்) திரு. பொன்.சுந்தரலிங்கம்,திருமதி.மனோகரி(சதாசிவம்)

திருமதி ருத் கே.எஸ்.ராஜா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.நிகழ்ச்சியை தலைமைதாங்கி நடத்தினார்.கல்கிதாசன் எஸ்.பி கனகசபாபதி அவர்கள்.

ஆய்வுரைகளை முறையே வித்வான் ஞானரெத்தினம் ,கலாநிதி பார்வதி கந்தசாமி,அஜந்தா ஞானமுத்து,ஆகியோர் நிகழ்த்தினார்கள்.கனடாவில் உள்ள தமிழ்மக்களால் சார்பாக கோவிலூர் செல்வராஜனுக்கு "திருவூர்க் கவிராயர்" என்ற ஒரு

பாராட்டு விருதும் திரு.பி.விக்னேஸ்வரன் அவர்கள் மூலமாக வழங்கப்பட்டது.இலக்கியர்.மு.தங்கராஜா, ஆசியுரை வழங்கினார்.



இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் திரு.நவம் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கனடாவில் ஒரே மேடையில் ஒரு நூல் வெளியீட்டு விழாவிற்கு இப்படி ஊடக வியலாளர்களும்,பத்திரிகை துறை சார்ந்தவர்களும் ஒன்றாக கூடுவதென்பது முடியாத காரியம்.அத்தோடு இசையரசர் பொன்.சுந்தரலிங்கம்,மனோகரி போன்றோர் வருவதும் மிக கடினம்.ஆனால் எல்லோரும் கோவிலூர் மீது கொண்ட அன்பின் நிமித்தம் இந்த விழாவிற்கு வந்திருந்தமை அவர் இவர்கள்மேல் வைத்திருந்த பாசத்தை காட்டுகின்றது.

கோவிலூர் செல்வராஜனின் மெல்லிசைக் கச்சேரியும்..இடம்பெற்றது..கனடாவில் உள்ள சென்னை ரிதம் குழவினர் இசை வழங்கினார்கள்.கோவிலூர் செல்வரஜனுடன் சேர்ந்து திரு.தங்கா.,குழந்தைவேல்,திருமதி ரஞ்சினி தங்கா ஆகியோர் பாடினார்கள். ◆

# என்ன உலகமடா?



DOCTOR

# ஸ்ரீதரன்

## அசிங்கம்



அன்று
திங்கட்கிழமை, நேரம்
காலை பதினொரு மணி. அந்த பிரபல
பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வகுப்பறையொன்றிஹ்;
- சமுதாய எழுச்சி-என்ற தலைப்பில் ஒரு பேராசிரியர் தனது
மாணவர்களுக்கு விரிவுரை நடாத்திக் கொண்டிருக்கிறார்.

சமூக விதிகள் - மதக் கோட்பாடுகள் - கலாச்சாரச் சடங்குகள் - இவற்றின் பெயரால் கடந்த காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற சில அசிங்கமான விடயங்களை - காட்டுமிராண்டித் தனமான காரியங்களை - பைத்தியகாரத் தனமான செய்கைகளை - மாணவர்களுக்கு உணர்ச்சி பூர்வமாக கூறிக்கொண்டிருக்கிறார்.

உடன்கட்டை ஏறுதல் என்றால் என்ன என்று தெரியுமா உங்களுக்கு?

ஒரு ஆண் இறந்து போனால் அவனது மனைவியும், அவனுடன் இறக்க வேண்டும். எரிகின்ற சிதையில் அவள் உயிரோடு குதிக்க, வேண்டும். யாராவது இதற்குப் பயந்தால் அவள் ஒழுக்கம் கெட்டவளாக வெறுத்து ஒதுக்கப்பட்டாள். ஒரு பெண் தனது கணவனின் மீதுள்ள காதலை அவளின் இந்த உடன் கட்டை ஏறும் செயல் நிரூபிப்பதாக கூறி அவளின் உறவினர்கள் இதை கொண்டாடினார்கள். பத்தாயிரம் வருடங்களாக இந்த அசிங்கம் தொடர்ந்தது.

எவ்வளவு அசிங்கமான காட்டுமிராண்டித்தனம்!

பேராசிரியர் மாணவர்களின் அபிப்பிராயத்தை - ஆமோதித்தலை எதிர்பார்க்கிறார். யாருமே சிறிது நேரத்திற்கு எதுவுமே பேசவில்லை. திடீரென ஒரு மாணவன் கூறினான்:

அசிங்கமான காட்டுமிராண்டித்தனங்கள் கடந்த காலத்துக்கு மட்டும் சொந்தமானவையல்ல. அவை காலத்தை கடந்து செயல்படும் மனிதனின் பிறவிக் குணங்கள்.

எங்கோ பிறந்து - எப்படியோ வளர்ந்த ஒரு ஆணையும் - ஏதோ நினைத்து எதையோ எதிர்பார்த்து வளர்ந்த ஒரு பெண்ணையும் - பெரியவர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் ஒரு முட்டாள் கூட்டம் - அதைச் சொல்லி இதைச் சொல்லி - கல்யாணம் என்ற பெயரில் ஊரைக் கூட்டி - அம்மியை மிதிக்க வைத்து அருந்ததியைக் காட்டி - உனக்கு இவள் தான் என்றும் இவளுக்கு நீ தான் என்றும் அவர்களைச் சேர்த்து வைத்த பின் பிடித்ததோ பிடிக்கவில்லையோ - ஊருக்கு பயந்து உலகத்திற்கு பயந்து - செக்கு மாடுகள் போல - தங்கள் சொந்த ஆசை அபிலாசைகளை மறந்து விட்டு - திருவள்ளுவர் கூறிய இல்லறம் நடத்துகிறோம் என்று முட்டாள்தனமாக பிதற்றிக் கொண்டு - தொடரவும் முடியாமல் - முறிக்கவும் முடியாமல் - ஆயுள் பூராவும் இருவர் அனுபவிக்கும் ஆயுட்கால இம்சையைவிடவா சில நிமிடங்களே நிலைக்கும் உடன்கட்டை காட்டுமிராண்டித்தனம்!

ஜனனத்திலிருந்து மரணம் வரை - அசிங்கத்தை தவிர இங்கு வேறு எதைத் தான் செய்கிறான் மனிதன்?

## உத்தரவாதம்



மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்யும் பிரபல ஸ்தாபனமொன்றில் பிரதம விற்பனை பிரதிநிதி ரவி - அலுவலகத்தில் உள்ள தனது ஆசனத்தில் அமர்ந்து எதிரே இருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கு மிகவும் உற்சாகத்துடனும் பெருமையுடனும் கூறுகிறார்:

- எமது ஸ்தாபனம் உற்பத்தி செய்யும் எல்லா மின்சார உபகரணங்களுக்கும் நீண்ட கால உத்தரவாதம் உண்டு.
- தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஐந்து வருட உத்தரவாதம்.
- குளிர்சாதனப் பெட்டிகளுக்கு ஏழு வருட உத்தரவாதம்.
- துணி துவைக்கும் இயந்திரங்களுக்கு பத்து வருட உத்தரவாதம்.
- மின் அடுப்புகளுக்கு ஆயுட் கால உத்தரவாதம்.

ரவி கூறியவற்றை அலட்சியமாக கேட்டபின் வாடிக்கையாளர் கூறுகிறார்:

இந்த உபகரணங்களை உபயோகிக்க இருக்கும் எனது வாழ்க்கைக்கு ஒரு நிமிட உத்தரவாதம் கூட இல்லாத போது - இவற்றிற்கு வருடக் கணக்கில் உத்தரவாதம் இருப்பதில் எனக்கு எந்தவித அர்த்தமும் இருப்பதாக தெரியவில்லை.

அன்று மாலை, வேலை முடிந்து வீட்டிற்கு காரில் செல்லும் போது தன் அருகே அமர்ந்திருக்கும் மனைவிக்கு ரவி கூறுகிறார்:

ஐந்து வருட உத்தரவாதமுள்ள காரை ஓட்டிச் செல்லும் ஐந்து நொடி கூட உத்தரவாதமற்ற மடையன் நான்.

ரவி மட்டுமா மடையன்?



## ஊர்க்குருவி

தாய் குருவியும் - சமீபத்தில் தான் குமாஸ்தா ஆனந்தன் வீட்டுக் கூரையில் பொரித்த அதன் ஐந்து குஞ்சுகளும் - வானத்தில் சுகமாகப் பறந்து கொண்டிருக்கின்றன.

உயரப் பறக்கும் பருந்து ஒன்றைக் கண்ட குஞ்சுகள் - குமாஸ்தா வீட்டில் அடிக்கடி ஒலிக்கும் ஒரு பழமொழியை நினைவு கூர்ந்து தாயிடம் அதற்கு விளக்கம் கேட்டன. பறப்பதை தற்காலிகமாக நிறுத்திவிட்டு ஒரு மரத்தில் அமர்ந்து தன் குஞ்சுகளுக்கு பின்வருமாறு கூறியது தாய் பறவை.

உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? குமாஸ்தா வீட்டில் இந்தப் பழமொழியை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட முட்டாள் தனமான பழமொழிகளை மனிதர்களின் வீட்டில் மட்டுமே நீங்கள் கேட்க முடியும்.

இயற்கை உருவாக்கிய இரு உயிரினங்களை - இது பருந்து - இது ஊருக்குருவி என்று பிரித்துப் பார்த்து - உயரப் பறத்தல் ஒரு உன்னதமான விடயம் - தாழப் பறப்பது ஒரு தாழ்ந்த விடயம் என்று முடிவு கட்டி - பருந்து ஒரு உயர்ந்த பறவை - ஊர்க்குருவி ஒரு தாழ்ந்த பறவை என்று ஒப்பீடு செய்து - தாழ்ந்திருப்பது உயர்ந்த இடத்திற்கு முன்னேற முயற்சி செய்வது இயல்பு - என்று ஏதேதோ கற்பனை செய்து - இது போன்ற எத்தனையோ முட்டாள்தனமான பழமொழிகளை - தங்கள் அறிவீனங்களை - பலவீனங்களை - பறை சாற்றும் பழமொழிகளை இயற்றி இருக்கிறார்கள்.

இவற்றை பிரதிபலிக்கும் முட்டாள்தனமான செய்கைகளின் தொகுப்பே அவர்களின் வாழ்க்கை.

தான் யார் என்று தனக்கே தெரியாமல் - தான் ஓட்டும் காரின் மூலம் - தான் வசிக்கும் இடத்தின் மூலம் - தான் அணியும் உடையின் மூலம் - தனக்கு ஒரு போலித் தராதரத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறது ஒரு கூட்டம்.

தான் யார் - தனது தேவை என்ன - என்று பகுத்தறியாமல் - யாரோ ஒருவருடைய தேவைகளை தனது தேவைகளாக்கிக் கொண்டு - அந்தத் தேவைகளை அடைவதற்காக இரவு பகலாக கஷ்டப்படுகிறது இன்னொரு கூட்டம்.

நான் இருக்கும் இடத்தால் - நான் பாவிக்கும் பொருட்களால் - அந்த இடத்திற்கு - அந்தப் பொருட்களுக்கு பெருமை வரவேண்டுமே தவிர எதிர்மறையாக இருக்கக் கூடாது என்று எந்த மனிதனும் சிந்திப்பதில்லை. இதனால் தான் அவர்களிடையே தேவையற்ற போட்டிகள் - பொறாமைகள் - சண்டைகள்!

குருவியாக இருப்பதுதான் குருவிக்குப் பெருமை! பருந்தாக இருப்பதுதான் பருந்துக்குப் பெருமை!

உயரப் பறக்க வேண்டிய தேவை ஊர்க்குருவிக்கில்லை!

ஊர்க்குருவி பருந்தாக விரும்புவதுமில்லை!

# ACCESS TUTORS ACADEMY

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் தரமான கல்விக்காகவும் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்காகவும் ஒரே கூரையின் கீழ் புதிய கல்வி நிறுவனம்

**Revision வகுப்புகள் February நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது**

**GCE - AS and A2, GCSE (ALL EXAM BOARD IN UK)**

*LONDON மாநகரில் பிரசித்தி பெற்ற தொடர்ந்து முன்னிலை வகிக்கும் ஆசிரியர்களால் சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.*

ACCESS TUTORS ACADEMY
இரு இடங்களில்

CHESSINGTON BUSINESS CENTRE
COX LANE, CHESSINGTON, KT 9 1 SD

272 MITCHAM ROAD
TOOTING, LONDON, SW 17 9NT

TEL : 0203 0200 035
EMAIL : info@accesstutors.co.uk

மேலதிக விபரங்களுக்கு

UTHAYANAN 07747794358 | ASOGAN 07968178698 | THAS 07956317920 | YOGA 07956481569




## அவுஸ்திரேலிய ஆசை உயிரைப் பறித்தது!

அவுஸ்திரேலியாவுக்கு போய், நிம்மதியாக வாழலாம் என்ற பலநூறு கனவுகளோடு, அங்கு மிங்குமாகப் புரட்டிய லட்சங்களை செலுத்தி காத்திருந்தார். போய்ச் சேர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன், தொழில் வாய்ப்பின்றி, காலம் ஓடியதால், விரக்தி அடைந்து நஞ்சருந்தி வாழ்வை முடித்துக் கொண்டார். மட்டு. சித்தாண்டி, விபுலானந்தர் வீதியில் வசிக்கும் சுப்பிரமணியம் குண நாயகம் (33வயது) என்ற இளைஞரே சமீபத்தில் இப்படித் தற்கொலை செய்து கொண்டவராவார்.



**'உதவும் கரங்கள்'** லண்டனில் சமீபத்தில் நடத்திய பிரமாண்டமான விழாவில் ஆடல், பாடல், பேச்சு என்று போட்டி நிகழ்ச்சிகளை சிறார்களிடையே நடத்தியிருந்தது. கீழ் பிரிவுப் பாட்டுப் போட்டியில் முதலாவது பரிசான தங்கப் பதக்கத்தை செல்வி ஆயகி தவராசக் குமாரன் தனது பரிசை விழாவில் சிறப்புப் பாடகராகக் கலந்து கொண்ட டி.எம்.எஸ். செல்வகுமாரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார். பேச்சுப் போட்டியிலும் மூவருக்குக் கிடைத்தது. முழுநாள் விழாவையும் அமைப்பாளர் சந்திரமோகன் சிறப்பாக நடத்தி முடித்திருந்தார்.


**Guaranteed savings for your home!**

THE UTILITY WAREHOUSE DISCOUNT CLUB

Save money - or get 'Double the Difference' Price Promise means you could benefit from:

- The UK's cheapest Home Phone and Broadband
- The UK's cheapest Mobile service
- The UK's cheapest standard Gas and Electricity

SAVE

For full details, Contact:
Authorised Distributor For The Utility Warehouse Discount Club
Maha Sutha 0794 7471 529

**Make money by helping people save money!**

- No stock to carry
- Products that everyone uses, every day
- Up-front bonuses
- Full or Part time
- On-going Commission
- Full training and support - free of charge
- British PLC, Listed on the London stock exchange

JOINING FEE NOW JUST £100

For full details, Contact:
Authorised Distributor For The Utility Warehouse Discount Club
Maha Sutha 0794 7471 529
sikaram@utilitywarehouse.org.uk
www.utilitywarehouse.org.uk/sikaram

»»»»» கே.ஜி. மகாதேவா



# பிரமாண்டமாக நடைபெற்ற சென்னை புத்தகத் திருவிழா!



உளர்கூடி தேர் இழுத்தமாதிரி, 'புத்தகப்புழுக்கள்' ஒன்று சேர்ந்து நூல் 'நெய்து' கோபுரம் எழுப்பி வாசகர் திருவிழா கொண்டாடியிருக்கிறார்கள் சென்னையில்! சும்மா சொல்லக்கூடாது, பன்னிரண்டு நாட்கள் முழுவதும் வாசகர்களை வரவேற்ற இப்புத்தக கண்காட்சி சனி, ஞாயிறு நாட்களில் இருமடங்காகி, வாசகர்கள் மத்தியில் திணறித்தான் போய் விட்டது!. பல பல ஆயிரம் புத்தக பக்தர்கள்!

தென் இந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) புள்ளிவிவரப்படி; இரண்டு லட்சம் சதுர அடி பரப்பளவில் 777 அரங்குகளைக் கொண்டிருந்த புத்தக கண்காட்சியில் தமிழ், ஆங்கில பதிப்பாளர்கள் என்று 757 பேர் பங்கு கொண்டிருந்தனர். ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தலைப்புகளில், ஐந்து கோடிக்கும் மேற்பட்ட புத்தகங்கள், குறுந்தகடுகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. கடந்த மாதம் 10-ம் திகதி முதல் 22-ம் திகதிவரை நடைபெற்ற புத்தக காட்சியில் தினமும் கவியரங்கம், உரையரங்கம், கலை நிகழ்ச்சிகள், குறும்படங்கள் திரையீடு என்று நிகழ்ச்சிகள் களை கட்டின. 777 அரங்குகளும் எட்டுப் பிரிவுகளாக்கி, இவற்றுக்கு தமிழறிஞர்கள் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.

புத்தக கண்காட்சியின் முதல் நாள் விழாவில், பலதுறைகளைச் சேர்ந்த எழுவருக்கு சிறப்புவிருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த தமிழறிஞருக்கான இந்த ஆண்டு விருது அவ்வை நடராஜனுக்கும், குழந்தை எழுத்தாளருக்கான விருது எஸ்.பூவை அமுதன், ஆங்கில நூலாசிரியருக்கான விருது எம்.ஆர்.வெங்கடேஷ், பதிப்பாளருக்கான விருது அன்னம் பதிப்பகம், விற்பனையாளருக்கான விருது கிரி ஏஜன்ஸி, நாவுக்கர் விருது மீனாட்சி சுந்தரம், ரவிச்சந்திரன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன. வாசகர்களை முடிந்தவரை திருப்திப்படுத்த, தென் இந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் கடந்த ஆண்டுகளை விட இம்முறை சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்ததை கண்டிப்பாக குறிப்பிட்டாக வேண்டும்.

**வாசகர்களை திருப்திப்படுத்த போதுமான சிறப்பு வசதிகள்** : புத்தக கண்காட்சியை நெருங்கியதும், வாசகர்களின் நீண்ட வரிசையைப் பார்த்து மனம் சலிக்காத வகையில், நுழைவுச்சீட்டுகளை தாமதமின்றி பெற்றுக்கொள்ள கணினி முறை பயன்படுத்தப்பட்டது. அமர்வதற்கு இடவசதி, நடந்து செல்ல முடியாதவர்கள் நுழைவாசலில் இருந்து புத்தக அரங்குகள் வரை வாகனத்தில் பயணிக்க ஏற்பாடுகள், மாற்றுத்திறனாளிகளுக்கு, சக்கர இருக்கை, அவசர சிகிச்சைக்கான ஊர்திகள், பணத்தேவைக்கு ஏடிஎம். வசதிகள், புத்தக காட்சி வளாகத்தில் உணவகங்கள், கைபேசி இலக்கங்களைக் கொடுத்தால் தினமும் அன்றாட நிகழ்ச்சிகள் ரீங்காரமிடும் ஏற்பாடுகள், கூடுதல் கழிப்பறைகள், 1500 கார்களை நிறுத்தக் கூடிய வகையில் விரிவான இடம் ஒன்று மட்டுமல்ல, புத்தகங்களை வாங்கி விட்டு இந்தச் சுமையுடன் கூட்ட நெரிசலில் எங்கு பஸ் பிடிப்பது, எப்படி வீடு போய்ச் சேர்வது என்று மூளையைக் குழப்பாமல் இருக்க, கண்காட்சி வளாகத்திலேயே ஆட்டோக்கள் தயாராக நின்றன.

**அலைமோதிய வாசகர் வெள்ளம் புத்தக காட்சி திக்குமுக்காடியது!** புத்தகத் திருவிழாவில், என்ன இருக்கிறது என்பதைவிட எந்த நூல் வேண்டும் எனும் கேள்வி எதிரொலிக்கும் வகையில் பதிப்பகங்களும் நூல்களும் நிரம்பி வழிந்தன. இவற்றின் எண்ணிக்கை, பிரமிக்கத்தக்கதாகவும், இந்த ஆண்டின், வாசகர்கள் தொகை பிரமாண்டமாகவும் விண்ணைத் தொட்டது. வாசகர்கள் வெள்ளம் அலைமோதியது. பதிப்பகங்கள், நூல்கள், வாசகர்கள் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்திருப்பதை அவதானிக்கும் போது, தமிழ் மொழியின் (பல்துறை) அசுர




வளர்ச்சியையும், அதன் அவசியத் தேவையையும் உணரக் கூடியதாக இருந்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அரங்கில்; இலக்கிய ஆர்வலர்களைச் சுண்டி இழுக்கும் சங்க இலக்கியம் என்று இவை சார்ந்த நூல்கள் தாராளமாகக் காணப்பட்டது. நானூறு தலைப்புகளில் 15,000 நூல்கள் அலங்கரித்திருந்த இந்த அரங்கில் ஈழத்து அறிஞர் தனிநாயகம் அடிகளார் எழுதிய 'தமிழ்த்தூது' நூல் மறுபதிப்பாக இடம் பெற்றிருந்தது.

ஆன்மீகம், மருத்துவம், யோகா, அறிவியல், மொழித்திறன், பொது அறிவு, விளையாட்டு, அரசியல், வரலாறு உள்பட பல தலைப்புகளில் புத்தகங்கள் மலை போல் குவிந்திருந்தன. இல்லை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. பிரமாதம்!

காலை வேளையில் வீட்டுக் கதவைத் தட்டி நல்ல சகுனம் அளிக்கும் தினசரி பத்திரிகை, நுனிப்புல் மேய்ந்து மேசை மீது தூக்கி வீசுவது! வாசிப்புத் தகுதி பெற்று விடாது. வாசிப்பையும் சுவாசிக்க வேண்டும். வாசிப்பு மீதான ஆர்வத்தை தன்னிச்சையாக உண்டாக்க வேண்டும். இந்த உணர்வு, புத்தக கண்காட்சிக்கு சென்றவர்களுக்கு நிச்சயம் ஏற்பட்டிருக்கும். "ஒரு படிப்பறையில் அல்லது நூலகத்தில் அல்லது இது போன்ற பிரமாண்ட புத்தகத் திருவிழாவில் இருக்கும் போது, அங்கு பரவிக் கிடக்கும் நூல்களைத் திறந்து பார்க்காமலேயே அவை எல்லாவற்றின் ஞானத்தையும் உங்கள் தோல் வழியே இனம்புரியாத ஒரு வகையில் உறிஞ்சிக்கொண்டிருப்பதாக நீங்கள் உணர்வீர்கள்" என்று ஒரு அறிஞர் தீர்க்கதரிசனம் கூறியது, கண்காட்சியில் நூல்களை மேய்ந்தபோது இதமாகத் தழுவியது. வாசிப்பு ஒரு ஈர்ப்பினை உண்டாக்கி, ஓர் மனிதனைப் பூரணத்துவமாக்கிறதென்றால், நமக்கெல்லாம் அது ஒரு ஊட்டச் சத்து என்று கொள்ளலாம். இது நமது தினசரி வாழ்க்கையின் அம்சமாக மாற வேண்டும். புத்தக கண்காட்சிக்குப் போனவர்களுக்கு நிச்சயம் இது ஒரு பாடமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

**லண்டன் பத்திரிகையாளர்:** "கடந்த பத்து ஆண்டுகளாக சென்னை புத்தக கண்காட்சியை மேய்ந்து வருகின்றேன். இவ்வருட ஏற்பாடுகள் பிரமிப்பை உண்டாக்கி விட்டது. நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில்தான் வாசகர்களுக்கு எத்தனை ஆர்வம்! மிகவும் பலனுள்ளதாக இருந்தது. அடுத்தடுத்து நானும் துணைவியார் ராகினியும் மூன்று நாட்கள் சென்று வந்தது பூரண திருப்தியைக் கொடுத்தது. எதிர்பார்த்த நூல்களும் சிரமமின்றிக் கிடைத்தது. இத்தேடலில், தூக்குக் கயிறு முத்தமிடத் துடிக்கும் தனது மகன் பேரறிவாளனின் கயிற்று முடிச்சுகளை அவிழ்க்க, ஓர் நிரபராதி தண்டிக்கப்படுவதைத் தடுக்க உறுதியுடன் போராடும் அந்தத் தாய் - அற்புதம்மாளை அவரது 'திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம்' அரங்கில் சந்தித்தது ஒரு ஆத்ம திருப்தியைக் கொடுத்தது. "மரண தண்டனை, ஒரு காட்டுமிராண்டித்தனம். ஒருங்கிணைந்து குரல் கொடுப்போம். எனது மகனும், ஏனையவர்களும் நிச்சயம் நிரபராதிகளாக, தூக்குக் கயிற்றை பிய்த்தெறிந்து வெளியே வருவார்கள்" என்று எங்களிடம் நம்பிக்கை தெரிவித்த அந்த அன்னை: "கடந்த இருபது ஆண்டுகளாக புத்தக காட்சிக்கு வருகின்றேன். என் மகன் பேரறிவாளன், சிறையிலிருந்து எழுதிய 'தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்' புத்தகத்தை அச்சிட்டு விற்க கடை கடையாக ஏறி, இறங்கிய போது ஏற்பட்ட மனக்கஷ்டம்; சொந்தமாக இந்த அரங்கை பணம் செலுத்தி எடுத்து மகன் நூல்களை மளமளவென்று விற்றது, எனது உடலை தென்றல் தழுவியது போல் இருக்கிறது" என்று எங்களிடம் மனம் விட்டுப் பேசியது உணர்வுகளைத் தூண்டியது. கரம் தொட்டு வணங்கினோம்" என்று, லண்டனிலிருந்து வந்து புத்தக கண்காட்சியின் அனுபவத்தை 'புதினம்' ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால் என்னிடம் தெரிவித்த போது அவர் கண்கள் பனித்திருந்தது.

குறைகள் எதுவும் உண்டா என்று கேட்ட போது; குறையொன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா என்று ராகம் இழுத்தார். "இம்மாதிரியான பிரமாண்ட கண்காட்சியை தரிசிக்க ஒரு மாதம் தேவை. நாம் தேடும் நூலைக் கண்டுபிடிக்க, வேறு புத்தகங்களைப் பார்க்க பன்னிரண்டு நாட்கள் போதாது. முன்னர், புத்தக கண்காட்சியின் பின்புறமாக பழைய புத்தகங்கள் விற்பனைக்கு இருக்கும். இம்முறை காணவில்லை. புத்தகக் குவியல்களில் சிக்கி, பல முக்கிய நூல்களின் முகங்கள் காணாமற் போவது தவிர்க்கப்பட வேண்டும். நூல்களை வாங்கினால் போதாது. வாசிக்கும் பழக்கத்தை நிரந்தரமாக்க வேண்டும்" என்று கருத்து வெளியிட்டார் லண்டன் ஈ.கே. ராஜகோபால். நன்றி ஞானம்...

ச. சிறீரங்கன்


# நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

# கண்ணீரில் நனைந்த கடிதம்!

பொது இடம், அலுவலகம், போக்குவரத்து, பொது நிகழ்வு என்று பல இடங்களில் பலரைச் சந்திக்கின்றோம். சிந்திக்கின்றோம். இவர்களில் மிகச் சிலரே எமது மனங்களில் இடம் பெறுகின்றனர். இவ்வாறு எனது குடும்பத்தோடு, குடும்பமாக ஒன்றிவிட்ட உங்களை எப்படி மறப்பது?

1987ல் அருள்தரும் ஆலயமாகிய உயர்வாசற் குன்ற முருகன் ஆலயத்தில் எமது முதற் சந்திப்பு. தமிழ் அனாதைகள் அறக்கட்டளைக்காக "டிக்கெட்" தந்தீர்கள். பின்னர் மேற்கு லண்டன் பாடசாலையில் பிள்ளைகள் சகிதம் சந்திப்பு. புதுமுகம் படிப்படியாக அறிமுகமாயிற்று. 1991ல் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளைக்காக உங்களுடன் இணைந்தோம். பிணைந்தோம். அம்மன் ஆலய அங்குரார்ப் பணத்துக்காக, உங்கள் வீட்டில் முதன்முதலாகக் கூடினோம். குலாவினோம். பின்னர் ஒரு முறை சென்னை காளிகாம்பாள் சாம்பசிவ சிவாச்சாரியாரை, உங்கள் இல்லத்தில் அறங்காவலர்கள் அனைவரையும் சந்திக்கச் செய்தீர்கள். சிவாச்சாரியார் கூறியது இன்னமும் எனது காதில் ஒலிக்கிறது.

"தெய்வேந்திரம் . . . துர்க்கை அம்மன் என்று சொல்கிறீர்கள். ஏதாவது பிழை நடப்பின் அறங்காவலர்கள் ஒன்பது பேருக்கும் அது கூடாது. துர்க்கையை சாந்தப் படுத்த, "கனகதுர்க்கா" என்று நாமம் வைப்போம். "கனகம்" என்றால் "பொன்". கனகதுர்க்கா என்றும் பொன்னும், மணியுமாகக் கொட்டுவாள். கனகதுர்க்கா என்ற பெயரில் விஜயவாடாவில் ஒரேயொரு கோயில் தான் உண்டு" என்று கூறிய




சிவாச்சாரியார் லலித சகஸ்டநாமக் கதையையும் கூறினார்.

உங்கள் பண்புகளாகிய அடக்கம், ஒழுக்கம் இவை இரண்டும் என்னை மிகவும் கவர்ந்தன. இன்னா செய்யாமை, நன்றி மறவாமை "மன்னிப்போம், மறப்போம்" என்ற மனப்பான்மை என்பன என்னை உங்கள் பால் ஈர்த்தன. இத்தகைய அரும்பெரும்பண்புகள் உங்கள் குடும்பத்தையும், எனது குடும்பத்தையும் சங்கமம் செய்தன. கால் நூற்றாண்டைக் கடந்துவிட்ட எமது உறவில் தான் எத்தனை நெருக்கம், எத்தனை அன்புப் பெருக்கம்? பலவிஷயங்கள் பற்றிப் பேசியிருக் கிறோம். விவாதம் செய்திருக் கிறோம். தர்க்கம் செய்திருக் கிறோம். ஆனால் குதர்க்கம் செய்ததில்லை. அன்புக்கூடலில், ஊடல் கூடக் கொண்டிருக்கிறோம். அந்த ஊடலானது எமக்கிடையே என்றும் பிரிவினையை ஏற்படுத்தியதேயில்லை. "மன்னிப்பவன் பெரியோனாகிறான்" என்பதை உங்களிடம் தான் நான் உணர்ந்திருக்கிறேன்.

ஒவ்வொரு "கிறிஸ்மஸ்" தினமன்றும் "Happy Birthday......" என்று அதிகாலையில் என்னை வாழ்த்தும் உங்களை இனி எங்கே பார்ப்போம்? உங்களை புரிந்தோர் பலர், புரியாதோர் மிகச் சிலர்... உங்களை தெரிந்தோர் பலர், தெரியாதோர் மிகச் சிலர்....

"சுனாமி" அழிவின் போது உங்கள் அனாதைகள் அறக்கட்டளையின் திருக்கோயில் இல்லத்தைக் கடல்காவு கொண்ட போது, நீங்கள் கலங்கித் தவித்தமையை நான் அறிவேன். உங்களுக்கேற்பட்ட சோதனை களையும், வேதனைகளையும் அவ்வப்போது என்னோடு நீங்கள் பகிர்ந்து கொண்டிருக்கிறீர்கள். இவை அத்தனையையும் வெற்றி கொண்ட உங்கள் சாதனையையும் நான் அறியாமல் இல்லை. எக்காரியத்தை நீங்கள் எடுத்தாலும் அதனைச் செவ்வனே முடிக்கும் திறனை உங்களிடமே கண்டேன்.




"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருக்குறளுக்கு இலக் கணமே நீங்கள்தான்!

உங்கள் மனைவி சகிதம் தை மாதம் முதலாம் திகதி, ஆங்கிலப் புத்தாண்டு தினங்களில் குளிரையும் பொருட்படுத்தாது விம்பிள்டன் ஆலய வாசலில் நின்று தாய்நாட்டு, அனாதைச் சிறார்கள் நல்வாழ்வுக்காக நாட்காட்டிகள் விற்று பணம் சேர்க்கும் அந்தத் தர்மப்பணியைக் கண்டு வியந்தோரில் அடியேனும் ஒருவன். சோடிப்பறவையாய், எங்கு சென்றாலும் உங்களை நிழல் போல் பின்தொடரும் உங்கள் அன்பு மனைவி வசந்தா அக்காவை தவிக்க விட்டு மட்டும் நீங்கள் பிரியவில்லை. உங்களுக்குப் பிரியமான எம் நாட்டு அனாதைகளையும், எங்களையும் விட்டுவிட்டே சென்றுள்ளீர்கள்.

கண்ணீரை மையாக்கி, எனது உள்ளப்பேனாவில் ஊற்றிஇக்கண்ணீர் கடிதத்தை எழுதுகிறேன். உங்கள் இறுதி அஞ்சலியில் கடல்போல் திரண்ட மக்களை நீங்கள் இறைவன் பாதத்திலிருந்து நோக்கி இருப்பீர்கள். இவ்வளவு பெருந்தொகை உறவுகள் உங்களை நேசித்தமைக்கு உங்கள் அறப்பணி, திருப்பணி இரண்டுமே காரணிகள் ஆகும்.

உங்களை சொர்க்கத்தில் தமிழ்நாட்டு காளிகாம்பாள் சாம்பசிவ சிவாச்சாரியார், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அமரர் அறங்காவலர் இராமச்சந்திரன் ஆகியோர் ஒருங்கே கூடி வரவேற்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. 2007ல் "வாழும் போது வாழ்த்துவோம்" என்று யான் உங்களை வாழ்த்தி "புதினம்" பத்திரிகையில் கட்டுரை வரைந்திருப்பது, எனது மனதிற்கு இதமாக இருக்கிறது. அண்மையில் நீங்கள் எனது வீடு தேடி வந்து அறங்காவல் சபைத்தலைவர் பொறுப்பை எடுத்துக் கொள்ளும்படி கேட்டும், அதனை மறுத்தமைக்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்...



# அகதிகளை விரட்டுகிறது பிரித்தானியா!

பிரித்தானியாவில் அகதிகள் ஒரு முற்றுகையில் இருப்பதாகவே தெரிகிறது. **Go Home Van** என்ற பெயருடைய விளம்பர வாகனங்கள் பல தொடர்ச்சியாக லண்டன் தெருக்களில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இது அகதிகளை அல்லது விசா இல்லாதவர்களை வந்து சரணடையுங்கள் என்று அழைக்கிறது. அப்படி இல்லாவிடில் நீங்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படுவீர்கள் என்று அச்சுறுத்துகிறது.

இங்கு லண்டனில் வோல்தம்ஸ்டோ,கென்சல் கிறீன்,ஸ்ரட்போட்,ஈஸ்ட் ஹாம் போன்ற பகுதிகளில் அதிகாலை 7 மணிக்கே சுரங்க ரயில் நிலையங்களை சுற்றி டசன் கணக்கான பிரிட்டிஸ் இமிக்கிறேசன் அதிகாரிகள் வந்து நிற்கிறார்கள்.




வெள்ளை நிறம் தவிர்த்த ஏனைய நிறமுடையவர்களை மறித்து விசா கேட்கிறார்கள். இங்கு வெளிநாட்டவர்கள், அகதிகள், மாணவர்கள் பொன்றவர்கள் விசா அட்டை ஒன்றை வைத்திருக்கவேண்டும் என்ற நடைமுறையை போடர் ஏஜன்ஸி அண்மையில் கொண்டு வந்தது. முதலில் எல்லா பிரித்தானியரும் அந்த அட்டை எடுக்க வேண்டும் என்று இருந்ததை பின்னர் ஐரோப்பியர் அல்லாத வெளிநாட்டுக்காரர் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஐரோப்பியர் அந்த அட்டையை ஏற்கனவே அவர்கள் நாடுகளில் வைத்திருக்கிறார்கள்.

மாணவர் விசா,வேலை விசா விண்ணப்பிக்கும் பொழுது இப்பொழுது அட்டையில் தான் விசாவை பதிவு செய்து வழங்குகிறார்கள். அதில் கண்விழி அடையாளம் கூட பதிந்து இருக்கிறது. அதனை அதிகாரிகள் இப்பொழுது சோதனை நேரம் அடையாள அட்டை போல கேட்கிறார்கள்.அந்த அட்டை இல்லாதவர்கள் விசாவில் குழறுபடி உள்ளவர்கள் என்று அவர்களை கைது செய்து தடுப்பு முகாமுக்கு அனுப்புகிறார்கள்.

`` இலங்கையில்தான் அடையாள அட்டையை சிங்கள ராணுவத்தினரிடம் காட்டி காட்டி நொந்து போனோம். இப்பொழுது லண்டனில் அடையாள அட்டை காட்ட வேண்டிய அவலம் வந்து விட்டது" என்று ஈழத் தமிழர் ஞானேந்திரன் என்னிடம் சொன்னார்.

கறுப்பு நிறமுடையவர்களை மறித்து விசா கேட்பது இப்பொழுது குடிவரவு குடியகல்வு அமைச்சுக்கு பெரும் சவாலாக மாறி இருக்கிறது. இது நிற வெறி சம்பந்தப்பட்டப பிரச்சனை என்று மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. வெள்ளை நிறமுடையவர்கள் விசா மோசடி செய்ய மாட்டார்களா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால் வெள்ளைக்காரர்களுக்கு விசா மோசடி செய்ய வேண்டிய தேவை இல்லை. ஈராக்கியர், இந்தியர், பங்களாதேசியர், ஆப்கானிஸ்தான்காரர், இலங்கையர், ஆபிரிக்கநாட்டவர்தான் விசா இல்லாமல் இங்கு பிரித்தானியாவில் தங்கி இருக்கின்றனர். எனவே அவர்களைத்தான் தாங்கள் சோதனை செய்ய வேண்டும். என்று இமிக்கிறேசன் அதிகாரிகள் சொல்கின்றனர்.

தினமும் இங்கே இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசில் இருந்து வரும் மாணவர்கள் விமான நிலைய இமிக்கிறேசனில் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

பொய்யான கல்லூரிகளை காட்டி விசா எடுத்தவர்கள் பிடிபடுகிறார்கள். நிறைய பணம் கொடுத்து பொய்யான கல்லூரிகள் பெயரில் விசா விண்ணப்பம் போட்டு இங்கு வந்து வேலை செய்யலாம் என்று வரும் இளைஞர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இங்கு இப்பொழுது மாணவர் விசாவில் வருபவர்கள் வேலை செய்யவே முடியாது. அவர்களுக்கு இன்சூரன்ஸ் நம்பர் கிடைக்க மாட்டாது. படிக்க என்று வருபவர்கள் முழுமையாக பணத்தை செலுத்தி படிக்க வேண்டும்.

அப்படி மாணவர் விசாவில் வந்து இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் களவாக வேலை செய்து பிடிபட்டால் வேலை கொடுத்தவர்களுக்கு ஒரு ஆளுக்கு இருபதாயிரம் பவுண்ட்டுகள் அபராதம் செலுத்த வேண்டும். இங்கு பிரித்தானியாவில் வரி கட்டாமல் வேலை செய்வது கிரிமினல் குற்றமாகும். அப்படி பிடிபட்டவர்களின் விசாக்கள் உடனடியாகவே ரத்து செய்யப்பட்டு அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள்.

இப்பொழுது ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து இங்கு கென்டயினரில் களவாக வருபவர்களை கண்காணிக்க என்று இமிக்கிறேசன் படை ஒன்று விசேடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்படை துறைமுகத்திற்கு வரும் அனைத்து கென்டயினர்களையும் முழுமையாக சோதனை செய்கிறது. சோதனை எவ்வளவு கடுமை என்றால் கென்டயினருக்குள் காபனீரொக்சைட் co2 இருக்கிறதா என்று மெசின் வைத்து சோதிக்கிறார்கள். காபனீரொக்சைட் இருந்தால் மனிதர் இருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம். அகதிகள் இங்கு வந்து பொருளாதாரத்தில் முன்னேறி விடலாம் என்று நினைக்க கூடாது என்று உள்துறை அமைச்சர் நேரடியாகவே சொல்கிறார்.

> அகதிகளாகப் பதிவு செய்வதற்கு இன்னொரு முறையையும் பிரித்தானியா சொல்கிறது. 'கே' அல்லது லெஸ்பியனாக இருப்பவர் தங்கள் நாடுகளில் வாழுவதற்கு முடியாமல் இன்னல் அனுபவித்தால், பகிரங்கமாக வாழ முடியாது போனால், இங்கு பிரித்தானியாவில் சரியான ஆதாரத்தைக் காண்பித்து அகதி அந்தஸ்த்துக்கு விண்ணப்பிக்கலாம். ஆதார பூர்வமாகத் தாங்கள் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று நிரூபிக்க வேண்டும்.

இப்பொழுது ஈழத்தமிழ் அகதிகள் லண்டன் தெருக்களில் நடமாடவே அச்சப்படுகின்றனர். எந்த நேரமும் கைது செய்யப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம்தான் அது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது ஈழத்தமிழர்கள்தான். தங்கள் அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் அபாயம் காணப்படுகிறது. அவர்கள் அங்கு திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் தங்கள் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்பதை இங்கு இமிக்கிறெசன் அதிகாரிகளிடம் நிரூபிக்க பெரும் பிரயத்தனப்படுகிறார்கள். அவ்வாறு உறுதியாக நிரூபிக்காவிட்டால் அவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுகிறார்கள்.

கொழும்பில் வைத்து கைது செயய்யப்படலாம் என்பதனை எவ்வாறு இங்குள்ள இமிகிறேசன் அதிகாரிகளுக்கு உறுதிப்படுத்துவது. அதனால் அவர்கள் அடைத்து வைக்கப்படுகிறார்கள்.

இங்கு ஈட்டன் ஹவுஸில் அகதிகளை உடனடியாக கொண்டு செல்வதற்கு வாகனங்கள் தயார் நிலையில் இருக்கின்றன.

"ஊரிலும் போய் வாழ முடியாது, இங்கும் கைது செய்கிறார்கள் என்ன செய்வது? ஓடுகின்ற ரயில் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளலாம் போல இருக்கிறது" என்று ஈழத்தமிழ் அகதி ஒருவர் விரக்தியாக என்னிடம் தெரிவித்தார்.

பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு போய் வந்ததன் பின்னர் அகதிகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் வரும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் மாற்றத்தை எதிர பார்க்க முடியாது என்று சொல்பவர்கள்தான் அதிகம். ஏனெனில் பிரித்தானியா தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அகதிகளை கட்டுப்படுத்துவதாக சொல்லியிருக்கிறது. அதுதான் நடைமுறையில் இருக்கும் கெடுபிடி என்று அரசியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

உண்மையான அகதிகளுக்கு பிரித்தானியா எப்பொழுதும் விசா வழங்கும் என்று குடிவரவு அமைச்சர் சொல்கிறார். பிரச்சனைகளை இங்குள்ள அதிகாரிகளுக்கு எழுத்து பூர்வமாக நிரூபிக்க படாத பாடு பட வேண்டி இருக்கிறது.

ஆனால் அகதிகளாக பதிவு செய்வதற்கு இன்னொரு முறையையும் பிரித்தானியா சொல்கிறது கே அல்லது லெஸ்பியனாக இருப்பவர்கள் தங்கள் நாடுகளில் வாழுவதற்கு முடியாமல் இன்னல் அனுபவித்தால் பகிரங்கமாக வாழ முடியாது போனால் இங்கு பிரித்தானியாவில் சரியான ஆதாரத்தை காண்பித்து அகதி அந்தஸ்த்துக்கு விண்ணப்பிக்கலாம். ஆதாரபூர்வமாக தாங்கள் ஓரினச்சேர்க்கையாளர்கள் என்று நிரூபிக்கவேண்டும்.

வெளிநாட்டில் இருந்து இங்கு வருகின்றவர்கள் மீது அதிகாரிகளின் கண் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நான் எனது வீட்டில் இருந்து லண்டன் சிட்டிக்கு போகும் போது ஆயிரக்கணக்கான கமெராக்கள் என்னை கண்காணிக்கின்றன என்பது எனக்கு தெரியும். ஆனால் அது ஒரு அகதிக்கு ரண வேதனை. ■



ப.வை. ஜெயபாலன்

சங்கதி - 4

# “மன அழுத்த தாக்கம்”

நான்கு ஆண்டுகள் முன்பாக, தெற்கு லண்டனில் நடந்த சங்கதி இது. ஊடகங்கள் மூலம் பரபரப்பான தமிழ் குடும்பச் சம்பவம். ஒரு இளம் தமிழ்த்தாய் தன் மூன்று குழந்தைகளையும் கொன்று விட்டு, தானும் தற்கொலைக்கு முயன்ற செய்திதான் அது. பள்ளி பராய மூத்தமகள் ஸ்தலத்திலேயே இறக்க அவசரமாக ஆம்புலன்ஸ் வண்டி ஏற்றிச் சென்ற பிள்ளை வழியிலேயே இறந்தது. வெட்டுக் காயங்களுடன் தப்பியது தாயும், கைக்குழந்தையும் தான். இரவு 9 மணியளவில் தான் இது நடந்தது. சமையல் அறையில் இருந்த கத்தியால் பிள்ளைகளை வெட்டிய தாய் தன் கையையும் வெட்டினாள். மன அழுத்த உந்தலில் இவற்றை செய்த அந்தத் தாய் உடனேயே ஓலமிட்டபடி தொலைபேசி மூலம் 999-ஐ அழுத்தினாள். அவள் பாஷை புரியாத நிலையிலும் பொலீசார் அழைப்பு வந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக விலாசத்தை அடையாளம் கண்டு பல திசைகளாலும் விரைந்து வந்தனர். போலீசாருக்கு தெரிவிக்க முயன்ற அவள் அடுத்து வர்த்தக நிலையத்தில் நின்ற கணவனுக்கும் அறிவித்தாள். கணவனும் வந்து புலம்ப வாகனங்களில் வந்த போலீசார் தம் கடமையை தொடர்ந்தனர். நீதிமன்ற தீர்ப்பின் படி சிறைப் பாதுகாப்போடு அந்தத் தாய் மன அழுத்தத்துக்கான சிகிச்சை பெறுகிறாள். தப்பிய குழந்தையும் சிறையில் பிரசவித்த குழந்தையும் தந்தையாரின் பொறுப்பில் உள்ளன.

தந்தை இப்பொழுது மறுமணம் செய்து குழந்தைகளோடு வாழ்கிறார். ஆக மொத்தத்தில் குடும்ப வாழ்வில் புறக்காரணிகளால் ஏற்பட்ட மன அழுத்தம் அவளது வாழ்வை நிர்மூலமாக்கி விட்டது. வீட்டில் நிலவிய வேலை சுமை, பிள்ளை ஒன்றை பெற்றதை தொடந்து ஏற்பட்ட பலவீன தளர்ச்சி, மற்றொரு பிள்ளையும் வயிற்றில் உருவாகி இருந்ததால் ஏற்பட்ட உடல்நிலை, ஊர், உறவு, உற்றாருடன் உறவாடி துயரங்களை பகிர, ஆறுதல் பெற முடியாத வகையில் அவளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அவர்களது சொந்த வர்த்தக நிலையத்தின் அருகே புதிதாக முளைத்த பெரும் சந்தையால் வியாபார சரிவு தந்த கடன் சுமை, வங்கி கடன் வட்டிகள் எல்லாமே உடல் பலவீனம் உற்றிருந்த அவளுக்கு மனச்சோர்வையும் தந்து இந்த நிலைக்கு தள்ளியதாக கூறப்படுகிறது.

இந்த நிகழ்வின் போது சம்பவம் நடந்த வீதி ஊடாக பயணித்த எனக்கு சிறு பிராயத்தில் ஊரில் எமது வீட்டு அயலில் நடந்த இன்னொரு சம்பவம் நினைவுக்கு வந்தது. வயதுக்கு வந்த நான்கு பெண் பிள்ளைகள், இரு ஆண்பிள்ளைகள், தாய், தந்தை என்று எண்மரை அடங்கிய குடும்பம் அது. கணவன் நிரந்தர வருமானம் தரும் தொழிலில் இருந்தார். ஆனாலும் கணவன், மனைவிக்கிடையே அடிக்கடி சண்டை. எல்லை வீட்டு உறவினரோடும் பங்கு கிணற்றுச் சண்டை. விடிந்தால் இரவு வரை தாயாரின் ஓயாத கத்தல், புலம்பல். இவற்றை சகிக்காத நாலு பெண் பிள்ளைகளும் தற்கொலை செய்ய முடிவு எடுத்தார்கள். ஒரு இரவு ஏழுமணி அளவில் மாரி மழைத் தண்ணீரில் நிரம்பி இருந்த எல்லை வீட்டு பங்குக் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்தார்கள். ஒரு பெண் மட்டும் காப்பாற்றப்பட்டாள். தொப், தொப் என கிணற்றில் விழுந்த சப்தம் கேட்ட வீட்டக்காரரின் முயற்சி தான் அந்தப் பெண்ணையேனும் காப்பாற்றியது. 15 முதல் 24 வயது வரையான அந்த மூன்று இளம் பெண்களின் ஈரம் சொட்டும் உடல்களும் பச்சை தென்னோலையில் வரிசையாக கிடத்தி வைக்கப்பட்டிருந்த காட்சி கூடிநின்ற நூற்றுக்கணக்கானவர் நெஞ்சங்களையும் பிழிந்தது. இத்தனைக்கும் தண்ணீரில் தம்பாவாடைகள் மிதக்கக் கூடாது என உணர்வுடன் சட்டை ஊசிகளால் பாவாடையை கால்களுடன் இறுக்கி கொண்டு தான் நால்வரும் கிணற்றுள் விழுந்தார்கள்.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை எம்மவர்களிடையே தொடரும் மன அழுத்தம் DEPRESSION என்ற வியாதியின் விளைவுகளே இவை. இந்த சம்பவங்கள் உதாரணங்கள் மட்டுமே. இது போன்ற மன அழுத்த உந்தலில் வாழ்வை பாழாக்கி கொண்டவர்கள் தொகை பல்லாயிரம்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் அமைதியான வாழ்க்கை ஓட்டம் நிலவிய காலக் கட்டத்தில் நடந்ததே இந்த தாயக தற்கொலைச் சம்பவம். “வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்” என்ற பாடல்காலம் அது. புலம் பெயர்ந்த வாழ்வில் எல்லாருக்கும் தங்குமிடம், வாழ்வுப்படி என்பன கிடைக்க வேண்டும் என்ற கொள்கையோடு உதவும் நாடுகளில் நாம் வாழும் காலத்தில் நடந்ததே, குழந்தைகளை கொன்ற தாயின் சம்பவம். “கையில காசு, கிளாஸ்சிலே ஸ்கொச்சு. . . . . வை தீஸ்கொலை வெறி கொலை வெறி டி என்ற பாடல்காலம் இது. ஆனாலும் காலகாலமாக “மனம் ஒரு குரங்கு, மனித மனம் ஒரு குரங்கு....” என்ற பாடல் வரி கருத்துக்களை கொண்டதாகவே எம்மவரின் வாழ்வோட்டம் தொடர்கிறது.

வீட்டில் நிலவிய அமைதி இன்மை, எதிர்காலம் பற்றிய ஏக்கம். இதனால் எழுந்த மன அழுத்தம் என்பன நான்கு சகோதரிகளையும் தற்கொலைக்கு தள்ளின. பிள்ளைகளை கொன்ற லண்டன் தாயின் விரக்தியும், மன கொந்தளிப்பின் வெளிப்பாடே ஆகும்.

எதிர்களாக முதலுக்கு கட்டிய பணத்துக்கான கடன் சுமையையும் முதுகில் ஏந்தியவாறு தான் நாம் பலரும் அகதிகளாக புலம் பெயர் நாடுகளுக்கு வந்தோம். இனி நாடுகள் தரும் வசதி வாய்ப்புகளையும் பயன்படுத்தி எப்படி விரைவில் வீடு, கடை, பிள்ளைகள் கல்வி உயர்வு என்று தேட்டங்களை அடையும் ஓயாத ஓட்டங்களே நாளாந்த, நடப்பாக இயங்குகின்றோம். கணவன், மனைவி இருவரும் உழைக்க வேண்டிய நிலை, பிள்ளைகளின் 11+ பரீட்சை, உயர் வகுப்பு பரீட்சை பல்கலை கழக தேர்வு நேரத்திய ஓட்டம் இவற்றுக்கான திறமையான ஆசிரியர்களிடம் பிரத்தியேக கல்வி பெற பிள்ளைகளை கொண்டு செல்லும் ஓட்டம் அதற்கென தாய்க்கும் தனி கார் வாகனம், அவற்றுக்கான வரி, காப்புறுதி, எரிபொருட் செலவு, கல்விக் கட்டணங்கள், எரிவாயு, வீட்டு வரி, மின்சாரம், வீட்டு வாடகை அல்லது கட்டுப் பணம், தரமான உணவு, உடை, தமிழ்ப் பள்ளி நோக்கிய சனிக்கிழமை ஓட்டங்கள் கலைப்பாட கட்டணங்கள் அவற்றுக்கான பிரத்தியேக வகுப்புகள், உறவினர், நண்பர்களின் திருமண பிறந்த நாள் மொய் செலவுகள் என இரவுபகலாக வாரம் முழுவதும் தாய் தந்தை பிள்ளைகள் என மொத்தக் குடும்பத்துக்கும் ஓயாத ஓட்டங்களே வாழ்க்கையாகி விட்டது. சலிப்பு. களைப்பு, மனச்சோர்வு விரக்தி இவற்றின் விளைவான மன அழுத்தம் என்பனவற்றுக்கு நுழைவுக்கான வாசல் கதவை நாமே திறந்து விடுகிறோம்.

கணவன், மனைவி இருவரும் ஆற அமர இருந்து சிந்தித்து செயற்படவே நேரம் இல்லாத வாழ்க்கை நிலைக்கு நம்மை நாமே தள்ளிவிட்டுள்ளோம்.

ஒன்றாக கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் சகோதரிகளும், பிள்ளைகளைக் கொன்று தானும் தற்கொலைக்கு முயன்ற தாயும் இன்னும் இன்னும் எதிர்காலங்களிலும் ஆண்டாண்டாக நம்மிடையே தோன்றத்தான் போகிறார்களா?

சிந்திப்போம். வாழ்வு முறையை மாற்றுவோம். ■

# கர்நாடக இசை மேதை

# மகாராஜபுரம் சந்தானம்

## ஞாபகம் வருதே!

**மேல்நாட்டு வைத்தியத் துறையில் வெற்றிகரமான வைத்திய நிபுணராக லண்டனில் அறியப்பட்ட டாக்டர் சீனிவாசகம் நவரத்தினம், இசையின் தீவிர ரசிகர். பல ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதங்களில் தமிழ்நாடு சென்று, அந்நாட்களில் சென்னை சபாக்களில் முன்னணிப் பாடகர்களின் கச்சேரிகளில் முன்வரிசையில் இருந்து தாளம் போட்டுக் கொண்டிருப்பார். இசையின் ஆழத்துக்குள் சென்று, முத்துக் குளிப்பவர். இந்த உலகத்தையே மறந்து விடுவார். தமிழகத்தின் பிரபல இசை விற்பன்னர்கள் பலரோடு நெருங்கிப் பழகிய நினைவுகளை 'புதினம்' இதழில் தொடர்ந்து மீட்கிறார்.**




மகாராஜபுரம் என்றால் முதலில் நினைவுக்கு வருவது சந்தானம் தான்.

கர்நாடக இசை உலகின் மேதை மகாராஜபுரம் சந்தானம் இசையில் நான் மயங்கித் திளைத்திருக்கிறேன்.

எவ்வளவு நேரமென்றாலும் கேட்டுக் கொண்டு இருக்கலாம். அலுப்போ சலிப்போ வரவே வராது. முதல்முதலாக அவரைப் பற்றிக் கேள்விப்பட்டது 1960களில் என்று நினைக்கிறேன். கொழும்பு வைத்தியக் கல்லூரியில் அப்போது நான் படித்துக் கொண்டிருந்தேன். அவர் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் இயங்கிக் கொண்டிருந்த இசைப் பிரிவுக்கு அதிபராக இருந்தார். எனக்குத் தெரிந்த சில பிள்ளைகள் பிரத்தியேகமாகவும் இசை கற்றுக்கொண்டு இருந்தனர். அப்பொழுது அவரது இசை ஞானத்தைப் பற்றி, கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது அவருக்கு 30 வயதைத் தாண்டி, ஒன்றிரண்டு கூட இருக்கலாம். சில காலப் பணிக்குப் பிறகு தாயகம் சென்று விட்டார்.

தமிழகத்தில், அவர் வளர்ச்சியைப் பற்றி அவ்வப்போது அறிந்து கொள்வேன்.

1980 ஆம் ஆண்டு, லண்டனில் ஆன்மீகப் பணி ஆற்றிக் கொண்டிருந்த மெய்கண்டான் ஆதீனம் சிவநந்தி அடிகள் ஞான சூரியன் அவர்களோடு சேர்ந்திருந்த டாக்டர்கள் ஆறுமுகம், சொர்ணலிங்கம், ரவீந்திரன் மற்றும் வாமதேவன் ஆகியோர் உட்பட நான் இணைந்து மகாராஜபுரம் சந்தானத்தை இங்கு அழைத்து, லண்டனில் நிதி உதவி நிகழ்ச்சியை நடத்தினோம். அவருடைய சங்கீத ஞானத்தை அந்தக் கச்சேரியில் பார்த்துக் கேட்டு மனதைப் பறி கொடுத்தேன் என்று கூடச் சொன்னால், அது பொருத்தமானதுதான். கச்சேரியின் பின்னர், அன்பாகப் பேசினார். அந்தப் பழக்கம் நட்பாக உருவெடுத்தது, உள்ளத்தில் அவரது இசை பதிந்தது போல, அவரும் ஆழ்மனதில் பதியத் தொடங்கினார்.



**தண்ணி சலசலத்து ஓடுவதுபோல, இயற்கையான குரல், ஒருவித இனிமையைத் தரும்.சில ராகங்கள் அவரது பெயரை இன்றும் சொல்லிக் கொண்டே இருக்கும்.**

இதன்பின்னர், 1988 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்.

லண்டன் HOLBORN நகரில் உள்ள CONWAY HALL இல் மகாராஜபுரம் சந்தானத்தின் இசைக் கச்சேரி நடந்தது. அப்பொழுது எல்லாம் இப்போதைய சினிமாப் பாடகர்களும், சூப்பர் சிங்கர்களும், டப்பாக் கூடத்துக்களும் நடப்பதில்லை. இசை என்றால் எப்போதாவது இப்படியான பெரிய சங்கீத ஜாம்பவான்கள் வருவார்கள். வருவார்கள் என்ன, அழைப்போம். பரதநாட்டியம் என்றால் பத்மா, யாமினி, சித்ரா போன்றவர்கள் தான். தரமான கலைஞர்களை ரசிக்கத் தரமான ரசிகர்கள் வருவார்கள்.

மகாராஜபுரம் சந்தானத்தின் HOLBORN நிகழ்ச்சிக்குப் புகழ் வாய்ந்த பக்க வாத்தியக் கலைஞர்கள் வந்திருந்தார்கள் இராமபத்திரன் - மிருதங்கம், தியாகராஜன் - வயலின். கச்சேரி பல நூறு ரசிகர்களையும் கவர்ந்தேவிட்டது. இதன்பின்னர்,

வீட்டுக்கு அவரை அழைத்திருந்தேன். தனது மனைவியுடன் வந்தார். லண்டனில் நல்ல சிந்தனையும் உதவும் மனப்பான்மையும் கொண்ட டாக்டர் அம்பிகாபதி அவர்களையும் என் வீட்டுக்கு அச்சமயத்தில் அழைத்தேன். அருமையான கச்சேரியைக் கேட்டுவிட்டு, அந்த மாபெரும் கலைஞனுடன் பேசிக்கொண்டே விருந்துண்டு மகிழ்வது மனதுக்கு இதமானது. இது என் அனுபவம். எனது மனைவி தர்மியின் சமையலைப் பாராட்டியபடியே ரசித்து உண்டார். பாரதி வித்தியபவனிலும் அவர் நிகழ்ச்சி நடந்தது.

1990ம் ஆண்டு. டாக்டர் அம்பிகாபதியின் மகள்களின் வீணை அரங்கேற்றத்துக்கு மகாராஜபுரம் சந்தானம் அழைக்கப்பட்டிருந்தார். என்னைப் போலவே கலைகளுடன் ஈடுபாடு கொண்டவர் டாக்டர் அம்பிகாபதி. இசை தெரிந்த கலைஞர் தமது பிள்ளைகளின் அரங்கேற்றத்துக்கு பிரதம விருந்தினராக வரவேண்டும் என்று விரும்பியிருந்தார். அதன்படியே நடந்தது. பிள்ளைகளும் நன்றாக வீணை வாசித்தார்கள். மகாராஜபுரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

லூஷியம் சிவன் கோயிலிலும் அவரது மற்றொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம்.

அரிதாக நடக்கிற நிகழ்ச்சி, நல்ல ரசிகர்கள் வருவார்கள்! இதன் பின்னர், சென்னைக்குப் போகிற சமயங்களில் எல்லாம், அவரது கச்சேரிகளில் கலந்துகொள்வேன். அவரது இசையைக் கேட்பதில் மிக ஆர்வமாக இருப்பேன்.

சென்னையிலுள்ள அவரது வீட்டுக்குப் போவேன். மிகுந்த உபசாரம் செய்வார். மனம் விட்டுப் பேசுவார்.

1989ம் ஆண்டு நினைவு ஒன்று இப்போது மனத்திரையில் ஓடுகிறது. 'மியூசிக் அகடமி'யில் அவருக்கு 'சங்கீதக் கலாநிதி' விருது வழங்கப்பட்டது. மிகப் பெரிய நிகழ்ச்சி. அழைப்பு அனுப்பப்படுகிற பிரமுகர்கள்தான் அந்நிகழ்ச்சிக்கு வருவார்கள். அந்நிகழ்ச்சியில் நானும் பங்கு கொண்டேன். அந்த விருது வழங்கும் நிகழ்ச்சியோடு மகாராஜபுரம் சந்தானத்தின் இசைக் கச்சேரியும் நடந்தது. நான்கு மணி நேரம் அவர் தொடர்ந்து பாடினார்.

தந்தையார் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரிடம் இசையைப் பயின்றவர் சந்தானம். விஸ்வநாத ஐயரே மியூசிக் அகடமி கௌரவித்த இசைக்கலைஞர்.

ராக ஆலாபனை செய்வது போன்ற விஷயங்களை முறையாகத் தந்தையாரிடம் பயின்றாலும், சந்தானத்திடம் உள்ள ஒர விசேஷம் என்னவென்றால், தனக்கென்றோர் தனிப்பாணி கொண்டவர்.

ராகத்தை முறை தவறாமல், இலகுவாகப் பாடுவார்.

தண்ணி சலசலத்து ஓடுவதுபோல, இயற்கையான குரல், ஒருவித இனிமையைத் தரும்.

சில ராகங்கள் அவரது பெயரை இன்றும் சொல்லிக்கொண்டே இருக்கும்.

ஓ ஷம்போ... ரேவதி - பஜன்;

மதுரா மதுரா;

உண்மையல்லால் - கல்யாணி

அவருடைய கச்சேரியைக் கேட்கிற போது, பக்தி வரும். அதுபோல, பணிவாகப் பேசுவார். உணவுப் பிரியர். தெரிந்து எடுத்துச் சாப்பிடுவார்.

1992 ஆம் ஆண்டு அவரது அகால மரணம்.

அவர் கச்சேரிக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிற போது, அவர் பயணம் செய்த கார் விபத்துக்கு உள்ளானது. மேதை ஒருவரின் மரணம் துக்ககரமாக நடந்தது என்னைப் போலப் பலரையும் பாதித்தது. சங்கீதம் இருக்கும் வரை அவர் புகழ் நிலைத்திருக்கும். சென்னையில் GRIFFITCH ROAD என்ற பெயர், மகாராஜபுரம் சந்தானம் சாலை என்று மாற்றப்பட்டு, அவர் புகழ்பாடுகிறது.

சந்தானத்தின் வாரிசு மகாராஜபுரம் ராமச்சந்திரன் இப்போது பாடுகிறார். முன்னர் தந்தையாரோடு சேர்ந்து பாடுவார். 2006 ஆம் ஆண்டு லூஷியம் சிவன் கோயில் ஆலய உற்சவத்தில் பாடினார். ஆனால், தகப்பன் பாணியில் தான் பாடுகிறார். தந்தையிடம் பயின்றாலும், தனக்கென்றோர் பாணியை வைத்திருந்தார் மகாராஜபுரம் சந்தானம். ஆனால், இவரது மகன் ராமச்சந்திரன் தந்தையின் பாணியில் பாடுவதால், அந்தளவுக்கு பெருமை கிடைக்குமோ என்பது சந்தேகம் தான்!

அ. சிவபாதசுந்தரம்



## க.பாலேந்திராவின் லண்டன் மேடையேற்றம்

# தமிழ் நாடக அரங்கிற்கும் அது ஒரு 'சூறாவளி'தான்!

வில்லியம் ஷேக்ஸ்பியர் உலகப் பிரசித்தி பெற்ற, இறவாத புகழ் பெற்ற, ஆங்கில நாடகாசிரியர் அவரால் கடைசியாக எழுதப்பட்டதாகக் கருதப்படுவது 'த ரெம்பெஸ்ற்' (The Tempest) என்னும் நாடகம்.

இந் நாடகத்தின் தமிழாக்கத்தை 'சூறாவளி' என்ற பெயரில் லண்டன் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் தமது 35வது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியான நாடக விழா 2013ல், லண்டனின் புறநகர் வாற்வோர்டில் (Watford) அமைந்துள்ள 'பம்ப் ஹவுஸ் தியேற்றர்' (Pump House Theatre) என அழைக்கப்படும் அரங்கில் கடந்த மாதம் மேடையேற்றினர்.

அன்று இரண்டு நாடகங்கள் அரங் கேற்றப்பட்டன. முதலாவதாக, இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்ட 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற நாடகம்.

ஒற்றுமையாகஒற்றுமை தரும் பாதுகாப்புடன் வாழ்ந்த மாடுகளைத் தம் பசி தீர்க்கக் கபளீகரம் செய்ய விரும்பிய ஓநாய்கள், அவர்களைப் பிரித்தாலன்றி தம் நோக்கத்தை அடைய முடியாது என்பதை உணர்கின்றன. ஒரு குள்ள நரியின் துணை கொண்டு அந்த மாடுகளிடையே அகங்கார வித்தைத் தூவி, அவைகள் வெவ்வேறு கோஷங்களை முன்னெடுக்கும் கோஷ்டிகளாகப் பிளவுபடுத்தியும் பிரித்தும் பலவீனமாக்கப்படுகின்றன. பின்னர் தம் பிழையை உணர்ந்த மாடுகள் மீண்டும் ஒற்றுமையாகிறார்கள். பலமாகிப் பகைவர்களின் சூழ்ச்சியை முறியடிக்கிறார்கள் என்பது இந்நாடகத்தின் கரு.

க. பாலேந்திராவின் நெறியாள்கையுடனும், அவரது மனைவி ஆனந்த ராணியின் உதவி நெறியாள்கையுடனும் தயாரிக்கப்பட்ட இந்த நாடகத்தில் கதாபாத்திரங்களாகப் பங்கேற்றியவர்கள், பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களும் சிறுமியர்களும். இவர்கள், சீராக நீல நிற அங்கிகள் அணிந்து பின்னணிப் பாடகர்கள் மா.சத்தியமூர்த்தி, விஜயகுமாரி பரமகுமரன், தர்சினி சிவசுதன், ஆனந்த ராணி பாலேந்திரா, கீ போர்ட்டில் இசை வழங்கிய துஷிதனு சகோதரிகள், தபேலாவில் கைவண்ணம் காட்டிய இளைஞன் ஜனன் சத்தியேந்திரன் ஆகியோர் அந்த நாடகத்தின் பலம்.

அடுத்ததாக மேடையேற்றப்பட்டது மேற் குறிப்பிட்ட வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'த ரெம்பெஸ்ற்' (The Tempest) என்னும் நாடகத்தின் இந்தியாவைச் சேர்ந்த பத்மஸ்ரீ பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி அவர்களின் தமிழாக்கம் 'சூறாவளி'.

ஷேக்ஸ்பியரின் ஆங்கில மூலத்தைத் திரையில் பார்த்திருக்கிறேன். மிகவும் சிக்கலானதும் கடினமானதுமான நிகழ்வுகளையும், பாத்திரங்களையும், காட்சிகளையும் கொண்ட இந்த ஆங்கில நாடகத்தை எப்படித் தமிழாக்கம் செய்திருப்பார்கள்? இந்த நாடகத்தை மேடையேற்றுவது மிகவும் கடினமான செயல். நாடக இயக்குனருக்கு ஒரு மிகப் பெரிய சவாலாக இருக்கும். அதனை எப்படி இயக்குனர் பாலேந்திரா எதிர்கொள்ளப் போகிறார்? அத்துடன், பாலேந்திரா தம்பதியினரால் நாடாத்தப்படும் நாடகப்பள்ளியில் பயின்ற சிறார்கள் நடிக்கிறார்கள். இதனை எப்படிச் சரிவரச் செய்யப் போகிறார்கள்? என்ற எண்ணங்களுடனும் ஆர்வத்துடனும் நாடகத்துக்குச் சென்ற எனக்கு ஆச்சரியமானதும் ஆனந்தமானதுமான அனுபவம் அங்கு கிடைத்தது.

முதலில் புரிந்தது, இந்த நாடகத்தின் கதையமைப்பும், உரையாடல்களும் ஆங்கிலத் திலிருந்து நேரடியாக வெறும் தமிழ்ப்படுத்துதல் முயற்சி அல்ல என்று.

அதனை இந்திரா பாரத்தசாரதி தனது தமிழாக்கத்தின் மூலமாகவும், க.பாலேந்திரா தனது நெறியாள்கை மூலமாகவும் தமிழில் அற்புதமாகச் சாதித்திருக்கிறார்கள். மேலாழ்ந்த வாரியாகப் பார்க்கும்போது சாதாரணமாகத் தோன்றும் ஒரு கதைக்கு, ஆழ்ந்த தத்து



வார்த்தங்களும், அரசியல் அர்த்தபுஷ்டிகளும் உண்டு என்பதை அந்த நாடகம் பார்த்தபோதுதான் புரிந்தது. நம்பிக்கைத் துரோகம், குடியேற்றம், மண் ஆக்கி ரமிப்பு, அடிமைப்படுத்தும் மனப்பான்மை, அதிகார மோகம், பழிக்குப் பழி, தோற்ற மயக்கங்கள், மன்னிப்பு, விடுதலை, போன்ற பலவேறு பரிமாணங்கள் அந்த நாடகத்தின் பேசுபொருட்கள்.

நாடகத்தின் பார்வையாளர்கள் அவற்றை உணர்ந்துகொள்ளும் வகையாக அந்நாடக உரையாடல்களும் அமைப்பும் நெறியாள்கையும் கச்சிதமாகக் கையாளப்பட்டிருந்தன. வெறும் தமிழ்ப்படுத்துதல் என்பதுடன் நின்றுவிடாது, ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் உள்ளதாகக் கருதப்படும் அன்றைய இன்றைய என்று எல்லாக் காலகட்டத்திற்கும் உரிய சர்வதேசத் தன்மையையும், பொதுத்தன்மையையும், உயர்ந்த நாடக உத்திகளுடன் 'சூறாவளி' வெளிக்கொணர்கின்றது; கண்வழி ஏகிக் கருத்தினில் படிகின்றது.

சிறார்கள் என்கிற பிராயத்தைச் சொற்ப ஆண்டுகளே தாண்டிய இளைஞர்கள்தான் இந்த நாடகத்தில் கதாபாத்திரங்களாக நடித்தவர்கள். ஆனாலும், அவர்களது ஒப்பனைகளும், முக்கியமாக சென்னையைச் சேர்ந்த ஆழி ஏழுமலை வெங்கடேசன் மூலம் கதாபாத்திரங்களின் குணாதியசங்களுக்கேற்ப பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட முகமூடிகளையும் அணிந்து அவர்களை பாலேந்திரா நடிக்க வைத்தமை, அந்த நாடகபாத்திரங்களை ஏற்றிருப்பவர்கள் வயது வந்தோரே என்ற எண்ணத்தையே தோற்றுவித்து கதை அம்சங்களுக்கு மெருகூட்டியன.

மேலும், கூத்து கலந்த நாடகப் பாணியாக அமைத்ததுடன், இயக்குனரின் இன்னுமோர் உத்தி:. உரையாடல்களை நாடகப்பாத்திரங்களே பேச வைக்காது, அவர்களுக்கு மேடையின் பின்னாலிருந்தவாறு குரல் கொடுப்பது. இதில் வேறொரு அனுகூலமும் இருந்தது. முகமூடி அணிந்து கொண்டு கதாபாத்திரங்கள் தமக்கான வசனங்களை ஒப்பிப்பதில் இருக்கும் கஷ்டமான காரியத்திலிருந்து அவர்களை விடுவிப்பது.

மேடையின் பின்புறமிருந்து கொடுக்கப்படும் குரல்களுக்கேற்ப உடலசைவுகளுடனும் அபிநயங்களோடும் நடிப்பதும், அதே போல் அவர்களின் அசைவுகளுக்கேற்ப ஒத்திசைவு பிசகாமல் வார்த்தைகளையும், குரல்களின் ஏற்றத் தாழ்வுகளையும் வழங்குவதும் மிகவும் கடினமான காரியம்.

ஆனால் அந்த நாடகபாத்திரங்களுக்குக் குரல்கள் கொடுத்த சோ. குமரகுரு, நியூட்டன் ஜெராட், ஆனந்தராணி மற்றும் பாலேந்திரா ஆகியோரும் சரி, மேடையில் நடித்தோரும் சரி, ஒருவருக்கொருவர் ஈடுகொடுத்து, எதுவித சோடையோ, தப்புகளோ, இடைவெளிகளோ இல்லாமல் தம் பங்கைச் செய்தமை, பார்வையாளர்கள் அனைவரும் ரசித்த ஒரு ஆனந்த அனுபவமாகும்.

நாடகத்துக்குள் ஒரு நாடகமாக, நிலமகள் ஒரு அபலைப் பெண்ணாகவும் அவள் மேல் மோகம் கொண்டு அவளை அழிக்க விழையும் ஆக்கிரமிப்பு அரக்கனிடமிருந்து ஒரு ஆபத்பாந்தவனால் அவள் காப்பாற்றப்படுவது போன்று உருவகமாகச் சித்தரிக்கப்பட்ட கூத்துப் பாணியில் நடன அசைவுகளுடன் காட்சிப்படுத்தப்பட்டநிகழ்வு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து.

சூறாவளியில் சிக்குண்ட கடலின் ஓசை, மின்னல், சுழன்றடிக்கும் புயலின் வீச்சு போன்றவைக்கான ஒலி, ஒளி அமைப்புகளும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப அளிக்கப்பட்ட



பின்னணி இசையும் நாடகத்துக்கு வலு சேர்த்தன.

சினிமாவில் பார்க்கும்போது சாதாரணமாக நான் கணித்த இக்கதைக்குள் இத்தனை சாமாச்சாரங்கள் உண்டு என்றும், அதனை இப்படியும் கலை உணர்வுடன் நாடகப்படுத்த முடியுமா என்றும் என்னை ஆச்சரியப்பட வைத்த நாடகம் லண்டன் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் மேடையேற்றி ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்கள் நடைபெறும் 'சூறாவளி'.

தமிழ் நாடக அரங்கிற்கும் அது ஒரு 'சூறாவளி'தான்! ஒரு குடும்பம்போல் கூட்டு முயற்சியாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் அனைத்துக் கலாரசிகர்களாலும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



சிறிய அரங்கம்; அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள்.சிறிய அரங்கிலும் நிச்சயமாக ஒரு பலாபலன் உண்டு. பார் வையாளர்களுக்கும் பங்கேற்பவர்களுக்கும் இடையே ஒரு அன்னியோன்னியமான, நெருங்கிய நிகழ்வாகவும் அமைவதற்கான வாய்ப்பை அது அளிக்கிறது.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினரும் அதன் ஆதாரசுருதிகளாக விளங்கிவரும் பாலேந்திராஆனநதராணி தம்பதியினரும் ஆர்வம் தளராது ஒரு வேள்வி போல் கடந்த 35 வருடங்களாக தரமான, புதிய மேடை உத்திகள் கொண்ட கருத்தான, நாடகங்களை அரங்கேற்றி வருகிறார்கள்.

சும்மா சொல்லவில்லை! தமிழ் அவைக் காற்று கலைக்கழகத்தினரால் மேடையேற்றப் படும் நாடகங்கள் சாதாரணமான நாடக வகை யறாக்கள் அல்ல. கருத்தாழங்களிலும், நாடக அம்சங்களிலும் சர்வதேச நாடகங்களுடன் ஒப்பிடக்கூடியவை.

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, சிங்கள மக்களிடையேயும், நாடகத் துறையில் தமிழர்கள் நாம் பின்தங்கி விடவில்லை எனப் பெருமையுடன் காட்டப்பட வேண்டிய மேடை நாடகம் 'சூறாவளி'!

தமிழர்கள் மத்தியில் ஒரு சாபக்கேடு!. சினிமா, அல்லது சினிமா சார்ந்த நிகழ்வுகள் என்றால் இடித்துத் தள்ளிக்கொண்டு பெரும் பணம் கொடுத்து, பல மைல்கள் சென்று பார்ப்பார்கள். அது தமிழகத் தமிழர்களை மட்டுந்தான் பீடித்திருக்கிறது என நினைத்தேன்.

துரதிருஷ்டவசமாக, அது ஈழத்தமிழர்களையும் பீடித்து விட்டது வேதனையளிக்கிறது!. மலர் என்ன மற்றவர்கள் நுகர்வார்கள் என்று எண்ணியா மலர்கிறது? தன் நறுமணத்தைப் பரப்புகிறது?

நறுமலர்களுக்கு என்ன நட்டம்? நுகராதவர் களுக்கல்லவா நட்டம்! ◆

சரோ சந்திரகோபால்

# MILTON KEYNES தமிழ் கல்விக் கழகம்

புலத்தமிழ்ப் பூங்காவின் முப்பதாவது இதழில், புத்தாண்டு வாழ்த்துக் கூறி, புன்னகைக்கும் புத்தம் புதிய மலர் MILTON KEYNES இல் அமைந்துள்ள Sprungfield எனுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது Milton Keynes Academy, Fulwoods Drive, Milton Keynes இல் நடைபெறும் Milton Keynes தமிழ் கல்விக் கழகம்.

அந்நிய மண்ணில் பிறந்து வளர்கின்ற தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காத பெற்றோர் இருக்கவே முடியாது. Milton Keynes இல் வாழும் தமிழ் பெற்றோர்கள் மனதிலும் தம் பிள்ளைகள் தாய்மொழிதெரிந்தவர்களாக வாழ வேண்டும் எனும் தாயக உணர்வு எழுந்ததின் எதிரொலியே Milton Keynes



தமிழ்க் கல்விக் கழகம்.

2011 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் ஒரு நாள், Milton Keynes இல் உள்ள "அமுதசுரபி" எனும் உணவகத்தில் ஒன்று கூடினர் பல தமிழ் அன்பர்கள். "தாய்மொழி வளர்ப்போம்" எனும் திடசங்கற்பத்துடன், தலைவர், செயலாளர், பொருளாளர் என ஒன்பது அங்கத்தவர் கூடிய நிர்வாகக் குழு ஒன்றினையும் அமைத்தனர். 03.12.2011ம் ஆண்டில் 70 மாணவ, மாணவிகளுடனும், 10 ஆசிரியப் பெருமக்களுடனும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதே தமிழ் கல்விக்கழகம். இக்கழகத்தின் தலைமை ஆசிரியர் திரு.முத்தையா சேனாதிராஜா அவர்கள்.

ஓராண்டு காலத்தில் மாணவர் தொகை 170 ஆகவும் ஆசிரியர் எண்ணிக்கை 24 ஆகவும் அதிகரித்துத் தற்பொழுது 260 மாணவர்கள் 33 ஆசிரியர்கள் எனப் பெருவளர்ச்சி கொண்டு, தமிழ் மணம் கமழ்கின்ற தமிழ்க் கல்விக் கழகம், நம் சிறார்களுக்குத் தாய் மொழியுடன், நமது கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களையும் தாயக உணர்வுடன் ஊட்டி வருகின்றது என்றால் மிகையாகாது.

காலை பத்து மணி முதல் மதியம் 12 மணி வரை தமிழ்மொழியும், 12 மணி முதல் 2 மணி வரை நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வீணை, சுரத்தட்டு ஆகிய நுண்கலைகளும் இங்கு கற்பிக்கப்படுகின்றன. பிரித்தானியக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வழிகாட்டலில், அதிபாலர் நிலை, பாலர் நிலை மற்றும் வளர்தமிழ் ஆண்டு ஒன்று முதல் பதினொன்று வரையிலான தாய்மொழி வகுப்புகள் இங்கு நடைபெறுகின்றன. அதிபாலர் நிலையில் பாலர் பாடல்கள், படங்கள் பார்த்துப் பேசுதல், எழுத்துருவங்கள் எழுதிப் பழகுதல் போன்ற இலகுவான முறைகளில் தாய்மொழி அறிமுகம் செய்யப்படுகின்றது. இக்கழக மாணவர் தம் தாய்மொழி மற்றும் நுண்கலைகட்கான அறிவு மதிப்பீடு பாடசாலை ரீதியில் அரையாண்டுத் தேர்விலும், பிரித்தானிய கல்வி மேம்பாட்டுப் பேரவை மூலம் ஆண்டுத் தேர்வு மூலமும் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு பயிலும் மாணவர்கள் நமது சமூகம் சம்பந்தப்பட்ட விழாக்கள், சமய சம்பிரதாய விளக்கங்களை அறிந்தவர்களாக வளர்க்கப்பட வேண்டும் எனும் சீரிய சிந்தனையில் தைப்பொங்கல், வாணி விழா மற்றும் நத்தார் பண்டிகை கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடத்தப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. தமிழர் தம் பெருமை கூறும் பொதுமறையாம்



திருக்குறள்தனை நம் மாணவர்கள் அறிந்து, உணர்ந்து வாழும் வகையில் திருக்குறள் மனனப் போட்டிகள் நடத்தப்பட்டு, மாணவர்கள் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகின்றது. அவ்வாறே தமிழ் எழுத்து, தமிழ் பேச்சுப் போட்டிகள் மூலம் தாய்மொழிப்புலமை புடமிடப்படுகின்றது.

இங்கு பயிலும் மாணவர்கள் தாய்மொழி அறிவோடு நல்லொழுக்கத் தினையும் கடைப்பிடிப்பதன் மூலம் இப்பாடசாலைக்கும், கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், தம்மை ஈன்ற பெற்றோருக்கும் பெருமை தேடித் தருவதனை உவகையுடன் விளக்கினார் தலைமை ஆசிரியர் திரு.சேனாதிராஜா அவர்கள். Milton Keynes தமிழ்க்கல்விக் கழக மாணவியான செல்வி.கௌசிகா பத்மநாதன், தனது ஆங்கில GL SE பாடங்களுடன் தமிழ்மொழியினையும் ஒரு பாடமாக எழுதி, திறமைச் சித்தி A* எடுத்துள்ளமை இக்கழகத்திற்குக் கிடைத்த பெருவெற்றி என்று பாராட்டிப் பேசினார் தலைமை ஆசிரியர் அவர்கள். 2012, 2013-ம் ஆண்டுகளில் இக்கழகம் நடத்திய மெய்வல்லுநர் போட்டிகள் Milton Keynes தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றமை பலரும் அறிந்த விஷயம். இக்கழகத்தின் ஆண்டுவிழாவின் போது, வகுப்பு ரீதியான தேர்வுகளில் முதன்மைப் புள்ளிகள் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படுவதோடு, ஆசிரியப் பெருமக்களும் கௌரவிக்கப்படுகின்றனர்.

இக்கழக யாப்புக்கொப்ப, நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்கள், 3 வருடத்திற்கொரு முறை வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும், கழக சார்பான வரவு, செலவுக் கணக்குகள் பெற்றோர் ஆசிரியர் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் முறையும் இங்கு நடைமுறையில் உள்ளது. தாய்மொழிப்பற்றுக் கொண்ட ஆசிரியப் பெருமக்களின் ஊக்கமும் வழிகாட்டலும் சிறார்கள் ஆர்வத்துடன் தாய்மொழி பயில ஏதுவாக இருப்பதனைத் தலைமை ஆசிரியரின் பேச்சு உறுதிப்படுத்தியது. நிர்வாகக் குழுவினரின் சுடிணையற்ற கடின உழைப்பும், தன்னலமற்ற சேவையும் பாடசாலையினை வெற்றிப் பாதையில் முன்னோக்கி நகர்த்தி வருவதனை ஆதாரங்களோடு கூறிய திரு.சேனாதிராஜா அவர்கள், தாய்மொழிப் பற்று, தாயக உணர்வு, தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனையோடு, ஒருங்கிணைந்து செயல்படும் பெற்றோர், ஆசிரியர்கள், நிர்வாகக்குழுவினர் போன்ற ஒவ்வொருவரும் 'தமிழ் கல்விக் கழகத்தின்' தூண்கள் என நன்றியுணர்வுடன் பாராட்டினார். Milton Keynes தமிழ்கல்விக் கழகத்தின் 'தனித்துவம்' பற்றிய வினாவிற்குத் தலைமை ஆசிரியர் பதில் இவ்வாறாக இருந்தது. "தமிழ்



கல்விக் கழகத்தின் நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் அனைவருமே, பெற்றோர்கள் ஆசிரியர்களது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே. நிர்வாகக் குழுவின் 9 அங்கத்தவர்களாலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர் தலைமை ஆசிரியர். இந்த வழியில் - பெற்றோர், ஆசிரியர், தலைமை ஆசிரியர், நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவருமே ஒருவரோடொருவர் தோள் கொடுத்து பரஸ்பர நன்மதிப்புடன் பாடசாலையின் நலன் கருதிச் செயல்படுகின்றனர்.

இப்புரிந்துணர்வே Milton Keynes தமிழ்க் கல்விக் கழகத்தின் வளர்ச்சிக்குக் காரணி. எம் கழகத்தின் தனித்துவம், தனிச்சிறப்பு அனைத்துமே இந்த ஒருங்கிணைப்புத்தான்". அருமையாக, ஆணித்தரமாகப் பதிலளித்த தலைமை ஆசிரியர் அவர்கள், நம் தமிழ்ச்சமூகத்தை நோக்கிய சிறு ஆதங்கத்தினையும் வெளிப்படையாகவே கூறினார். நம் பெற்றோர்களில் சிலர், இந்த நாட்டில் பிறந்து வளர்கின்ற எமது குழந்தைகள் தமிழ் படிப்பதால் என்ன பிரயோசனம்? என்ற கேள்வியினை எழுப்புகின்றனர். இன்னும் சிலர், தமிழ்ப்பாடசாலை சென்றுதான் நமது மொழி, கலை கலாச்சாரப் பண்பாடுகளைக் கற்க வேண்டுமா? என்று வினா எழுப்புகின்றார்கள்.

இந்தக் கேள்விகள் வேதனைக் குரியவை மட்டுமின்றி விவாதத்திற்கும் உட்படுத்தப்பட வேண்டியவை. ஒரு குழந்தை எந்த நாட்டில் பிறந்து வளர்ந்தாலும், தன் வரலாற்றினை பாரம்பரியத்தை உறுதிப்படுத்த நிச்சயமாகத் தாய்மொழி அறிவு அவசியம். அதே வேளையில் பிள்ளைகள் தமிழ்ப்பாடசாலைகளுக்குப் போவதன் மூலம் தம் தாய்மொழி அறிவினை விருத்தி செய்து கொள்வதோடு தமது பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களை இலகுவாக அறிந்து கொள்கின்ற வாய்ப்பும் ஏற்படுகின்றது. பாடசாலைகளில் நிகழும் கலை நிகழ்வுகள், நடனங்கள், பாடல்கள், கும்மி கோலாட்டம், நாடகம் போன்றவை எம் சமூகத்தின் பாரம்பரியங்களை சிறார்களுக்கு உணர்த்துவதோடு, அவர்களை நம் மொழியின் பால் ஈர்க்கின்ற ஒரு நல்ல செயலையும் நாம் அவதானிக்க முடிகின்றது. தமது பிள்ளைகள் ஆங்கிலத்துடன் ஏனைய பல மொழிகளையும் கற்க வேண்டுமென விரும்பும் தமிழ் பெற்றோர்களின் கவனத்திற்கு இந்த இரண்டு வினாக்களையும் விட்டு விடுவது பொருத்தமாக இருக்கும். Milton Keynes தமிழ்க் கல்விக் கழகம், தமிழ்ச் சிறார்கள் நலனுடன் மாத்திரம் நமது சேவையை நிறுத்தி விடாது. இன்னும்



ஒரு படி மேல் சென்று, தமிழ்ப் பெற்றோர் நலனிலும் அக்கறை காட்டி வருவது போற்றுதற்குரியது. பெற்றோர்களுக்கான ஆங்கில வகுப்புகள், இந்நாட்டு நடைமுறைச் சிக்கல்கள் பற்றிய அறிவு, அணுகுமுறைகள் போன்ற கருத்தரங்குகளும் இங்கு நடைமுறையிலுள்ளதை அறிய முடிகின்றது. குறுகிய கால எல்லைக்குள் தோன்றிய Milton Keynes தமிழ்க் கல்விக்கழகம், துரித கதியில் முன்னேறி, கூடிய எண்ணிக்கை கொண்ட மாணவர்கள், ஆசிரியர்களோடு வெற்றி நடைபோடுவது மட்டுமின்றித் தமிழ்ப்பெற்றோர் நலனிலும் அக்கறை காட்டுவது மெச்சத்தக்கது. இக்கழகம் பல ஆண்டுகளைத் தாண்டி, தமிழ் அன்னைக்கும், தமிழ் மொழிக்கும் சிறப்பான சேவை புரிந்து, வளமாக வளர நிறைவாக வாழ்த்தி நிற்கின்றது புலத்தமிழ்ப் பூங்காவின் 30வது இதழ் ●

## இலங்கைத் தமிழ் இளைஞருக்கு சார்ஜாவில் மரண தண்டனை!



ஐக்கிய அரபு இராச்சியத்தில் (சார்ஜா) இலங்கைத் தமிழர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கொலை செய்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டு, 25 வயதான ரவீந்திரன் கிருஷ்ணபிள்ளை என்பவருக்கே கடந்த 21.1.2014 காலை துப்பாக்கியால் சுட்டுக் குறித்த இளைஞருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய இராச்சிய பிரஜையுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ரவீந்திரன், அப்பிரஜையை வாகனத்தில் மோதிக் கொன்றதாக இலங்கையர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. நஷ்ட ஈடு வழங்கி தண்டனையைக் குறைத்துக்கொள்ள ரவீந்திரனின் குடும்பத்தினர் முயற்சித்த போதிலும், கொலையுண்டவரின் குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



## மகாஜனா பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

லண்டன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 9-2-2014 ஞாயிறு மாலை 4 மணி முதல் 10 மணி வரை

**BROADGREEN TAMIL COMMUNITY HALL,**
**(229, LONDON ROAD, CROYDON CRO 2 RL)**

மண்டபத்தில் நடைபெற உள்ளதாக சங்கத்தின் செயலாளர் வி. தவ முருகநாதன் அறிவித்துள்ளார். விபரங்கள் அறிய :

**0776 1666424**

## அடுத்த இதழில்
### வலி சுமந்த
## வன்னிக்கதைகள்

பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணன் எழுதும் "வலி சுமந்த வன்னிக் கதைகள்" அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.


## பெண் உதவியாளர் தேவை

வாரத்தில் இரு நாட்கள், மாலை 4 மணியிலிருந்து 4 மணி நேரத்துக்குப் பொறுப்பான பெண் உதவியாளர் தேவை. நியூமோல்டன் பகுதியைச் சேர்ந்தவராக இருப்பது நல்லது

**தொடர்பு: 07958408280**


## லண்டனில் செய்தியாளர் ஒன்றிய பொதுக் கூட்டம்

சர்வதேச தமிழ் தேசிய செய்தியாளர் ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டம் இலண்டனில் 08.02.2014 சனிக்கிழமை மாலை 3மணிக்கு நடைபெறுகிறது.

இடம்

**BROOK SIDE CLOSE HALL,**
**OFFEAST CODOTE LANE,**
**SOUTH HAROW HA1 9AW**



# வாசகர் கடிதம்

### ஈழத்தமிழர் நெஞ்சில் வாழ்பவர்கள்

தமிழகத்தின் கட்டுரைகள் நன்றாகவே இருக்கின்றன. ஜெயலலிதாவின் பச்சைத் துரோகத்தை படம்பிடித்துக் காட்டுவது போல, எழுத்துக்கள் அமைந்திருந்தன. 'முள்ளிவாய்க்கால் முற்றம்' வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னம். அதை அமைத்த பழ நெடுமாறன், மா. நடராசன் போன்றவர்கள் ஈழத்தமிழர் நெஞ்சில் வாழ்பவர்கள். எப்படித்தான் நன்றி சொல்வது என்று தெரியவில்லை.

**கு. ராமச்சந்திரன் HOUNSLOW**

### என்ன கொடுமை!

தமிழகத்து சினிமா எவ்வளவு தூரம் தாயகத்தில் நம் இளைஞர்கள் மத்தியில் ஊன்றியிருப்பதை அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவம் எடுத்துக்காட்டுகிறது. விஜயின் 'ஜில்லா' படத்துக்கு எழுதப்பட்ட விமர்சனத்தைக் கண்டித்து, ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்ற யாழ் இளைஞர்களின் மனோபாவம் மனதை நோகவைக்கிறது. எவ்வளவோ உயிர்களைக் கொடுத்து விட்டு ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற மண்ணில், இப்படி ஒரு ஆர்ப்பாட்டம் என்ன கொடுமை!

**த. சிவநாதன் EASTHAM**

### 'புதினம்' வரவில்லையா?

'புதினம்' ஜனவரி இதழ் ஏன் வரவில்லை? தேடித் தேடிக் களைத்து விட்டேன். மீண்டும் 'புதினம்' வராமல் விட்டு விடுமோ என்று கவலைப்பட்டேன்.

**கே. நவம் CROYDON**

### உண்மையான விஷயங்கள்

டாக்டர் ஸ்ரீதரன் எழுதுகிற 'என்ன உலகமடா!' 'புதினம்' நடக்கின்ற விஷயங்களை எப்படி எழுதுகிறார். அவர் எழுதுகின்ற விஷயங்கள் ஒவ்வொன்றும் உண்மையானவை. முதலில் 'புதினம்' இதழில் நான் படிப்பது அவருடைய விஷயங்களைத்தான்.

**ஆ. பொன்னுசாமி WATFORD**

### கண்களைக் குத்துகிறது!

உங்கள் பத்திரிகையில் படிக்கிறதற்கு சந்தோஷமாக இருக்கிறது. அத்தோடு கலர் கலராக பக்கங்களை அலங்கரிக்கிறீர்கள். அது சில சமயங்களில் கண்களைக் குத்துகிறது. ஆம், கண்பட்டு விடப்போகிறது. திருஷ்டி சுற்றி போடவேண்டும்.

**என். சோமசுந்தரம் NEWMALDEN**

### பிடிக்காத சங்கதி!

'புதினம்' பரவாயில்லை. ஆனால் பிடிக்காத ஒன்று - தமிழக சினிமா குப்பைகளுக்கு இரண்டு பக்கங்கள் போடுகிறீர்களே! வேறு விஷயங்கள் இல்லையா? அல்லது பத்திரிகைக்கு அது அவசியம் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் அதை நிறுத்த வேண்டும். அல்லது நாங்கள் வாசிப்பதை நிறுத்துவதா?

**எஸ். மனோகரன் TOOTING**

### எங்கேபோய் முடியுமோ?

'டண் டணாக்கா' பாடல்களுக்கு ஆடப்படும் குத்து நடனங்கள் பற்றி விமல் பக்கத்தில் படித்தேன். அருமையாக குறிப்பிட்டிருந்தார். அங்கு தமிழகத்தில் ஆடுகிறார்கள், செய்து விட்டுப் போகட்டும்! ஆனால், புலம் பெயர்ந்த லண்டனில் நமது இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் ஆடுகிறார்களே! பல்கலைக்கழகங்களில் படிக்கும் தமிழ் மாணவர்கள் என்ன ஆட்டம் போடுகிறார்கள். கலை நிகழ்ச்சிகள் என்றால் கூட இப்படியான குத்து நடனங்கள் நிறையவே இடம் பெறுகின்றன. 'எங்கே செல்லும் இந்தப் பாதை?' என்று வேதனையைக் கொட்டித்தீர்த்தார். இந்த நாட்டில் நம்மவர் நடத்துகிற இதே கூத்துக்கள் எங்கே போய் முடியுமோ?

**ஆர். செல்வச் சந்திரன் CATFORD**

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING


**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |







திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா







**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton — THISTLE HOTEL London Heathrow — Holiday Inn


உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற

தரம் மிகு இலங்கை மற்றும்

தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: **020 8799 7180**

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk


Lycamobile
Call the world for less
Call
Sri Lanka
5p/min
landlines & mobiles
when you buy
UK PLAN 500 UK MINUTES
+
UNLIMITED
• UK Texts • Lyca to Lyca Calls
+
1GB Data
Only
£10/30 days
To buy dial *139*11044#
or text 11044 to 3535
For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
top-up
PayPoint
epay
phones 4u
TESCO
Martin McColl
Sainsbury's
WHSmith
Carphone Warehouse
ASDA
Lycamobile UK Plan (the offer) inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Mobile internet allowance for the UK PLAN 5,7.50,10,12,20,30,40 includes 50MB, 500MB,1GB,3G,2GB,3GB,5GB respectively. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), or if it is being used for tethering. Promotional period, the offer is valid from 28.01.2014
Lyca mobile
Call the world for less